
KALKI
17.11.85
ரூ 1.50
கல்கி

ஸன்ரைஸ் ஊட்டும் புத்துணர்வையும் மணத்தையும் புதிய ஸன்ரைஸ் தம்ளரில் பருகிடுங்கள்!

இலவசம்

ஒவ்வொரு 200 கிராம் ரீஃபில் பேக்குடனும்.



தம்ளரின் அடியில் 'ஸன்ரைஸ்' பெயர் இருக்கிறதா என்று பாருங்கள்.

இப்பொழுது ஸன்ரைஸ் பளபளப்பான எவர் சில்வர் தம்ளர் ஒன்றைக்கொண்டுவருகிறது. இலவசம்! ஒவ்வொரு 200 கிராம் ரீஃபில் பேக்குடனும்.

அந்த மனம் கவரும் கமகமக்கும் வாசனைக்கும் புதிதாக வடிக்கட்டி வீட்டில் தயாரித்த காபியின் முழுச் சுவைக்கும் ஈடாக ஸன்ரைஸைப் போல் எதுவும் கிடையாது.

இப்பொழுது நீங்கள் அந்த அருஞ்சுவையை, நாளின் எந்த நேரத்திலும் உங்கள் ஸன்ரைஸ் தம்ளரில் ருசித்து மகிழலாம்.

Nestlé®

ஸன்ரைஸ்

இன்ஸ்டன்ட் காப்பி-சிகரி ப்ளெண்ட்

அந்த முதல் கோப்பையின் புத்துணர்ச்சிக்கு

FSL-8885 TAM

மாவீரன் நெடுமாறன் நேரில் கண்டறிந்த உண்மைகள்!

"ஈழத்தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகிறார்கள்!"

"விவசாயம் இல்லை, தொழில் இல்லை, மின்சாரம் இல்லை, டெலிபோன் இல்லை, பெட்ரோல்—டீசல் இல்லை, ஏன்? பணப்புழக்கமே இல்லை! ஒரு பயங்கரப் பஞ்ச நிலையைத் தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு உருவாக்க நினைக்கிறது சிங்கள அரசு!" என்கிறார் இலங்கைக்கு ஒரு துணிச்சலான ரகசியப் பயணம் மேற்கொண்டு வெற்றிகரமாகத் திரும்பியுள்ள நெடுமாறன்.

சேலத்தில் தமிழீழ ஆதரவாளர்கள் பேரணியில் கலந்து கொண்டு விட்டு நெடுமாறனும், பார்வார்டு பிளாக் தலைவர் அய்யண்ண அம்பலமும் சென்னைக்கு பஸ்ஸில் திரும்பியிருக்கிறார்கள். இது அக்டோபர் மாதம் எட்டாம் தேதி. ஒன்பதாம் தேதி முதல் நெடுமாறனைக் காணோம்! 'என்னடா இது, எங்கே போனார் இவர்? என்று மாநில ஸ்பெஷல் பிராஞ்சும் மத்திய உளவுத் துறையும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு தேடுகின்றனர்.

அக்டோபர் 28 ம் தேதி 'யாழ்ப்பாணத்தில் நெடுமாறன்' என்ற செய்தி சில பத்திரிகைகளில் வந்தவுடன் உளவுத் துறையினர் வியப்படைகின்றனர். மேலிடத்திலிருந்து டோஸ்கள். அதே சமயத்தில் ஈழத்திலும் அவரைக் கைப்பற்றக்கூடுதலான ராணுவ நடமாட்டம். அத்தனை பேர் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு, அக்டோபர் 29, வெள்ளிக்கிழமை இரவு நாகம் திரும்பினார் நெடுமாறன்.

"இவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொண்டு இப்போது இலங்கைக்குப் போக வேண்டிய அவசியம் என்ன?"

"1983 கலவரத்துக்குப் பிறகு பல இந்தியத் தலைவர்கள் அங்கு விஜயம் செய்தும் யாரும் தமிழ்ப் பகுதிக்குச் செல்லவில்லை. மேலும், தமிழர் பகுதிகளில், என்னதான் நடக்கிறது என்பதை நாங்கள் அறிந்திருந்தாலும், தமிழ்நாட்டிலுள்ள பொது மக்கள் அறிந்து கொள்ளவில்லை. ஆக அதை முழுவதும் தெரிந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கும், பின்னர் இந்தியா முழுமைக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன். இதை 'ரிஸ்க்' என்று சொன்னால் மிகவும் தேவையான, அவசியமான ரிஸ்க் என்றுதான் சொல்லுவேன்."

* அகதிகள் முகாமில்—முன்னதாக மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டு நடக்கிறார் நெடுமாறன்.





* துணைக்கு வந்த விடுதலைப்புலியுடன் — பாதுகாப்புக்காக உடன் வந்த இந்த விடுதலைப்புலி சிங்கள ராணுவத் தாக்குதலில் வீரமரணம் அடைந்து விட்டார்.

* அக்டோபர் 13, 14 தேதிகளில் வேலூரில் 'டெஸோ' பேரணி. கலைஞர் கின்னி வளவனிடத்தில் ''நெடுமாறன் எங்கே'' என்று விசாரிக்கிறார். ''பம்பாய்க்குச் சென்றிருக்கிறார்'' என்று பதில் வருகிறது. கிட்டத்தட்ட எல்லோருக்குமே 'நெடுமாறன் பம்பாய் சென்றிருக்கிறார்' என்ற செய்திதான் சொல்லப்பட்டது.
* ஒரே ஒரு ஜோல்னா பையைத்தான் எடுத்துச் சென்றிருந்தார். இரண்டு லுங்கி, இரண்டு பனியன், இரண்டு சட்டை, இரண்டு பேண்ட் இவைகளுடன் குறிப்பெடுப்பதற்காகச் சின்ன நோட்டுப் புத்தகங்கள்.
* நெடுமாறன் இலங்கைக்குச் சென்றது விடுதலைப் புலிகளைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. (குடும்பத்தினர் உட்பட)



* ''சோகத்தைச் சொல்லி மாளாது தம்பி!'' என்கிறாரோ இந்த மூதாட்டி?

''தமிழ்ப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது?''

''அந்த வேதனைகளை ஏன் கேட்கிறீர்கள்? ஒரு பயங்கரமான பஞ்ச நிலைமை உருவாக்க நினைக்கிறது சிங்கள அரசு. மின்சாரம் கிடையாது; டெலிபோன் கட்; பெட்ரோல், டீஸல் சப்ளை கிடையாது. யாழ்ப்பாணம் நகரத்தில் பகலில்தான் மக்கள் நடமாடுகிறார்கள். ஆறு மணிக்கு மேல் தெருக்கள் வெறிச். கிராமப் பகுதிகளில் நிலைமை கேட்கவே வேண்டாம். இளைஞர்களும், யுவதிகளும், பகலில் வீட்டிலேயே இருப்பதில்லை. இரவில் மக்கள் காடுகளில் சென்று தங்குகிறார்கள். சிவில் நிர்வாகம் சுத்தமாக இல்லை. இதனால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதில்லை. பணப் புழக்கம் கிடையாது. காரணம், பாங்குகள் இயங்காதது மட்டுமல்ல; அங்கு யாரும் செல்லப் பயப்படுவதும்தான். ராணுவ கேம்புகளில் மட்டும் 'எக்ஸ்டென்ஷன் கவுண்டர்' போல் வைத்திருக்கிறார்கள். வளர்ச்சித் திட்டங்கள்

* யாழ்ப்பாணத்தில் டாக்டர்கள், பேராசிரியர்கள், என்று படித்த வர்க்கத்தைச் சந்தித்தபோது, பத்திரிகையாளர்களையும் சந்தித்தார். பேட்டி என்று இல்லாமல், சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தபோது, 'Saturday review' என்ற பத்திரிகையின் ஆசிரியர், அன்று வெளியான தம் பத்திரிகையில் ஸ்கூப் செய்தியாக நெடுமாறனின் விஜயத்தை வெளியிட்டுவிட்டார். இதன் மூலம்தான் நெடுமாறன் விஜயம் உலகத்துக்குத் தெரிந்தது. இல்லையேல், நெடுமாறன் தாயகம் திரும்பிய பின்னர்தான் தெரிந்திருக்கும்!

* தமிழர் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தபோது நெடுமாறன் சின்ன நோட்டுகளில் குறிப்பெடுத்துக் கொண்டார். 12 சின்ன நோட்டுக்களில் குறிப்புகள் இருக்கின்றன.

* தரை மார்க்கத்தில் 1200 மைல், கடல் மார்க்கத்தில் 300 மைல் பயணம் செய்தார். தரையில் பயணம் செய்யும்போது, கார்வேன், மோட்டார் சைக்கிள் என்று பல்வேறு வாகனங்கள். கடலில் மன்னார் மாவட்டத்திலிருந்து திரிகோணமலை மாவட்டம் வரை அதுவும் கடற்கரை ஓரமாக ஆழமில்லாத கடலில். அந்தக் கரையோரப் பகுதி ஆழமில்லாமல் இருந்ததால், சிங்களக் கப்பல் படையின் நவீன படகுகள் அங்கு ரோந்து சுற்ற வருவதில்லை.

* இது திட்டமிட்டுச் செய்த ரகசியமான பயணம். கிளம்புவதற்குச் சில நாட்களுக்கு முன்னதாகவே தாடி வளர்க்க ஆரம்பித்தாராம். யாரும் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை!


* திரும்பி வந்தவுடன் மனைவி குழந்தைகளுடன் பழநி கோயிலுக்குச் சென்று விசேஷ அர்ச்சனை செய்துவிட்டு வந்தார், 'மாவீரன்' நெடுமாறன்!

எதுவுமே தமிழர் பகுதிகளில் கிடையாது. தொழிற்சாலைகளும் தமிழர் பகுதிகளில் இல்லை. யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அதுவும் ராணுவக் காவலுடன், சிங்களத் தொழிலாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. எந்தச் சமயத்தில் ராணுவம் வருமோ, துவம்சம் பண்ணுமோ என்று மக்கள் பயந்து கொண்டு இருக்கிறார்கள்!"

"தமிழர்கள் வாழும் பகுதிகளில் பொருளாதார நிலை எப்படி?"

"தமிழர்களின் தொழில்கள் விவசாயமும் மீன்பிடித்தலும்தான். இந்த இரண்டு தொழில்களுக்குமே இப்போது ஆபத்து ஏற்பட்டுவிட்டது! கடலில், சிங்களர் கப்பல் படைத் தொந்தரவால் யாரும் மீன் பிடிக்கப் போவதில்லை. விவசாயம் செய்யலாமென்றால், பயிர் வைத்து வளர்வதற்குள் ராணுவத்தினர் வந்து நாசம் செய்து விட்டுப் போகின்றனர்!

* வெறிச்சோடிக் கிடக்கும் கிராமத்தில்.



* மக்களோடு பேசிக் கொண்டிருக்கும் போது — மத்தியில் தொப்பி அணிந்து நிற்பவர் — நெடுமாறன்.



பூச்சி மருந்து, உரம் சப்ளை கிடையாது. மேலும் குளங்கள், ஏரிகள் ஆகியவைகளின் கரைகளை ராணுவம் உடைத்துவிட்டதால், தண்ணீர் சுத்தமாக அவுட். வவுனியா மாவட்டத்தில் ஒதிய மலை என்னும் கிராமத்தை நான் பார்த்தேன். திடீரென்று அங்கு நுழைந்த ராணுவம், முப்பது பேர்களைக் கொன்றது மட்டுமல்லாமல், அவர்கள் வீட்டிலிருந்த பொருள்களையும் அங்குள்ள சித்தி விநாயகர் கோயிலிலுள்ள தங்க ஆபரணங்களையும் தூக்கிக் கொண்டு போய்விட்டது. மக்கள் பயந்து கொண்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்று விட்டார்கள். பின்னர், காட்டிலிருந்து யானைகள் வந்து அந்தக் கிராமத்தில் மிச்சம் மீதியிருந்த செடி கொடிகளையும் நாசமாக்கி விடுகளைத் தரைமட்டமாக்கிவிட்டுச் சென்றிருந்தன.

"ராணுவத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மாவட்டங்களில் உள்ளவர்கள், யாழ்ப்பாணம் வந்து அகதிகளாய்ச் சேர்கிறார்கள். இவ்வாறு யாழ்ப்பாணம் நோக்கித் தமிழர்கள் வருவதை ராணுவம் தடுத்து நிறுத்துவதில்லை. தமிழர் காலி செய்த பகுதிகளிலெல்லாம் உடனடியாகச் சிங்களர்கள் குடியேற்றப்படுகிறார்கள். இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் விமானம் மூலம் யாழ் நகரம் தாக்கப்படும் என்று பலமான வதந்தி உலாவிக் கொண்டிருக்கிறது. இது நடந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!"

"விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன?"

"அங்குள்ள பெரும்பாலான ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டு இருப்பதால் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சின்னச் சின்ன நோய்களுக்கு வைத்தியம் செய்வது எப்படி என்றும் முதல் உதவி செய்வது எப்படி என்றும் விடுதலைப் புலிகள் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். பெண்களுக்குக் கைத்தொழில்களைக் கற்றுத் தருகிறார்கள். சுதேசிப் பொருட்களையே உபயோகிக்கத் தீவிர இயக்கம் நடத்துகிறார்கள். ராணுவம் தாக்கினால் எப்படி தற்காத்துக் கொள்வது, குழந்தைகளுடன் பெண்கள் எவ்வாறு தப்பி ஓடுவது என்றெல்லாம் கற்றுத் தருகிறார்கள். நியாய விலைக் கடைகளை கிராமம் தோறும் ஆரம்பித்து, ஐந்து சதவீதம் லாபம் மட்டுமே வைத்துப் பொருட்களை விற்பனை செய்து வருகிறார்கள். மக்களின் ஒத்துழைப்பு முழுமையாக இருக்கிறது. ஆனால் பணப் புழக்கம் 90 சதவீதம் குறைந்து போய்விட்ட நிலையில், பண்டமாற்று வியாபாரமே நடைபெறுகிறது. இங்கு வேதனையான விஷயம் ஒன்றினை நான் குறிப்பிட்டாக வேண்டும். வெங்காயம், உருளைக் கிழங்கு, பச்சை மிளகாய், கருவாடு போன்றவற்றைச் சிங்களவர்கள் தமிழர் பகுதிகளிலிருந்துதான் பெற்று வந்தார்கள். இப்போது விவசாயம், மீன் பிடித்தல் ஆகிய இரு தொழில்களையும் நடத்த முடியாத நிலையில் மேற்கண்ட பொருட்கள் சிங்களவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் இறக்குமதி செய்து கொள்கிறார்கள். எங்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் "ராஜா வேத காவ்ய பாடசாலை"யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்துவருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஸமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

விபரங்களுக்கு:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
கும்பகோணம்

அடுத்த இதழில்...

மனிதாபிமானமே இவர் மதம்!

மணிவிழாக் காணும் மாமணி ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் மனிதாபிமான சாதனைகளை நேரில் பார்த்தும் கல்கி வாசகர்களுக்கு அவரது அருளாசிகளையும், அருளுரைகளையும் நேரில் பெற்றும் திரும்பியுள்ள கல்கி ஆசிரியரின் சிறப்புக் கட்டுரை.



இருந்து தெரியுமா? தமிழகத்தில் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்துதான் அந்தப் பொருட்கள் இலங்கைக்குச் செல்கின்றன!''

''போர் நிறுத்தம் என்று சொல்கிறார்களே, உண்மையிலேயே அமுல் படுத்தப் படுகிறதா?''

''போர் நிறுத்தம் சுத்தக் கண்துடைப்பு. கண்காணிப்புக் கமிட்டியில் 11 பேர் இருக்கிறார்கள். இதில் 6 பேர் சிங்களவர்கள். 2 பேர் முஸ்லீம்கள். 3 பேர் தமிழர்கள். இந்த 3 பேர்களில் ஒருவர் சிங்கள ஆதரவாளர்! தமிழர் கிராமங்களில் ராணுவம் நடத்தும் அக்கிரமங்களைச் சொன்னால், கண்காணிப்புக் குழு கண்டு கொள்வதில்லை. விடுதலைப் புலிகள் ராணுவத்தைத் தாக்கினால் மட்டும்தான் கண்காணிப்புக் குழு சென்று பார்க்க வேண்டுமாம். ஆனால் ராணுவம் விடுதலைப் புலிகளைத் தாக்கினாலோ அல்லது அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றாலோ யாரும் கேட்கக் கூடாதாம்! அது 'சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும்' விஷயமாம்! என்ன கேலிக் கூத்து இது! ராணுவம் கேம்ப் கேம்பாகச் சென்று அப்பாவி மக்களை குறிப்பாக இளைஞர்களை— சுட்டுக் கொன்று வருகிறது. இந்தப் போர் நிறுத்த ஏற்பாடு ஒழுங்காக நடக்க வேண்டுமென்றால் சர்வதேசப் 'படையொன்று அமைதி காக்க இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் சிங்கள ராணுவத்தின் அத்து மீறல்கள் நிறுத்தப்படும். இப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றால் சிங்கள ராணுவம் நம் பின்னோடு வருகிறது. இந்நிலையில் உண்மை நிலவரங்களைப் பார்வையாளர்கள் எவ்வாறு உணர முடியும்?''

''இஸ்ரேலின் 'மொசாத்' படை இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சி கொடுப்பதாகச் சொல்கிறார்களே?''


''இது உண்மைதான். பாதிக்கப்பட்ட கிராமங்களில் மிச்சம் மீதி இருந்த மக்களை நான் பார்த்தபோது, சிங்கள ராணுவத்துடன் சில வெள்ளைக்காரர்களும் (இஸ்ரேலியர்கள்) வந்ததாகச் சொன்னார்கள். மக்களைப் பீதியுறச் செய்து, பெண்களை மானபங்கப் படுத்தி ஊரை விட்டே ஓடச் செய்யும் திட்டத்தை மொசாத் உதவியுடன் இலங்கை ராணுவம் நன்கு செயல்படுத்தி வருகிறது.''

''கடைசியாக ஒரு கேள்வி. நீங்கள் இலங்கை சென்று வந்தது, தமிழீழ மக்களின் பால் உங்களுக்குள்ள சகோதர பாசத்தைத் தெளிவாக விளக்குகிறது என்றாலும், ஒரு இந்தியக் குடிமகன் என்ற முறையில் நீங்கள் பாஸ்போர்ட், விசா இல்லாமல் சென்றது சட்டப்படி குற்றம்தானே?''

இந்தக் கேள்விக்கு நெடுமாறன் புன் சிரிப்பைப் பதிலாகத் தந்து அமைதியாக இருந்தார். கேள்வியை மீண்டும் வற்புறுத்திக் கேட்டதும் தொடர்ந்தார்:

''கோவா மக்கள் போர்த்துக்கீசிய ராணுவத்திடமிருந்து (ஆட்சி) விடுதலை பெற வேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருந்த போது ராம் மனோகர் லோகியா ரகசியமாகக் கோவாவுக்குச் சென்று நிலைமையைத் தெரிந்து கொண்டு வந்து, நேருவிடம் விவரமாகச் சொன்ன பிறகுதான், இந்தியா கோவா மேல் படையெடுத்தது. நான் எனக்கிருக்கும், இன உணர்வு காரணமாக உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற மனசாட்சியின் உந்துதலால் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன். சட்டப்படி இது தவறு என்றால் அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, எடுக்கட்டும். நான் கவலைப்படப் போவதில்லை.

பேட்டி: **ப்ரியன்**


உச்ச
நீதி மன்றம்
கண்டனம்
'மோதிரக்
கையால்
குட்டு!


எப்படி என்
அனுமதி
இல்லாமெ
கள்ளத்
தனமா
போட்டோ
எடுக்கலாம்?


அரிசி
இருப்பு
20 கிலோ
ரேஷன்
அரிசி
12 கிலோ
வாகக்
குறைப்பு



கல்கி

1985 நவம்பர் 17

மலர் 44 இதழ் 16 குரோதன கார்த்திகை 2



நெடுமாறனை அழைத்துப் பேசுங்கள்!

நெடுமாறனின் ரகசிய துணிகரப் பயணம் ஒரு தனிமனிதனின் சாகசம் என்ற அளவில் மெய்சிலிர்ப்பை ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, ஈழத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நேரில் கண்டு கொண்டு பார்த்த, முற்றிலும் நம்புதற்குரிய சாட்சியாக அவர் இன்று விளங்குகிறார். 'சட்டத்தை மீறினார், கள்ளத் தோணி ஏறினார்' என்று அவர் மீது குற்றம் சாட்டி கேவலப்படுத்துவதற்குப் பதில் அவர் நேருக்கு நேர் கண்டறிந்த உண்மைகளை அறிந்து கொள்வதில் மத்திய அரசு ஆர்வம் காட்ட வேண்டும். பிரதமரும் அவர் சார்பில் பேச்சு வார்த்தைகள் நடத்துகிற பண்டாரியும் நெடுமாறனை அழைத்துப் பேச வேண்டும். தெரிய வரும் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பனவாக இருக்கலாம். ஆனால் பிடிக்காத விஷயங்கள் என்பதற்காக உண்மைகளை ஒதுக்கி விட முடியாது; கூடாது.

அரும்பாடுபட்டு பல காலம் பேச்சு வார்த்தை நடத்தி உருவான போர் நிறுத்த ஒப்பந்தம் சரியாக அமுலாகவில்லை. அடிக்கடி மீறப்பட்டு வருகிறது. இதற்கு இருதரப்பினருமே ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர். முக்கியமான குறைபாடு, போர் நிறுத்த மேற்பார்வைக் குழு போதிய அதிகாரங்களும் வசதிகளும் பெறாததுதான். அதிகாரமும் வசதிகளும் அதிகாரத்தைச் செயல்படுத்தப் பக்க பலமும் இல்லாமல் இந்தக் குழு போர் நிறுத்தத்தை எப்படி நிலைநாட்ட முடியும்? வெறும் பார்வையாளராக இருந்து அத்து மீறல்களைப் பட்டியலிடுவது கூட முழுமையாகச் சாத்தியமாகாது. தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து ராணுவத்தை வாபஸ் பெறுவதும் இன்றியமையாதது. இவற்றைச் செய்யாத வரையில் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்ட இலங்கை அரசு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியதோ என்ற சந்தேகம் எழவே செய்யும். ராணுவத்தினரின் அக்கிரமச் செயல்கள் தொடரும்.


போர் நிறுத்த ஒப்பந்தம் சரியாக அமுலாகவில்லை என்பது உண்மையானாலும் அது ஒன்றே நிரந்தர அமைதி காண்பதற்கான முதல் படி. எனவே இதனைக் கைவிடாதிருப்பதோடு அமுல்படுத்துவதில் உள்ள முட்டுக் கட்டைகளை நீக்க இரு தரப்பினரும் தீவிரமாக முயல வேண்டும்.

ஈழப் போராளிகள் எப்படியாவது இந்திய அரசை பங்களா தேசத்தை விடுவித்தது போன்று ஈழத்தின் மீதும் படையெடுக்கச் செய்துவிடலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இது பகற் கனவு. தனி சுதந்திரத் தமிழ் ஈழ நாடு என்பது தனக்குச் சம்மதமில்லை என்று இந்திய அரசு பலமுறை பகிரங்கமாகக் கூறியாகிவிட்டது. இனி அந்நிலையிலிருந்து அது பின்வாங்க முடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே தமிழ் மாகாணமாக்க வேண்டும் என்ற ஈழப் போராளிகளின் கோரிக்கையையும் இலங்கை அரசு நிராகரித்து விட்டது. முக்கியமான விஷயம் ஒரே தமிழ் மாகாணமா, இரண்டா என்பதில்லை. எந்த அளவுக்கு சுயாட்சி கிடைக்கிறது, அதைக் கொண்டு தமிழர் நலனைக் காக்க முடியுமா என்பதுதான்.

ஈழத் தமிழர்களிடையே எத்தனை பிரிவுகள் உண்டோ அத்தனை கருத்து வேற்றுமைகளும் உள்ளன. இதுதான் அவர்களை நசுக்கப் பார்க்கும் இலங்கை அரசின் மிகப் பெரிய பலமாகவும் விளங்குகிறது. ஈழத் தமிழரின் பல பிரிவினரும் ஒன்றிணைந்து யதார்த்த நோக்கில், காரிய சாத்தியமான, தர்ம நியாயமான ஒரு திட்டத்தை உருவாக்கினால் அவர்கள் சார்பில் ஈழ அரசுடன் வாதாடுகிற பாரதப் பிரதமரின் கரத்தைப் பலப்படுத்தியவர்களாவார்கள். அப்படி பிரதமருக்கு உதவும்போது தங்களுக்குத் தாங்களே உதவிக் கொண்டவர்களாவார்கள். ஈழத் தமிழர்களுக்கும் பெரு நன்மை செய்தவர்களாவார்கள்.

தமிழ்த் திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

தொழிலுக்குத் துரோகம் செய்யும் டாக்டர்கள்!
நோயாளிகளுக்கு எச்சரிக்கை!



* டாக்டர் ஃபீஸ் — ஐம்பது ரூபாய்க்குக் குறைந்து கிடையாது.

ஜனதா ஆட்சியின் போது ஒருமுறை இந்திய மருத்துவர்கள் சங்கக் கூட்டம், சென்னையில் ஓர் ஐந்து நடசத்திர ஓட்டலில் நடந்தது. மொரார்ஜிதான் தலைமை வகித்தார். சங்கத்தின் தலைவர் (கல்கத்தாவிலிருந்து வந்தவர் என்று நினைவு.) மருந்துகளின் விலை அநியாயமாக இருப்பதாகவும், அதனால் எல்லா மருந்து கம்பெனிகளையும் தேசியமயமாக்கிவிட வேண்டும் என்றும் ஆவேசமாகப் பேசிவிட்டு உட்கார்ந்தார். மொரார்ஜி தேசாய் எழுந்தார். தலைவர் பேசியதைக் குறிப்பிட்டுவிட்டு, "ஒரு சிகிச்சைக்கு ஆகும் மொத்தச் செலவைப் பார்த்தால் அதில் 75 சதவீதம் டாக்டர் ஃபீஸூம், பரிசோதனைகள் செலவும் ஆகிறது. 25 சதவீதத்துக்குக் குறைவாகத்தான் மருந்துகளுக்குச் செலவாகிறது. ஆகவே மருத்துவத் தொழிலைத் தான் முதலில் தேசியமயமாக்க வேண்டும்!" என்று ஒரு போடு போட்டார். தலைவர் பிறகு இதைப் பற்றி ஏன் பேசுகிறார்?



* டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி.



* டாக்டர் ஏ. சங்கரன்.

முன்பு சாதாரண தலைவலி, ஜுரம் வந்தால் எந்த டாக்டரிடமும் போகாதவர்கள் கூட, இப்போது டாக்டர்களிடம் போய், காலையிலோ, மாலையிலோ காத்திருந்து பரிசோதித்துக் கொண்டு, அவர் எழுதித் தரும் மருந்துகளையும் வாங்க நேரே மருந்துக் கடைகளுக்குப் போகிறார்கள். மாலை ஆறு மணி கன்சல்ட்டிங் நேரம் என்றால், காத்திருப்பவர்களை அவமதிப்பது போல், டாக்டர் சாவகாசமாக கூட்டம் சேர்ந்த பிறகு வருவதும் சகஜம்.

விஷ மருந்துகள் :

இதில் இன்னொரு வேடிக்கை, டாக்டர்கள் எழுதித் தரும் மருந்துச் சீட்டு. இரண்டு மருந்துகளே குணப்படுத்திவிடக்கூடிய நோய்க்கு, நான்கு மருந்துகள் எழுதிக் கொடுப்பார்கள். நாலில் இரண்டு அதிகச் சக்தி வாய்ந்த ஆன்டிபயாடிக் வகையைச் சேர்ந்ததாக இருக்கும். நாலில் ஏதாவது ஒரு மருந்தாவது நோய்க்கு எதிராக வேலை செய்யாதா என்பதே இவர்கள் எண்ணம். தங்கள் திறமை மேல் அவர்களுக்கே அத்தனை

நம்பிக்கை! இதனால் நோயாளிக்கு அதிக, அநாவசியச் செலவு என்பது மட்டுமல்ல, தேவையற்ற மருந்துகளையும் அவர் உட்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த மருந்தினால் ஏற்படுகிற உடல் உபாதைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மருந்து எப்படி வேலை செய்கிறது? இரத்தத்துடன் கலந்து பாக்டீரியா அல்லது வைரஸ் கிருமிகளைக் கொல்கிறது. ஆக, அந்தக் கிருமிகளுக்கு அம்மருந்து விஷமாக இருக்கிறது. அந்த விஷம் நம் உடலையும் ஓரளவு பாதிக்கத்தானே செய்யும்? இதைப் பல டாக்டர்கள் யோசிப்பதே இல்லை. மானாவாரியாக மருந்து எழுதிக் கொடுக்கிறார்கள். இதனால் புதிய 'கோளாறுகள் வந்தால் மறுபடி நம்மிடம் தானே வரப் போகிறான் என்ற கருத்தோ என்னவோ!'

டாக்டர்களுக்கு லஞ்சம்!

"டாக்டர்கள் அதிகமாக மருந்து எழுதித் தர ஒரு காரணம் மருந்து கம்பெனிகள். இவர்கள் தங்கள் பிரதிநிதிகளை டாக்டர்களிடம் அனுப்பி ஸாம்பிள்களை விநியோகம் செய்து வந்தார்கள். இப்போதோ மருந்து கம்பெனிகள் டாக்டர்களுக்கு ஃப்ரிஜ், மின் விசிறி, ஏ. ஸி. என்று கூட கவர்ச்சியான அன்பளிப்புகளை வழங்குகின்றன.' ஆயிரம் மாத்திரைகள் வாங்கினால் ஐந்நூறு மாத்திரை இனாம்' என்றுகூட நர்சிங் ஹோம்களுக்கு ஆசை காட்டுகின்றன! இந்த வியாபார தந்திரங்களுக்குப் பலியாகும் டாக்டர்கள் பலர் ...

அடங்கும் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும்! சில கருணையுள்ளம் கொண்ட டாக்டர்கள், சாம்பிள்களை ஏழை நோயாளிகளுக்கு வழங்குவதுண்டு. குழந்தைகள் வைத்தியத்தில் தேர்ந்த இளம் பெண் டாக்டர் ஒருவர், விலையுயர்ந்த டானிக் வகைகளை சாம்பிள்களாகப் பெற்றால், அவற்றை ஏழை எளிய நோயாளிகளுக்கு 'மட்டுமே கொடுப்பார். அதைத் தமது நோயாளிகளுக்குக் கொடுத்துவிட்டு, 'பில் தொகையில் சேர்த்துச் சிலர் வசூலித்துவிடுகிறார்கள்!

என் நண்பர், தமக்குத் தெரிந்த ஸ்பெஷலிஸ்ட் ஒருவரிடம் தமது மோட்டார் மெக்கானிக்கை அழைத்துச் சென்றார். டாக்டர் பரிசோதித்த பிறகு, "எத்தனை ஃபீஸ் தர வேண்டும்?" என்று கேட்டார் நண்பர். "ஆங்.... உங்களிடமாவது பணமாவது, வாங்குவதாவது?" என்றார் டாக்டர் சிநேக பாவனையோடு. பிறகு, "பாவம் மெக்கானிக்... பதினைந்து ரூபாய் கொடுங்கள் போதும்!" என்றார். நண்பருக்கு ஏக மகிழ்ச்சி. பிறகு டாக்டர், "இந்த டெஸ்ட்டுகள் மட்டும் செய்து விடுங்கள்.... கோளாறு எதுவும் இல்லைதான். இருந்தாலும் பாவம் மெக்கானிக்.... நாளைக்கு ஒன்று கிடக்க ஒன்று ஆகக்கூடாது பாருங்கள்!" என்று ஒரு சீட்டுக் கொடுத்து, "உங்களுக்குத் தெரிந்த பரிசோதனை நிலையங்கள் நிறைய இருக்கும். ஆனால் அயனாவரத்தில் இந்த 'லாபி'ல் பண்ணினால் ரிலையபிள்..."

டாக்டர்கள் ஜாக்கிரதை!

இருக்கத்தான் செய்கிறார்கள்" என்று வருத்தத்துடன் கூறுகிறார், கல்யாண் கிளினிக் டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி. தைரியமாகத் தங்கள் துறையில் உள்ள குறைகளை விளம்பரப்படுத்துவதன் மூலமே அகற்றவும் முயலும் டாக்டர்களுள் ஒருவர் இவர்.

அமெரிக்காவில் ஸாம்பிள் தருவதுகூட டாக்டர்களுக்கு லஞ்சம் தருவதற்கு சமானம் என்ற கருத்தில் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இங்கே மருந்து கம்பெனிகள் ரொம்பப் பழக்கப்படுத்திவிட்டதால், பரிசுப் பொருள்களைக் கேட்டு வாங்கவே கூட டாக்டர்கள் துணிகிறார்கள்! மருந்து கம்பெனி பிரதிநிதியிடம் கேலியாகக் கேட்பார்கள். "நீ அப்படி என்ன 'சாம்பிள்கள்' கொட்டிக் கொடுத்துவிட்டாய் என்று உன் கம்பெனி மருந்தை நான் சிபாரிசு செய்ய வேண்டும்?" என்று கேட்கும் போது 'சாம்பிள்' என்ற சொல்லில் இதர பரிசுகளும்



* மருந்துகள் — தயாரிப்பில் தரமின்மை! டாக்டர்களுக்குப் பரிசுகள்!

என்று தலையைச் சொறிந்து, யோசனை செய்வது போல், நிலையத்தின் பெயரைக் குறிப்பிட்டார். நண்பர் மெக்கானிக்கை அழைத்துப் போனார். பில் வந்தது நானூற்று முப்பது ரூபாய்க்கு! தூக்கி வாரிப் போட்டது நண்பருக்கு. ரிசல்ட்டை டாக்டரிடம் காண்பித்த போது, "அப்பாடா, நல்ல வேளையாய் உங்கள் மெக்கானிக்குக்கு ஒன்றுமே இல்லை. நாம் பயந்தது போல ஏதும் ஆகிவிடவில்லை... நான்தான் அன்றைக்கே உங்களிடம் சொன்னேனே....!" என்று போலியாக ஆசுவாசப் பெருமூச்சு விட்டார் டாக்டர். அந்த டெஸ்ட்டுகள் அநாவசியம் என்று தெரிந்தும் அவர் எடுக்கச் சொன்ன காரணம்—அயனவரத்துக்காரர் அவரது மாமனார்! உறவினராகத்தான் இருக்க வேண்டும் என்பதுகூட இல்லை. பரிசோதனைச் சாலையில் கமிஷன் அடிக்கும் டாக்டர்கள் நிறையவே உண்டு. ரத்தப் பரிசோதனை தவிர எக்ஸ்ரே, ஈ.ஸி.ஜி. என்று எத்தனையோ இல்லையா? 'எதற்கும் ஒரு செக்அப் செய்து விடலாம்' என்று இலேசாக பயமுறுத்துவது போல் நோயாளிகளிடம் கூறிவிட்டு டெஸ்ட்டுகளை எழுதித் தந்து கொண்டே இருந்தால் கமிஷன் வந்து கொண்டே இருக்காதா!

விடுகிறார்கள்.) டீ. வி. கம்பெனி சர்வீஸ்காரர்கள்கூடப் பரவாயில்லை. ஒரு விஸிட்டுக்கு 35 ரூபாய் கொடுத்தால், ஒரு மாதத்திற்குள் மறுபடி வர நேர்ந்தால் விஸிட்டுக்கு சார்ஜ் செய்வதில்லை!

இதில் ஆர்த்தோபீடிக் என்னும் எலும்பு முறிவுச் சிகிச்சை நிபுணர்தான் கொடுத்து வைத்தவர். ஒவ்வொரு முறை பிளாஸ்டர் ஓட்டும் போதும், அல்லது கட்டுப் போடும் போதும் பீஸ். அவர் வாங்கவில்லை என்றால் உதவியாளர் வசூலித்துவிடுவார். மனசு உடைந்து போய்விடும். அதுக்கு எந்த ஆர்த்தோவும் கட்டுப் போட முடியாது!

நண்பரின் தாயாரை டாக்டர் ஆலோசனைப்படி ஒரு பிரபல நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டு வந்திருந்தேன். மறு நாள் அவரைப் பார்க்கப் போன போது, ஸ்பெஷலிஸ்ட் ஒருவர் வந்து அவரைப் பரிசோதித்தார். (என்ன பெரிய பரிசோதனை! நாக்கை நீட்டு, கண்ணைக் காட்டு, எட்செட்ரா.) டிஸ்சார்ஜ் செய்யும் போது மொத்த பில் தொகையில், நோயாளியைப் பார்க்கும் ஸ்பெஷலிஸ்ட், நர்சிங் ஹோமைச் சேர்ந்த பொது மருத்துவர், ஆகியோரின் பீஸ் தவிர இவரது டாக்டரின் விஸிட்டிங் சார்ஜ் 50 ரூபாயும் போடப்பட்



* இருமல் என்றால் எக்ஸ்ரே; தலைவலி என்றால் ஸ்கானர் பரிசோதனை!

டாக்டர் ஃபீஸ் தரும் அதிர்ச்சி!

நோயாளியைப் பரிசோதித்து, மருந்து மட்டுமே எழுதித் தரும் கன்சல்டன்ட் டாக்டர்கள், ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்ற ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள், முதல் 'கன்சல்டிங்'கில் 50 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை வாங்குகிறார்கள். (ஐம்பதுக்கு குறைந்து கன்சல்டிங் பீஸ் வாங்குவது கௌரவக் குறைச்சல், சில ஸ்பெஷலிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை!) அடுத்த முறை போகும்போது பணம் வாங்கிக் கொள்ளாமல் இருப்பார்களோ? அதுதான் கிடையாது. இரண்டாவது கன்சல்டிங் 35 ரூபாய். (முதல் கன்சல்டிங்குக்கு 35 ரூபாய் வாங்குகிறவர்கள் இரண்டாவதுக்கு 25 அல்லது 20 வாங்கி

டிருந்தது! அதிர்ச்சியில் தலைசுற்றி விழுந்தாலும் நர்ஸிங் ஹோமில்தானே விழுகிறார் என்ற துணிச்சலில் இப்படி பில் போடுகிறார்களோ!

பாடம் புகட்டினார்!

இன்னொரு தனியார் மருத்துவமனையில் நடைபெற்றதாக நான் கேள்விப்பட்ட சம்பவம் துக்ககரமானது என்றாலும், சற்று வேடிக்கையானது. நோயாளியைச் சேர்ந்தவர்கள் பண வசதி உள்ளவர்கள். நோயாளிக்கு உயர்ந்த மருத்துவம் கிடைக்கச் செய்ய மேற்படி நர்சிங் ஹோமில் சேர்த்து, முன்


ஆபீஸில் இன்னொரு நாள் மூச்சு முட்டற வேலை...
பஸ்ஸுலே வீடு திரும்பறப்போ-விழிபிதுங்கற
கூட்டம். அப்பாடி! வீட்டுக்கு வந்தா அலுப்புத்தீர
குளியல், களைப்பினைப் போக்கி
புத்துணர்ச்சியூட்டும்தம்ளர் ஹார்லிக்ஸ்.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

பணமாக நாலாயிரமோ, ஐயாயிரமோ கட்டினார்கள். சிகிச்சைக்குப் பிறகு, துரதிர்ஷ்டவசமாக, நோயாளி இறந்துவிட்டார். அன்று சனிக்கிழமை மாலை. பதினேழாயிரம் ரூபாய் பில்லை செட்டில் செய்துவிட்டு உடலைக் கொண்டுபோகும்படி மருத்துவமனை தலைமை டாக்டரும், உதவியாளரும் கண்டிப்பாகக் கூறிவிட்டனர். உறவினர் சொல்லிப் பார்த்தார்கள். மறுநாள் ஞாயிறு பாங்க் விடுமுறை. திங்களன்று கட்டாயம் பணம் எடுத்துக் கொடுத்து விடுகிறோம், இப்போது 'பாடி'யைக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். மருத்துவமனை டாக்டர் மசியவில்லை.

பார்த்தார்கள் உறவினர்கள். 'அட, அருமை அப்பாவே போய்விட்டார். அப்புறம் இவர்களோடு என்ன கெஞ்சல் வேண்டியிருக்கிறது?' என்று டாக்டரைப் பார்த்து, "ஓ.கே. நாங்கள் திங்கள்கிழமை பணம் தருகிறவரை நீங்கள் 'பாடி'யைத் தரப் போவதில்லை. அவ்வளவுதானே....? நீங்களே 'பாடி'யை வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தேவை இல்லை!" என்று விறுவிறுவென்று மருத்துவமனை வெளி கேட்வரை வந்துவிட்டார்கள். தூக்கி வாரிப் போட்டுவிட்டது டாக்டர்களுக்கு. பில் பணம் பாக்கி முழுவதும் வராது போயிற்று என்பதோடு, பிரேதத்தை இடுகாடு கொண்டு செல்கிற பொறுப்பும் சேர்கிறதே! காலில் விழாத குறையாக உறவினர்களைக் கெஞ்சி, "திங்கட்கிழமையே பணம்கொடுங்கள், பரவாயில்லை. இப்போது சடலத்தை எடுத்துக் கொண்டு போங்கள்!" என்றார்களாம்.

ஒட்டு மொத்தமாக அத்தனை டாக்டர்களையும், 'நர்சிங் ஹோம்'களையும் குறை கூறிக் கரி பூசுவதாக நினைக்கக் கூடாது. சில டாக்டர்களும் சரி, சில நர்சிங் ஹோம்களும் சரி, நியாயமான தொகையை மட்டுமே வசூலிப்பதோடு, அறுவைச் சிகிச்சை முடிந்து திரும்பும் நோயாளியிடம் அநுதாபத்தோடு நடந்து கொள்ளுவதும் உண்டு. ட்யூமர் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, இரண்டாவது சிறிய அறுவையும் தேவைப்பட்ட போது, நோயாளியின் நிலைமையை உணர்ந்த டாக்டர் பாதி ஃபீஸ் வாங்கிக் கொண்டதும், நர்சிங் ஹோம் அறைக்கான வாடகையைப் பாதியாகக் குறைத்ததும் நான் கேள்விப்பட்ட மனிதாபிமான சம்பவங்கள்.


சில டாக்டர்கள் ரத்தப் பரிசோதனை நிலையத்துக்கு நோயாளியை அனுப்பும் போது, கூடவே அனுப்பும் சீட்டில், தமக்குச் சந்தேகமாகத் தோன்றும் நோயின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு கேள்விக் குறியும் போட்டு விடுகிறார். பரிசோதனை நிலையக்காரருக்கு பெரிய டாக்டரை அநாவசியமாக விரோதித்துக் கொள்ளுவானேன் என்று பயம். அதனால் டாக்டர் குறிப்பிட்டிருக்கும் நோயையே தங்கள் பரிசோதனை முடிவும் காண்பிப்பதாக எழுதிக் கொடுத்து விடுவதும் உண்டாம்!

மருத்துவ வசதிக்காக ஓர் ஊழியருக்கு இத்தனை ரூபாய் என்று நிர்ணயம் செய்து மெடிகல் இன்ஷூரன்ஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சிலர் கதைகள் வேறு மாதிரி. பதினைந்து ரூபாய் வாங்கும் டாக்டர்கூட, "இன்ஷ்யூரன்ஸ்க்ளெய்மா? என் ஃபீஸ் இருபத்தைந்து ரூபாய் போட்டு விடுங்கள்!" என்கிறார். கையில் ஒரு சிறு பிளாஸ்டிக் சர்ஜரி செய்ததற்காக, தமது நண்பரிடமிருந்து எதுவும் வாங்க மறுத்தார் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர். நண்பர் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்று மன்றாடி 500 ரூபாயும் கொடுத்தார். மறுநாள் மெடிகல் இன்ஷ்யூரன்ஸ் க்ளெய்ம் தாளில் கையொப்பம் போடச் சொன்ன போது, "மெடிகல் க்ளெய்மா? அப்படியானால் எடுங்கள் ஐந்நூறு!" என்றார் சர்ஜன்!

தரக்குறைவான மருந்துகள்!

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் மருத்துவரிடமும் மருந்து தயாரிப்பாளரிடமும் உள்ள

* ரத்தப் பரிசோதனை — இந்த உபகரணம் சில சொட்டு ரத்தத்தை ஏற்று அதில் 22 வித பரிசோதனைகளைச் செய்து இரண்டொரு நிமிஷங்களில் முடிவுகளைச் சமர்ப்பித்துவிடும்!



ஒரு குறையை விண்டு சொன்ன டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி, இன்னொரு அதிர்ச்சி தரும் தகவலும் தெரிவிக்கிறார்: "நூற்றுக்கு முந்நூறு முதல் ஐநூறு சதவீதம் லாபம் தருகிற தொழில் மருந்து உற்பத்தித் தொழில். சரியான தர நிர்ணயம் செய்யப்படுவதில்லை. இறக்குமதியாகும் வெளிநாட்டு மருந்துகளானால் 99.9 சதம் தரம் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இங்கே தயாராகிற மருந்துகளானால் பலவற்றுக்கு 60 சதவீதம் இருந்தாலே போதும் என்று அனுமதித்து விடுகிறார்கள்!"

தொடர்ந்து பேசுகிறார் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி:

"முன்பெல்லாம் குடும்ப டாக்டர் என்கிற அமைப்பு நடைமுறையிலிருந்தது. முழு ஈடுபாட்டுடன், அவரே கவனித்துப் பார்ப்பார்.

குடும்பத்தின் முழு வரலாறும் அவருக்குத் தெரிந்திருக்குமாகையால் பெரும்பாலும் பிரச்னைகளே இருக்காது. அவசியம் என்று தோன்றுமானால், குடும்ப டாக்டரே தகுந்த ஸ்பெஷலிஸ்டுக்கு நோயாளியை அனுப்புவார். 'நோய் இன்னது, இன்ன மருந்து தரலாம்' என்று ஆலோசனை தருவது மட்டும் தான் ஸ்பெஷலிஸ்டுகளின் வேலை. அவர் தருகிற குறிப்பை வைத்து குடும்ப டாக்டர் தான் மருந்து தந்து நோயைக் குணப்படுத்துவார். இப்போதெல்லாம் ஸ்பெஷலிஸ்டுகளே நோயாளிகளுக்கு மருந்து தருகிறார்கள். நோயாளி பற்றியும் அவரது குடும்பம் குறித்தும் முழு விவரம் அறிந்த குடும்ப டாக்டரைப் புறக்கணிக்கும் இந்த முறை மிகவும் ஆபத்தானது.

காணாமல் போன தொண்டுள்ளம்!

"டாக்டர்கள் எப்போதும் அப்–டு–டேட் ஆக இருக்க வேண்டும். தினம் பொழுது விடிந்தால் மருத்துவத் துறையில் ஏதாவது மாற்றம், முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. பல டாக்டர்கள், இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறையே காட்டுவதில்லை. வீடு கட்டுவது, கார் வாங்குவது என்று பணம் ஒன்றே பிரதானமாகிவிட்டது. டாக்டர் தொழிலுக்கு என்று இருக்க வேண்டிய தொண்டு மனப்பான்மை அறவே காணாமல் போய்விட்டது. இந்தியன் மெடிகல் அசோசியேஷன் என்று ஒன்று இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு எவ்வளவோ செய்யலாம். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது டாக்டர்களுக்கு மறுபயிற்சி வகுப்பு மாதிரி, (ரெஃப்ரஷர் கோர்ஸ்) ஏதாவது நடத்தி அவர்களுடைய அறிவும் திறமையும் முக்கியமாக மனமும் மேம்படவும் நவீனமடையவும் செய்ய வேண்டும். இப்படி பயிற்சி பெறாத டாக்டர்களைத் தொழில் நடத்தவே அனுமதிக்கக் கூடாது.

"அமெரிக்காவில் காஸெட் டேப்பில் மருத்துவக் கேள்விகள் பதிவாகி வருகின்றன. காரில் போகும் போதே கேள்விகளைக் கேட்டு பதிலையும் உடனே டேப்பில் பதிவு செய்து அனுப்பிவிடுவார்கள். மாதம் பத்து காஸெட்டுகளாவது இப்படி அனுப்பப்பட்டு மார்க் போடப்பட்டுத் திரும்பி வரும். குறைந்தபட்ச மார்க் வாங்காவிட்டால், தொழில் செய்ய அனுமதிக்க மாட்டார்கள்! அமெரிக்கன் மெடிகல் அஸோஸியேஷன் இதில் மிகவும் கண்டிப்பாகச் செயல்படுகிறது.

இரண்டரை லட்ச விவகாரம்!

"வெளிப்படையாகவே பேரங்கள். இரண்டரை லட்ச ரூபாய்க்கு ஒரு அட்மிஷன் என்று மருத்துவக் கல்லூரி நிலவரம் ஆகிவிட்டது. அதே நேரத்தில் இளைஞர்களை, டாக்டர்களை கிராமப்புற மருத்துவத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று கோஷம் போடப்படுகிறது. இரண்டரை லட்ச ரூபாய் தந்து அட்மிஷன் பெற்றுப் படிக்கிற எந்த டாக்டரை இவர்கள் கிராமப்புற சேவைக்கு அனுப்பப் போகிறார்கள்? பணம் பண்ணுவதில் தானே இவர்கள் குறியாக இருப்பார்கள்? யூனிபார்ம் கொடுத்து, என்.ஸி.ஸி. மாதிரி, இராணுவ சேவை மாதிரி மூன்று ஆண்டுகளாவது ஒவ்வொரு எம். பி. பி. எஸ். ஐயும் கட்டாயமாக கிராமப்புறப் பணிக்கு அனுப்ப வேண்டும். அதன் பிறகுதான் எம்.எஸ்., எம்.டி. என்று மேலே படிப்பைத் தொடர அனுமதி தர வேண்டும்!

டி.வி.யில் இருதய ஆபரேஷன் எதற்கு?

"நோய் வேறு ஆரோக்கியம் வேறு என்பதை அடிப்படைப் பாமரனுக்கும் புரிய வைப்பதில் டி. வி. போன்றவை ஈடுபட வேண்டும். ஆடம்பரமாக இருதய ஆபரேஷன், மூளை ஆபரேஷன் என்று படமெடுத்துக் காட்டி என்ன பயன்? சாப்பாட்டுக்கு முன்னால் கைகழுவுங்கள். சுத்தமாக இருங்கள் என்று சொல்லித்தர வேண்டாமா?

"மஞ்சள் காமாலை போன்ற பல தொற்று நோய்களுக்கு அசுத்தமும், கவனக் குறைவுகளுமே காரணம். நோய் வராமல் காப்பது எப்படி என்று கற்றுத் தருவதே டி. வி. போன்ற பொது ஜனத் தொடர்பு சாதனங்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்."

அகில இந்திய மருத்துவர்கள் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளைக்குத் தலைவரான டாக்டர் ஏ. சங்கரன் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவிக்கிறார்:

டாக்டர்களில் மூன்று வகை: மருத்துவர் எனப்படும் மெடிகல் பிராக்டிஷனர், ஆலோசகர் எனப்படும் கன்சல்டன்ட்; தனித் திறன் பெற்ற நிபுணர் எனப்படும் சூபர் ஸ்பெஷலிஸ்ட். டாக்டர் ஐந்து ரூபாய் வாங்குகிறார். ஸ்பெஷலிஸ்ட் முப்பது முதல் ஐம்பது ரூபாய் வரையில் வாங்குகிறார். சூபர் ஸ்பெஷலிஸ்ட் ஐம்பது முதல் எழுபத்தைந்து ரூபாய் வரை வாங்குகிறார்.

1950 முதல் 1975 வரை, மருத்துவர்கள் ஒரே மாதிரி கட்டணம்தான் வாங்கிக்கொண்டிருந்தார்கள். பிறகுதான் சூபர் ஸ்பெஷலிஸ்ட் எனப்படும் தனித்துறை நிபுணர்கள் வந்தார்கள். ஆக, 1950 முதல் 1985 வரை ஸ்பெஷலிஸ்ட் வசூலிக்கும் 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையிலான கட்டணத்தில் எந்த மாறுதலும் இல்லை. அதே சமயத்தில் பே கமிஷன் மற்றும் இதர ஊதியக் குழுக்களின் சிபாரிசு காரணமாக பலருக்கும் சம்பள விகிதங்கள் ஐந்தாறு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். ஆனால் மருத்துவ ஆலோசகர் கட்டணம் அப்படியேதான் இருந்திருக்கிறது.

நவீன வசதிகள் மிக்க சொகுசான நர்சிங் ஹோம்கள் இப்போது நிறைய ஆரம்பமாகியுள்ளன. அவர்கள் முதலீடு செய்திருக்கும் தொகை ஏராளம். அதனால் அங்கே செய்யப்படும் பரிசோதனைகளுக்கு மிக அதிகச் செலவு

ஆகிறது. சாதாரணமாக ஒரு இ.ஸி.ஜி. எடுக்க 30 ரூபாய் ஆகிறது. 'ஐந்து நட்சத்திர' நர்சிங் ஹோமில் இதுவே 60—70 ரூபாய் ஆகிறது. 60 ரூபாய் இ.ஸி.ஜி.க்குக் கொடுத்து விட்டு, 30 ரூபாய் ஆலோசகருக்குக் கொடுக்க முடியுமோ? அதனால் மருத்துவ ஆலோசகரின் கட்டணத்தையும் இதற்குத் தகுந்த மாதிரி உயர்த்தி விடுகிறார்கள்!

என்னைப் பொறுத்தவரை இரண்டாவது ஆலோசனைக்கு நான் கட்டணம் ஏதும் வாங்குவதில்லை. ஒரு மாதம் கழித்து மறுபடி பரிசோதனை நடத்தும் பட்சத்தில் மட்டுமே, எனது உழைப்புக்காக இருபது ரூபாய் கட்டணம் வாங்குகிறேன்.

தனி மனிதனால் தர முடியாத கட்டணம்

சாதாரணமாக இ.ஸி.ஜி.க்கு 30 ரூபாய்க்கு மேல் ஆகாது. ஒரேயடியாக வியாபாரக் கண்ணோட்டத்துடன், செயல்படுவதால்தான் கட்டணம் உயர்கிறது. இவ்வளவு முதலீடு செய்வதால் இவ்வளவு பாங்குக் கடன்; அதற்கு இவ்வளவு வட்டி; இத்தனை வருஷத்துக்குள்ளாக, போட்ட பணத்தை எடுத்துவிட வேண்டும் என்று கணக்குப் பண்ணுவதால் வரும் வினை.

'அமெரிக்காவில் இ.ஸி.ஜி.க்கு 50 டாலர்; மருத்துவ ஆலோசனைக்கு 30 டாலர். இங்கே அதைவிடக் குறைவுதானே?' என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே எந்தத் தனி மனிதனும் இப்படிக் கொடுப்பதில்லை. ப்ளூ க்ராஸ் ஸ்தாபனம், மக்கள் எல்லாரிடமிருந்தும், இன்ஷ்யூரன்ஸ் ப்ரீமியத்தை வாங்கிக் கொண்டு டாக்டருக்கான தொகைகளைக் கொடுத்து விடுகிறது. தனி மனிதனாயிருந்தால் இவ்வளவு கொடுக்க முடியுமா?

பம்பாயில் மருத்துவ ஆலோசனைக் கட்டணம் 100 ரூபாய். ஆனால் பம்பாய் மக்களின் பேயிங் கெபாஸிடி என்னப்படும் 'கொடுக்கும் தகுதி' சென்னையைக் காட்டிலும் அதிகமானது. அதனால் சென்னையில் ஆலோசனைக் கட்டணம் நியாயமான அளவில் இருக்க வேண்டும் என்பதை நானும் வலியுறுத்துகிறேன். டாக்டர்களில் 95 சதவீதம் நியாயமான ஆலோசனைக் கட்டணங்களை வசூலிக்கிறார்கள். 5 சதவீதம்தான் அதிகமாக வசூலிக்கிறார்கள்.

என்னைப் போன்றவர்கள், ஆலோசனைக் கட்டணத்தை உயர்த்தவில்லை என்றால் அதற்குக் காரணம் நோயாளியின் நிலைமையை நன்கு உணர்ந்திருப்பதுதான். இதயநோயாளியான ஒருவர், ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் மூன்று முதல் நான்கு ரூபாய் வரை தனது மருந்துகளுக்குச் செலவிட வேண்டியிருக்கிறது. வைத்தியச் செலவு ஏன் இவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதற்கு இன்னொரு காரணம்: இந்திய கம்பெனிகள் மிகக் குறைந்த விலையில் உருவாக்கக் கூடிய மருந்துகளைக் கூட பன்னாட்டு நிறுவனங்களிடம் அரசு தயாரிக்கச் சொல்லியிருப்பது: இது மிகவும் தவறானது. சில மருந்துகள் மார்க்கெட்டில் இல்லாதது போலத் தோன்றினாலும், சற்றுக் கூடுதல் விலைக்கு இதே மருந்துகள் கள்ளச் சந்தையில் கிடைக்கின்றன! சிகிச்சைச் செலவு அதனாலும் கூடத்தான் செய்கிறது.

கண்டனத்துக்குரிய பழக்கங்கள்

ஒரு நோயின் மூல காரணத்தை அறிந்து, அதற்குச் சரியான மருந்தைக் கொடுத்தால் நோயைக் குணப்படுத்திவிடலாம். ஆனால் நோயின் அறிகுறிகளை மட்டுமே கருத்தில் கொண்டு மருந்து கொடுத்தால் பலவித மருந்துகள் தர வேண்டியிருக்கும். உதாரணமாக, ஒரு நோயாளி வந்து தலையை வலிக்கிறது; கூடவே தலை சுற்றல்; படபடப்பு வேறு இருக்கிறது என்று சொன்னால், தலை வலிக்கு ஒன்று, தலைசுற்றலுக்கு, படபடப்புக்கு என்று ஒவ்வொரு மருந்தாகக் கொடுக்காமல், இதற்கு மூல காரணமான ரத்த அழுத்தத்திற்கு மட்டும் மருந்தை எழுதிக் கொடுத்தால் போதும். அதிகமான மருந்துகளைச் சீட்டில் எழுதித் தரும் முறையை நாங்களும் கண்டிக்கிறோம்.

மருந்துகளின் தரம் குறைவாக இருப்பதையும் நான் இங்கே சொல்லியாகவேண்டும். வைட்டமின் 'ஸி' மாத்திரை வெறும் சாக்பவுடராக இருப்பதும்; காப்ஸ்யூல்களில் பாதியே மருந்துகள் அடங்கியிருப்பதும் எத்தனையோ பார்த்திருக்கிறோம்.

அரசாங்கத்துக்கும் எனது வேண்டுகோள் ஒன்று:

ஒரு கமிட்டியை அமைத்து, சகட்டுமேனிக்குப் பரிசோதனை லேபரேடரிகள் வளர்ந்திருப்பதை ஒழுங்கு படுத்த வேண்டும். ஒரு டாக்டரும் ஒரு டெக்னீஷியனும் சேர்ந்து நடத்தினால் மட்டுமே அதற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும். சுகாதாரமான இடத்தில் அவை இருக்க வேண்டும். பெரிய சாக்கடைகளை அடுத்து பரிசோதனைக் கூடங்கள் இருக்க அநுமதிக்கலாமா? அது போலவே நர்சிங் ஹோம்களின் தகுதி—தரங்களை நிர்ணயிக்க வேண்டும். லிப்ட் வசதி இல்லாத நர்சிங் ஹோமில், இதய நோயாளியை அநுமதித்துவிட்டு, படியேறச் சொல்லுகிறார்கள்.

இன்னொரு கொடுமை—இப்போது பாஷன் ஆகிவிட்டது என்றே சொல்லலாம். மருத்துவர் அல்லாதவர்கள் நர்சிங் ஹோம் ஆரம்பித்து விட்டு, மருத்துவர்களை விட்டுக் கவனிக்கச் சொல்லுவது. அதில் டாக்டர்கள் தங்கள் நோயாளிகளை அட்மிட் செய்துவிட்டு அவர்களை வந்து கவனித்துக் கொள்ளுகிறார்கள்! இவற்றைத் தடை செய்ய வேண்டும் என்பதோடு, கண்டிக்கவும் செய்கிறோம்.

பேட்டி, தொகுப்பு, கட்டுரை:
சித்தார்த், சுப்ர. பாலன்.

புகைப்படங்கள்: **யோகா.**

மேலட்டையில்:
குமாரி சவிதா சுப்பிரமணியன்.
வண்ணப்படம்: யோகா.

பழைய புத்தகங்களை விற்றுப் படிக்கும் மாணவர்!

தினசரி மாலையில் பிளாட்பாரத்தில் பழைய புத்தகங்களை விற்று, அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தானும் படித்து, தன் தம்பிகளையும் படிக்க வைக்கிறார் நாகர் கோவிலிலுள்ள சி. ஜேசு ராஜன் என்ற மாணவர்.

அம்மாணவரை அணுகி, "நீங்கள் இப்படி பழைய புத்தகங்களை விற்றுப் படிக்க வேண்டிய அவசியமென்ன....? இதன் மூலம் தினசரி உங்களுக்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கின்றது? பிளாட்பாரத்தில் இப்படி புத்தகங்கள் விற்பதால் வேறு இடையூறுகள் ஏதாவது உண்டா...?" என்று கேட்டபோது, தன் கதையைச் சொன்னார் ஜேசு ராஜன்.

"என் தந்தை, ஒரு சிறு வியாபாரி. பிளாஸ்டிக் வாளி, அலுமினிய வாளி போன்ற சிறு பாத்திரங்களைத் தலையில் சுமந்து சென்று, தெருவில் கூவி விற்பார். புது பாத்திரங்களைக் கொடுத்து, பழைய சாமான்களை வாங்கிக் கொள்வார். இதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே எங்கள் குடும்பம் நடக்கிறது!

"எனக்கு நான்கு தம்பிகளும் ஒரு தங்கையும் உடன் பிறந்தவர்களாவார்கள். எங்கள் வீட்டில் எல்லோருமே படித்து வருகின்றோம். ஆரல்வாய்மொழியிலுள்ள அறிஞர் அண்ணா கல்லூரியில் பி. எஸ்ஸி பட்டப் படிப்பில் இரண்டாம் ஆண்டில் நான் படித்து வருகிறேன்.

தினசரி எங்கப்பா கொண்டு வருகின்ற பணத்தில் வீட்டுச் செலவைக் கழிப்பதற்கே கஷ்டம். அவ் வருமானத்தில் எங்களைப் படிக்க வைக்கவும் வேண்டி இருந்ததால், அப்பா வட்டிக்கு வாங்கிய கடன்கள் ஏராளம்! இந்நிலையிலும், எங்கப்பாவின் கருத்து என்னவென்றால், 'இந்தக் கடன்களை யாவது என் மகன்கள் வளர்ந்து.... அடைத்து விடுவார்கள். ஆனால், இவர்கள் இப்போது படிக்காமல் இனி எப்போது படிக்கப் போகிறார்கள்....?' என்பதுதான். அதனால்தான் எங்களைப் படிக்க வைத்தார்.

எங்கப்பாவைவிட, எங்கம்மாவுக்கு நாங்கள் படிக்க வேண்டும் என்ற ஆசை அதிகம். தன் ஆசையை நிறைவேற்ற, எங்கம்மா, அவங்க கழுத்தில் அணிந்திருந்த நகைகளையும் விற்று இருக்கிறாள். இப்பொழுது அவங்க கழுத்தில் இருப்பது, ஒரு 'மஞ்சக் கயிறு' மட்டுமே! சில நாட்களில் இருக்கிற சாப்பாட்டை எங்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு, அவங்க பட்டினி கிடந்ததும் உண்டு!

நான், மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வில் நான்கு மார்க் குறைவாக எடுத்ததால், ஃபெயில் ஆனேன். எங்களைப் படிக்க வைக்கும்போதே எங்கப்பாவினுடைய 'கண்டிஷன்' என்னவென்றால், 'நீங்கள் ஃபெயில் ஆகாமல் படிக்கும்வரை நான் எப்பாடு பட்டாவது உங்களைப் படிக்க வைப்பேன். ஆனால், எந்தவகுப்பிலாவது நீங்கள் ஃபெயில் ஆனால்.... அதன் பிறகு உங்கள் படிப்பு அவ்வளவுதான். இதற்காக நீங்கள் என்னிடம் 'டியூஷன்' வைக்க வேண்டும் என்று கேட்க்க் கூடாது. சுய அறிவினாலேயே படித்துக் கொள்ள வேண்டும்!" என்பதுதான்.

அதன்படியே நானும் கவனமாகப் படித்து வந்தேன். ஆனாலும், தினசரி எங்கப்பாவிடம் கடன்காரர்கள் வந்து, வாங்கிய கடனைத்



புகைப்படம்: அற்புதம் போட்டோ.

அன்பார்ந்த வாசகர்களுக்கு......

கடுமையான புயல், மழை காரணமாக மின்சார விநியோகம் சில தினங்களுக்குத் துண்டிக்கப்பட்டதன் விளைவாகவும், ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதன் விளைவாகவும் இந்த இதழ் கல்கி உங்களுக்குக் காலதாமதமாக வந்து சேர்கிறது. கல்கி தீபாவளி மலரும் பலருக்குக் காலா காலத்தில் கிடைக்காமல் போயிருக்கிறது. இயற்கை விளைவித்த இடையூறின் காரணமான இந்தக் காலதாமதத்துக்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர், கல்கி.

திருப்பிக் கேட்பதும், அதற்கு எங்கப்பா சமாளிப்பதும் என் மனத்தை வாட்டி, வேதனையை ஏற்படுத்தியது. இந்தக் கவலைதான் என்னை, மேல் நிலைப் படிப்பில் தோல்வியடையச் செய்தது. நான் ஃபெயில் ஆனதால், எங்கப்பாவிற்கு மேலும் வருத்தத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக, இனி ஏதாவது வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ரிஸல்ட் வந்த மறுநாளே, நான் இப்படி பிளாட்பாரத்தில் பழைய புத்தகங்களை விற்கும் வேலையை ஆரம்பித்தேன்.

எங்க வீட்டிலேயே பழைய புத்தகங்கள் கொஞ்சம் இருந்தன. அவற்றைக் கொண்டு இந்தப் புத்தக வியாபாரத்தை நான் ஆரம்பித்தேன். பழைய பேப்பர் கடைகளுக்குச் சென்று, நல்ல புத்தகங்களைப் பார்த்து எடுத்துக் கொள்வேன். சிலர், 'எங்கள் வீட்டில் கொஞ்சம் பழைய புத்தகங்கள் இருக்கின்றன. எடுத்துக் கொள்கிறீர்களா.....?' என்று கேட்டு, அவர்களே பழைய விலைக்குத் தருகின்றனர். இப்படியே இந்தப் பழைய புத்தக வியாபாரத்தை நடத்துகிறேன்.

இந்தவியாபாரத்தில்ஒருநாளைக்குஎனக்கு சராசரி பத்து அல்லது 15 ரூபாய் வரை கிடைக்கும். சில நாட்களில் மழை காலத்தில், இந்த வருமானம் கூட கிடைக்காது.

இப்படி புத்தகம் விற்றுக் கொண்டே, மேல் நிலையில் நான் தோல்வி அடைந்த பாடத்தை மீண்டும் எழுதி, வெற்றி பெற்றுவிட்டேன். அதன்பிறகு, என் கூடப் படித்தவர்கள் எல்லோரும் கல்லூரியில் படிக்கின்ற போது, எனக்கும் கல்லூரியில் படிக்க ஆசை உண்டாயிற்று! எப்படியோ, என் ஆசையை என் அப்பா புரிந்து கொண்டார். உடனே, எங்க வீட்டின் முன்பு நின்ற இரண்டு பெரிய மரங்களை விற்று, அறிஞர் அண்ணா கல்லூரியில் எனக்கு ஃபீஸ் கட்டினார். அதற்குப் பிறகுள்ள செலவுகளை எல்லாம் நானே பார்த்துக் கொண்டேன். எனக்குச் சம்பள சலுகை, மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய உதவிப் பணமும் கிடைத்ததால், முதலாம் ஆண்டை முடித்தேன். நான், இரண்டாமாண்டில், காலடி எடுத்து வைத்ததும், என் தம்பி, மேல் நிலைப் படிப்பில் தேறினான். அவனும் தொடர்ந்து படிக்க விரும்பியதால், அவனை பி. ஏ. முதலாம் ஆண்டில் சேர்த்தேன். அந்த நேரத்தில் எனக்கும் பரீட்சை ஃபீஸ் கட்ட வேண்டியிருந்ததால், ஒருவரிடம் 500 ரூபாய் கடன் வாங்கினேன். இப்போது, அந்தக் கடனை தவணை முறையில் அடைத்து வருகிறேன்!

இரவு 8.30 அல்லது 9 மணி வரை புத்தகங்களை கடை பரப்பி வைத்திருப்பேன். பிறகு பழைய புத்தகக் கட்டுகளை அருகிலுள்ள ஓர் அறையில் வைப்பேன். இதற்கு அனுமதி, சில மாதங்களுக்கு முன்னால்தான் கிடைத்தது. அதற்கு முன், தினசரி வீட்டிலிருந்தே கொண்டு வந்து கொண்டிருந்தேன். இது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒரு நல்லவர் மனமிரங்கி, அவருடைய வீட்டில் ஓர் அறையில் வைக்க அனுமதி தந்தார். இரவு வீடு திரும்பி, விடியற்காலையில் எழுந்து பாடங்களைப் படித்துக் கொள்வேன்.

இந்த மாதிரி பழைய புத்தகங்களை விற்று கல்லூரிப் படிப்பைத் தொடர்வதை நான் கேவலமாக எண்ணாமல், மன மகிழ்ச்சியோடு இதில் ஈடுபடுகிறேன். என் வகுப்பு மாணவர்களும் என்னை ஒதுக்கி வைக்காமல், நண்பர்களாகவே பழகுகின்றனர்.

சில நேரங்களில் இடையூறுகளும் ஏற்பட்டதுண்டு. பிளாட்பாரத்தில் பாதையை அடைக்காமல் ஓர் ஓரமாகத்தான் கடை போடுகிறேன். இருந்தாலும், சில டிராபிக் போலீஸ்காரர்கள் பயமுறுத்துகின்றனர். 'புத்தகங்களையெல்லாம் தூக்கி ரோட்டில் போட்டுவிடுவேன்.....!'' என்று ஒரு டிராபிக் போலீஸ்காரர் சொன்னதுண்டு. சிலர், என்னிடம் நெருங்கி வந்து, 'இன்னைக்கு கலெக்‌ஷன் எப்படி.....? காப்பி குடிக்க ஏதேனும் இரண்டு மூன்றைத் தள்ளு.....!' என்பார்கள்.

ஒருநாள், நான் எவ்வளவோ கெஞ்சியும் கேட்காமல் ஒரு ஏட்டு வந்து, 'கேஸ்' எழுதி விட்டுப் போய்விட்டார். மறுநாள், நான் சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, என் நிலைமையை விளக்க, அவர் கருணை காட்டி, கேஸை வாபஸ் வாங்கினார்.

இன்னொரு சமயம், நடை பாதைக் கடைகளை அடைத்துக் கொண்டு இருக்கும், பூ, பழம் வியாபாரிகளை அப்புறப்படுத்துவதற்காக சில போலீஸ்காரர்கள் வந்தார்கள். திடீரென்று, அங்கிருந்த சிறு வியாபாரிகளையெல்லாம் அடித்தார்கள். என் மீதும் ஓர் அடி விழுந்தது. நான் புத்தகங்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டேன். என் புத்தகங்களையெல்லாம் அவர்கள் பூட்ஸ் காலால் சின்னாப் பின்னப் படுத்திவிட்டனர். அவர்கள் போன பிறகு, மிச்சம் மீதியிருந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போனேன். அன்று அடி பட்டதை இதுவரை நான் வீட்டில் சொல்லவில்லை.

காசு வறுமையிலும், கல்வி வளம் பெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டு உழைக்கும் மாணவர் ஜேக ராஜனை, மனமாரப் பாராட்டி வாழ்த்திவிட்டு விடை பெற்றேன்.

பேட்டி: **குளச்சல் இப்ராஹிம்.**

இப்போது! நியூட்ரின் வழங்குகிறது...
இன்ஸ்டன்ட் ஃபுட்ஸ்!

விரும்பிக் கேட்டதுமே...



குலாப் ஜாமூன்!

ஆம், உண்மை. இப்போது நியூட்ரின், இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன்களை உங்களுக்கு வழங்குகின்றது. இன்சுவை கொழிக்கும் இனிப்புப் பண்டம், நொடிகளில் தயார்! நாவினில் நீரூறும் குலாப் ஜாமூன்களைத் தயாரித்து குடும்பத்தினரையும் நண்பர்களையும் வியப்பில் ஆழ்த்துங்கள். நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் உபயோகித்து, கண்பொழுதில் தயாரித்து மகிழுங்கள்.

நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் 200 கிராம் மற்றும் 100 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

நீங்கள் விரும்பும் மிருதுவான தேனூறும் குலாப் ஜாமூன்களை உங்கள் அன்றாட உணவுடன் ருசித்து ரசித்துச் சாப்பிடுங்கள்.

வாழ்வில் இனியவைகளை
வழங்குவோர் நியூட்ரின்!

நியூட்ரின்
இன்ஸ்டன்ட்
திகைப்பூட்டும் தித்திப்பு



nutrine

வழங்குவோர்: இந்தியாவிலேயே மிகப்பெருமளவில் விற்பனையாகும் மிட்டாய் தயாரிப்பாளர்கள்.

ACIL/0919/85 TAM

சொர்க்கத்தின் கதவுகள்

2

வீட்டுக்கார அம்மாளின் குரல் சுவாமி நாதனை விழிப்படையச் செய்தது.

"நல்ல நாளும் அதுவுமா நீங்க நர்ஸிங் ஹோமிலே பட்டினியாக உட்கார்ந்திருக்க வேண்டாம். வீட்டு வேலைக்காரி வள்ளியைக் கொஞ்ச நேரம் விமலாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அனுப்பறேன். நீங்க இங்கே வந்து எங்களோட சாப்பிட்டுட்டுப் போகலாம். பிளாஸ்கிலே கொஞ்சம் காப்பி எடுத்து வச்சிருக்கேன். போகும் போது கையோட எடுத்துக் கொண்டு போங்க... விமலா ஒரு வாய் காப்பியாவது இன்னிக்குச் சாப்பிடட்டும்..."

"அவளை இன்னும் டிரிப்பிலே போட்டு வச்சிருக்காளே. ஆகாரம் எதுவும் தரக் கூடாதுன்னு டாக்டர் உத்தரவாச்சே!"

"கார்த்தாலே பத்து மணிக்கு ஒரு தடவை நீங்க கொஞ்சம் காப்பி சாப்பிடற பழக்கம்னு விமலா சொன்னாள். அதனாலே நீங்க சாப்பிட உதவுமே, எடுத்துக் கொண்டு போங்கோ..." வீட்டுக்கார அம்மாள் மெள்ளச் சிரித்தாள்.

அவருக்கு வெட்கமாக இருந்தது.

இந்த விமலா வீட்டுக்கார அம்மாவிடம் இன்னும் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறாள்.

"என் கணவருக்கு ரொம்ப கோபம் வரும். கையில் கிடைத்ததைத் தூக்கி முகத்தில் எறியாத குறையாக விட்டெறிவார்.

"அவர் குடும்பத்துச் சங்கதி என்றால் ஒகோ என்று தலையில் வைத்துக் கொண்டு ஆடுவார். எனக்கு உடம்புக்கு வந்து நான் படுக்கையில் கிடந்தால் இருக்கிறேனா — செத்தேனா என்று கூடப் பார்க்க அவருக்கு நேரம் இருக்காது. தம் குடும்பத்தாரைப் பற்றி ரொம்ப கவலைப்பட்டு உருகினார்... அவர்களுக்காக உழைத்து உயிரை விட்டார். இப்போ அவர்கள் யாரும் ஏன் என்று கூடக் கேட்கிறதில்லை.

"இதில் ஒரு வேடிக்கை. இவர் சம்பாதித்துப் போட்டுத்தான் குடும்பமே தலையெடுத்தது.

"இவருக்குப் பதினாறு வயசு இருக்கும் போது அப்பா மாரடைப்பால் போய் விட்டார். அம்மா படிப்பு அதிகமில்லாத பத்தாம் பசலி. இரண்டு பிள்ளைகள் ஒரு பெண் என்ற குடும்பத்தை வைத்துக் கொண்டு கஷ்டப் பட்டாள். அப்போது இவர் எஸ். எஸ். எல். சி. முடிச்சுட்டு டைப் அடிக்கக் கற்றுக் கொண்டிருந்தார். பெரியவர்கள் செய்த புண்ணியம் — டெலிபோன் டிபார்ட்மெண்ட்டில் வேலை கிடைத்தது. தன் தேவைகளைத் தியாகம் பண்ணிவிட்டுத் தம்பியைப் படிக்க வைத்து — தங்கைக்குக் கல்யாணம் செய்து கொடுத்து.. வியாதியால் படுத்துக் கொண்டுவிட்ட அம்மாவுக்கு உதவிக்கு ஆள் தேவை என்று கல்யாணம் செய்து கொண்டவர்" என்று எல்லாவற்றையும் சொல்லியிருப்பாளோ... ஆமாம் விமலா அந்த வீட்டுக்கு நாட்டுப் பெண்ணாக வந்து என்ன சுகப்பட்டாள்?

நோயாளி மாமியாருக்குப் பணிவிடை செய்து — படித்துக் கொண்டிருந்த மச்சினருக்கு ருசியாகச் சமைத்துப் போட்டு — பிரசவத்துக்கு வந்த நாத்தனாருக்கு ஆஸ்பத்திரிக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு ஓடித் துணிகளைத் துவைத்து — பாத்திரம் தேய்த்து — ஓடாகிப் போனாள். மூன்று வருஷங்கள் படுத்துக் கிடந்த அவர் தாயாருக்குப் பெற்ற மகள் கூட அத்தனை பணிவிடைகள் செய்யவில்லை. திருப்பதிக்கோ — குருவாயூருக்கோ வேண்டுதலை என்று பம்பாயிலிருந்து தன் இரு குழந்தைகளுடன், கணவர் சகிதம் புறப்பட்டு வரும் அவர் தங்கை மாலதி, அம்மாவைப் பார்த்துவிட்டுப் போக வந்ததாகச் சாக்கு... வழியில் சென்னையில் போக வர இரண்டு நாட்கள் தங்க ஹோட்டலுக்குச் செலவழிப்பானேன் என்ற எண்ணந்தான். அம்மாவுக்குச் சாப்பிட இரண்டு சாத்துக்குடி பழங்களோடு வந்து எப்படி இருக்கே அம்மா? என்று விசாரிப்பதோடு சரி.


கணவன் குழந்தைகளோடு அவள் வெளியே சுற்றி அலைந்துவிட்டுச் சாப்பாட்டு வேளைக்கு வந்தால் விமலா சம்பிரதாயமாகச் சமைத்து வைத்திருக்க வேண்டும்.

மாலதி பிறந்த வீட்டிலிருந்து ஏராளமாகவே எதிர்பார்த்தாள். ஒவ்வொரு தடவையும் திரும்பிப் போகும் போது அம்மாவின் ஈயச் செம்பு — பாட்டியுடைய திருச்சூர் விளக்கு என்று வீட்டிலிருந்து எதையாவது எடுத்துப் போவாள் — அதோடு வெற்றிலைப் பாக்கு பழத்துடன் ரவிக்கைத் துண்டு...

என்று மறக்கர்து பெற்றுக் கொண்டுதான் கிளம்புவாள்.

அவள் கணவன் பம்பாயில் ஒரு பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் விற் பனைப் பகுதியில் உயர் மட்ட அலுவலராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். கைநிறையச் சம்பாதித்தான். கம்பெனி கொடுத்து உதவிய காரில் குடும்பமே சவாரி செய்தது. மாதுங் காவில் மாமனார் விட்டுப் போன ஃப்ளாட் டைச் சீர்திருத்தி அமர்க்களமாக அலங்கரித் துக்கொண்டு சொகுசாகவாழ்ந்தாள் மாலதி. வியாபார சம்பந்தமாக அவள் கணவன் வெளிநாட்டுப் பயணங்களுக்கு அடிக்கடி போய் வருவதுண்டு. மாலதியும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் கணவனுடன் கூடக் கிளம்பி விடுவாள். பேகம் போல அமெரிக் காவும் — ஆஸ்திரேலியாவும்தா வாயில் அடிபடும். அவள் வீட்டுக்குள் நுழையு முன் குப்பென்று ஃபாரின் செண்ட் மூக்கைத் துளைக்கும். அவள் குழந்தைகள் வெளி நாட்டு உடைகளைத்தான் அணிவார்கள். ஃபாரின் சாக்லெட்டுகள்தான் சாப்பிடுவார் கள். அவர்கள் வீட்டு டி. வி. யிலிருந்து மிக்ஸி வரை எல்லாம் வெளிநாட்டு சமா சாரங்கள்தான். ஆனாலும் பிறந்த வீட்டுக்கு வரும் போது மன்னிக்கோ, அண்ணாவுக்கோ வெளிநாட்டுகுண்டுசி ஒன்று கூடக்கொண்டு வர மாட்டாள். எல்லாம் இங்கே கிடைக் கிறது. அமெரிக்காவிலிருந்து வாங்கியாக ணுமா என்ன... என்று அசட்டையாகப் பேசுவாள். அந்நாளில் சிரமப்பட்டு ஆளான வன் என்கிற ஞாபகம் சிறிதுமே அவளுக்குக்

லக்ஷ்மி



கிடையாது. எப்பொழுதுமே வெள்ளித் தட்டில் சாப்பிட்டது போல் ஒரு பாவனை.

விமலா அவள் சொல்வதற்கெல்லாம் மௌனமாகத் தலையாட்டுவாள். தர்க்கம் செய்யவே மாட்டாள்.

''வீட்டைப் பத்திக் கவலைப்படாதீங்கோ. வள்ளியை அனுப்பிப் பெருக்கித் துடைச்சுச் சுத்தப்படுத்திவைக்கச் சொல்றேன். சாவியை மறக்காம வச்சுட்டுப் போங்கோ...'' என்று வீட்டுக்கார அம்மாள் சொன்னாள்.

அசட்டுச் சிரிப்புடன் சட்டைப் பையிலிருந்த வீட்டுச் சாவியை எடுத்து மேஜையின் மேல் வைத்தார் அவர்.

''எனக்கு விமலா சொல்லியிருக்கா. உங்களுக்கு உங்க தங்கையின் மேலே ரொம்ப உயிர்னு ரொம்பவே சொல்லியிருக்கா!'' திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

மாலதியின் சண்டித்தனத்தையெல்லாம் விமலா வீட்டுக்கார அம்மாளிடம் கொட்டி அளந்து விட்டிருப்பாளோ?

சுவரோடவாவது சொல்லி அழ வேண்டும் என்பார்களே, விமலா தன் உள்ளத்திலே குமுறிக்கொண்டிருந்த வேதனை அத்தனையையும் வீட்டுக்கார அம்மாளிடம் சொல்லி... ஆறுதலைத் தேடிக் கொண்டாளோ?

''நாள் கிழமை, போது மறக்காம பிறந்த வீட்டுச் சீர்னு ஏதாவது பணம் அனுப்பி வைப்பேளாம்—உங்க தங்கை மாலதி ரொம்ப வெகுளியாம்.... மனசில எதையும் வச்சுக்கத் தெரியாதாம். விமலா ரொம்பவே கரைந்து போனாள்.''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டார் சுவாமிநாதன்.

தன் வீட்டுச் சங்கதியைக் கட்டிக் காப்பதில் விமலா எப்பொழுதுமே குறியாகத் தான் இருந்தாள்.

''நீங்க இங்கே குடித்தனம் வந்து கிட்டத் தட்ட ஒரு வருஷம் ஆகப் போறது. உன் நாத்தனார்—மச்சினர் யாரும் வரக் காணுமே?'' என்று வீட்டுக்கார அம்மாள் ஒரு சமயம் கேட்டிருப்பாள்.

அவுட்ஹவுஸிலே ஒரே ஒரு அறைக்குள்ளே ஒண்டிக் கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்து விட்டுப் போகத் தம்பிக்கும் — தங்கைக்கும் கௌரவப் பிரச்னையாச்சே... அதைச் சொல்ல முடியாது விமலா... ஏதோ நல்லதாகச் சொல்லிவிட்டிருக்கிறாள்.

''நான் வரேன்...'' என்றபடி பிளாஸ்க்கைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார். வீட்டுக்கார அம்மாளின் பேரக் குழந்தைகள் — பக்கத்து பங்களா குழந்தைகளுடன் கூடிக் கொண்டு... கேட்டருகே பட்டாஸ்களை வெடித்துக் கொண்டிருந்தனர். அவசரமாக ஒரு சிறுவன் ஆயிரம் பட்டாஸ் சரத்தை அவிழ்த்து நீளமாகப் பரத்தி வெடிக்க வைத்தான். அது வெடித்தது — வெடித்தது யுகம் வரை வெடிக்கும்போல் சிறி வெடித்துக் கொண்டிருந்தது.

கேட்டைத் தாண்ட முடியாது அவர் தயங்கியபடி நின்று கொண்டிருந்தார்.

பட்டாஸ் வெடிப்பதைக் கண்டு பயந்து கொண்டு ஓரமாக ஓடிவந்த இரண்டு பெண் குழந்தைகள் அவர் அருகே வந்து நின்றனர். அவர்களில் உயரமாக இருந்தவள் — சற்றுக் குட்டையாக இருந்த மற்ற ஒரு பெண் குழந்தையிடம் கேட்டாள்:

''தீபாவளிக்கு உங்கண்ணா — நூல் பாவாடைதான் வாங்கித் தந்தாரா?''

''எங்க வீட்டிலே எல்லாருக்கும் எங் கண்ணா நூல் துணிதான் எடுத்தார். நான் மட்டும் வேணும்னு தகராறு பண்ண முடியுமா? எங்கண்ணாவுக்குப் பட்டுலே காசு போடப் பிரியம் இருப்பதில்லை.''

முதலில் கேட்டவள் என்ன சொன்னாள் என்பது பட்டாஸ் வெடிச் சத்தத்தில் அவருக்குக் கேட்கவில்லை. ஆனால் அந்தக் கேள்வி மட்டும் கடந்து போன தீபாவளி ஒன்றில் தங்கை மாலதி படுத்திய பாட்டை நினைவூட்டியது. அத்துடன் விவரிக்க இயலாத ஒரு கோபம் நெஞ்சை நிறைத்துக் கொண்டது.

மாலதியின் கணவர் தமது வெளிநாட்டுப் பயணங்கள் ஒன்றில் ஈடுபட்டிருந்த சமயம் அது. கணவனுடன் கூடப் போக முடியாது தங்கிவிட்ட மாலதி தன் குழந்தைகளுடன் தீபாவளி வாக்கில் அம்மாவைப் பார்க்க விரும்பியதாகப் புறப்பட்டு வந்திருந்தாள்.



பள்ளியிறுதி வகுப்பை முடித்த அந்த வாலிபருக்கு ஓவியக் கலையில் மிக ஈடுபாடு; பம்பாய் ஜே. ஜே. கலைப்பள்ளியில் ஓவியம் கற்க விரும்பிய அவர், தாம் வரைந்த மாதிரி ஓவியங்களுடன் அதற்கு மனுப்போட்டார். ஆனால் அவர் ஓவியங்கள் திருப்திகரமாக இல்லை என்று காரணம் காட்டி அந்தப் பள்ளியில் அவருக்கு இடம் கொடுக்க மறுத்து விட்டார்கள்! பிறகு... தம் சுய முயற்சியினாலேயே பிரபலமானார் அந்த ஓவியர். ஒரு நாள் அந்த ஜே. ஜே. கலைப்பள்ளியின் வருஷாந்திர விழாவில் பரிசு வழங்க அந்த ஓவியரையே அழைத்தார்கள்! யார் அந்த ஓவியர்? மக்ஸேஸே விருது பெற்றுள்ள திரு. ஆர். கே. லட்சுமண்தான்!

—அனிதா ராமச்சந்திரன்.

தம்பி — தங்கை — மனைவி எல்லோருக்கும் அவரால் சாதாரண ஜவுளிதான் எடுக்கமுடிந்தது.

தனக்கு அண்ணா வாங்கிக் கொண்டு வந்திருந்த புடவையைக் கண்டு முகம் சிறுத்துப் போனாள் மாலதி.

''என்னம்மா பிடிக்கலையா? எனக்குப் புடவை, ரவிக்கையெல்லாம் வாங்கறத்துக்கு அத்தனை ஒண்ணும் தெரியாது. விமலாவுக்குக் கடைக்குக் கூட வர நேரமில்லை. வீட்டிலே பண்டிகைக் காரியங்களைக் கவனிக்கணுமே... பரிசு ரொம்ப சாதாரணமா இருந்தாலும் என் மனசு ரொம்பப் பெரிசுன்னு நீ எடுத்துக்கோம்மா...'' என்று தணிவான குரலில் சொன்னார்.

''வேண்டாம் அண்ணா, இந்த மாதிரி நூல் புடவையை எங்கள் வீட்டு வேலைக்காரி ரமாபாய் கூடக் கட்டிக்க மாட்டா. என் கணவர் பார்த்தா ஏதாவது நினைச்சுப்பார். வேண்டாம்!'' — ஆத்திரமும் அழுகையுமாக வெடித்தாள் மாலதி.

''நீ என்ன வாங்கிக்க விரும்பறே, அதைச் சொல்லு. வாங்கித் தந்திடுறோம்...'' விமலா கெஞ்சும் குரலில் கேட்டாள்.

''மாந்துளிர் மேக வர்ண காஞ்சிபுரப் பட்டுப் புடவை எங்கிட்ட இல்லாத கலர். இந்தத் தீபாவளிக்கு மெட்ராஸ் வந்திருக்கோமே. வாங்கிக்கலாம்னு ஆசைப்பட்டேன். நேத்திக்குக் கூட பேச்சோடு பேச்சாக சொன்னேனே மன்னி. நீங்க வேணும்னு அண்ணாகிட்டே சொல்லாமல் இருந்துட்டேன்.''


''பட்டுப்புடவையா?'' அவர் பிரமிப்புடன், கேட்டு முடிப்பதற்குள் மாலதி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

''வருஷா வருஷமா நான் பிறந்த வீட்டுக்கு வந்து தீபாவளியைக் கொண்டாடுறேன்...? என் தலை தீபாவளியைக் கூட விமரிசையா நான் கொண்டாடலை. ஒவ்வொரு வருஷமும் தீபாவளிக்குன்னு நீங்க என்க்கு அனுப்பிக்கிற இருபது ரூபாயிலே நர்ன் என்னத்தை வாங்கிட முடியும்னு நினைக்கிறேன்? இந்த வருஷமாவது...'' பேச முடியாது விம்மினாள்.

பெஞ்சின் மீது படுத்திருந்த அம்மா, வேதனையுடன் முனகினாள். ''சுவாமிநாதா!... என் பீரோவிலே இருநூறு ரூபாய் இருக்கு. அதை எடுத்து...'' என்று திணறினாள்.

விமலா அவருக்கு ஜாடை செய்தாள். வீட்டு செலவுக்கு வைத்திருந்த பணம் அத்தனையும் எடுத்து அவரிடம் கொடுத்தாள். ''மளிகைச் சாமான்களை மாதம் பிறந்ததும் கடன் வாங்கிக் கொள்ள முடியும்... எப்படியோ மற்றச் செலவுகளைச் சமாளிச்சுக்கறேன். உங்க தங்கையைக் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் அவளுக்குப் பிடிச்ச பட்டுப் புடவையாக வாங்கிக் கொடுத்துடுங்கோ...'' தாழ்ந்த குரலில் உபதேசித்தாள்.

அழுது — அழிச்சாட்டியம் செய்து அண்ணாவுக்குக் கடன் வைத்து, அவள் தீபாவளி கொண்டாடிவிட்டுப் போனவள். மாலதி அப்படி ஒரு பிடிவாதக்காரி.



ஓ. கே... ஜோக்கைப் பார்த்துவிட்டீர்களா? இப்போது கொஞ்சம் ரஷ்ய மொழியில் சிரியுங்கள், பார்க்கலாம்! ஏன்? இந்த ஜோக் ரஷ்யப் பத்திரிகையிலிருந்து எடுக்கப் பட்டதாயிற்றே!

— மௌஷ்மி.

வீட்டுக்கார அம்மாளின் பத்து வயதுப் பேரன் ஓடிவந்தான்.

''ஸார்... நானும் உங்களோடு வரலாமா? மாமியைப் பார்த்து ஹாப்பி தீபாவளி சொல்லணும்...''

''ஆஸ்பத்திரிக்குள்ளே சின்னக் குழந்தைகளை அனுமதிக்கமாட்டா... நீ சொன்னேன்னு மாமிகிட்டே சொல்லிடறேன்...''

''தாங்க்யூ சார்...'' என்றான் சிறுவன்.

வீட்டுக்கார அம்மாளின் கடைக்குட்டிப் பேரன் அவன்.

அவரிடம் ஹிந்தி கற்றுக் கொண்டிருந்தான். டியூஷன் வாத்தியார் என்ற மரியாதை அவரிடம்.

'வாப்பா... கௌதம்... வெட்கப்படாதே.. பாதாம்பால் ஸாருக்குக் கலக்கி வச்சிருக்கேன் — உனக்கும் கொஞ்சம் கலக்கித் தரேன் சாப்பிடு...' விமலா உபசரிப்பாள். அந்தச் சிநேகிதம்தான் சிறுவனுக்கு அவளை ஆஸ்பத்திரியிலாவது பார்த்து வாழ்த்து தெரிவித்துக் கொள்ள ஆசையைத் தூண்டியது...

பெற்ற மகனைப் போல வளர்த்து — படிக்க வைத்து — ஆளாக்கி, கல்யாணம் செய்து வைத்து... வாழ்க்கை வகுத்துக் கொடுத்தார் அருமைத் தம்பிக்கு அவர். உள்ளூரிலேதான் வசிக்கிறான். கார் வைத்துக் கொண்டு வசதியாக வாழ்கிற பங்களா வாசி.... மன்னி மிகவும் அபாயகரமா இருக்கா... என்று போன் செய்தார்.

அவனும் வந்து எட்டிப் பார்க்கவில்லை... அவன் மனைவியும் நேரில் வரவில்லை...

தீபாவளி அமர்க்களத்தில் செத்து வைக்கப் போகிறானே என்கிற பயம்...

கோபமும் துயரமுமாக அவர் கேட்டைத் தாண்டிக் கொண்டு... மருத்துவமனையை நோக்கி நடந்தார்.

(தொடரும்)

எழுத்தில் தெரிந்த அர்த்தங்கள்

நா. ஜெயராமன்

புத்தகத்தில் மூழ்கிப் போயிருந்த கோவிந்தசாமி வாத்தியாருக்கு, யாரோ மெதுவாக வாசலைத் தாண்டி வருவது தெரிந்தது. பார்வை பின்னோடியது.

வந்தவள் தூண் மறைவில் தன்னை மறைத்துக் கொண்டு நின்றாள். பேசுவதற்குத் தயங்குவது போல் ஒரு தடுமாற்றம்.

யாரெனத் தெரிந்து கொண்டார் அவர். எதிர் வீட்டு மாதங்கிதான்!

பாவம்! படிப்பு வாசனையற்ற சரியான கிராமத்துப் பெண்! கட்டி வந்த ஒரு மாதத்திலேயே கப்பலேறி மலேசியாவுக்குப் போய் விட்டான் கேசவன். வருடமும் ஐந்து ஆச்சு! இன்னும் பயல் ஊர் வந்து சேரலே! கடிதம் மட்டும் எழுதுறான். அதுவும் இவளுக்கல்ல; அம்மாவுக்குத்தான்!

கடிதத்திலாவது இவளைப் பற்றி கரிசனமாய் ரெண்டு வார்த்தை விசாரித்து எழுதக் கூடாது? அம்மாக்காரியாவது மருமகளிட்டே கடிதம் வந்ததா ஒரு வார்த்தை சொல்வாளோ? அதுவும் கிடையாது. அவளுக்குத் தேவை மகனின் சம்பாத்தியம்.

கேசவனை நினைக்கும் போதே பற்றிக் கொண்டு வந்தது அவருக்கு. என்ன ஜென்மமோ?

அவளைப் பார்த்ததும் அவரையறியாமலே கண்கள் கலங்க, ''என்னம்மா, மாதங்கி?'' என்று கனிவாகக் கேட்டார்.

''அவருக்கு ஒரு கடுதாசி எழுதணும்''.

கலங்கிய அவர் கண்களில் ஒரு மலர்ச்சி; ஆச்சரியம்.

''நீயா?''

''ஆமாம்.''

''எழுதித் தர்றேன்மா'' என்று புத்தகத்தைப் போட்டுவிட்டு அவசரமாகப் புறப்பட்டார் கோவிந்தசாமி.

மாதங்கி முன்னே சென்று வீட்டைத் திறந்தாள்.

எழுத்துப் பலகை, பேனா, உட்கார பாய், விரித்து வைத்த கடிதம் என்று தயாராய் வைக்கப்பட்டிருந்தவைகளைப் பார்த்தார் அவர்.



சிறிது நேரத்தில் ஆவி பறக்கக் காப்பி வந்து அமர்ந்தது.

'ஒரே அமர்க்களமாயிருக்கே! புருஷனுக்கு முதன் முதலா கடிதம் எழுதப் போறதாலே இருக்குமோ?'' என்று புன்னகை புரிந்தவர் அமர்ந்தார்.

பிள்ளையார் சுழியிட்டுக் கடிதத்தைத் தொடர்ந்தார். இடையிடையே காப்பியைக் நுகர்த்துக் கொண்டார்.

கேசவன் குடும்பம் அவருக்கு அத்துபடி. மாமியார் பங்கஜம், நாத்தனார் சீதா என்று க்ஷேமலாப சமாசாரங்களை இழுத்து வளைத்துப் போட்டு எழுதிக் கொண்டே போனார்.

'ஒண்ணும் கேட்காமல் அவர் பாட்டுக்கு எழுதிக்கிட்டுப் போறாரே' என்ற தவிப்பு ஏற்பட்டது அவளுக்கு.

''நான் ஒரு வார்த்தை சொல்லலே. ஒரேயடியா எழுதிக்கிட்டுப் போறீங்களே. கொஞ்



சம் படித்துக் காட்டுங்க.

எழுதும் தன் கையைப் பிடித்து நிறுத்தியது போலிருந்தது அவருக்கு.

சமாளித்துக் கொண்டு, "நல்லா கேட்டுக்கம்மா" என்று படிக்க ஆரம்பித்தார்.

"அன்பு நிறைந்த அத்தான் அவர்களுக்கு மனைவி அநேக கோடி நமஸ்காரங்கள் செய்து எழுதியது....."

"நிறுத்துங்க..... நிறுத்துங்க."

"ஏன்மா? உன்னிடம் அன்பு இல்லாம இருக்கிறவனை அன்பு நிறைந்த அத்தான்னு தப்பா எழுதிட்டேனு? ஒரு சம்பிரதாயத்துக்குத்தான்மா அப்படி எழுதினேன்!"

"அதுக்கில்லே."

"பின்னே?"

"வெறுமே மனைவின்னு போட்டிருக்கீங்களே, அந்த இடத்திலே மாதங்கின்னு ஒரு வார்த்தையைச் சேர்த்து எழுதிக்கிடுங்க."

தான் பெரிய தவறு ஒன்றைச் செய்துவிட்டதாக எண்ணினார் கோவிந்தசாமி.

அவள் சொல்லியபடி சேர்த்து எழுதினார். மேற்கொண்டு அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்தார்.

"தங்கள் தங்கை சீதா, முதல் பிரசவத்துக்கு வந்தபோது நீங்க இங்கே இருந்தீங்க அத்தான். மூணாவது பிரசவம் வரை நம் வீட்டில் தான் நடந்ததுங்க அத்தான். அடுத்த பிரசவத்துக்கு இங்கே கூட்டி வர்றதா அத்தை சொல்லுறாங்க அத்தான்......" என்று சொல்லிக் கொண்டே போனவள் சிறிது நிறுத்தினாள்.

எழுதி முடித்த அவர், "ம்... அடுத்துச் சொல்லம்மா" என்றார். அவள் காதில் வாங்கிக் கொண்டதாக இல்லை.

நிமிர்ந்து பார்த்தார்.

அவள் முகம் அண்ணாந்து இருந்தது. மேலே தென்வடலாக ஓடிய உத்தரக் கட்டையில் அவள் பார்வை பதிந்திருந்தது. அதிலிருந்த கொக்கியில்தான் சீதா தொட்டில் கட்டிப் போடுவாள்.

"என்னம்மா, மேற்கொண்டு சொல்லாமல், மேலேயே பார்க்கிறே?" என்று அவள் மௌனத்தைக் கலைத்தார் கோவிந்தசாமி.

"ஒன்றுமில்லே" என்று மழுப்பியவளாய் அவரைப் பார்த்தாள் மாதங்கி.

"உனக்குப் பிடிச்ச பொருளேதும் சொல்லேன்மா. அனுப்பச் சொல்லி எழுதுறேன்" ஆறுதலாகக் கேட்டார் அவர்.

"எனக்கெதுக்கு?" என்பது போல் முகத்தைச் சுண்டிக் கொண்ட அவள், "எழுதிக்கிங்க" என்றாள்.


"உங்கள் தங்கைக்கு யார்ட்லி பவுடர் வேண்டுமாம். புதிதாக வந்த டிஸ்கோ சேலை கட்ட ஆசையாக இருக்கிறதாம்."

"எழுதிட்டேன்மா."

"உங்கள் அம்மாவுக்கு உடல்நிலை முன்னலை மாதிரி இல்லை. மதுரைக்குப் போய்ப் பெரிய டாக்டரிடம் பார்க்கலாம் என்று எவ்வளவோ சொன்னேன். வேண்டாமுன்னுட்டாங்க. அவங்களுக்கு ஏதும் ஆயிடுமோன்னு அத்தான் நீங்க கவலைப்பட வேண்டாம்" என்றவள், "அவ்வளவுதான் வாத்தியாரய்யா, கடிதத்தை முடிச்சிருங்க" என்றாள்.

அவள் சொன்னவைகளைக் கவனத்தில் கொண்டவராக விறுவிறுவென்று ஒரே மூச்சில் எழுதி முடித்தார் கோவிந்தசாமி.

"நீங்களே மறந்துடாம பெட்டியிலே போட்டுடுங்க" என்றாள் மாதங்கி.



'சூரிய சக்தி' ரேடியோ

சிறிய ரேடியோக்களுக்கு இனி பாட்டரி போடத் தேவையில்லை; சூரிய சக்தியைக் கொண்டே இயங்க வைக்கலாம். கதிரவனின் ஒளியை மின்விசையாக நேரடி மாற்றம் செய்யும் ஸிலிகான் ஸெல்கள் அமைந்த 'மாட்யூலை' மேற்கு ஜெர்மன் நிறுவனம் தயாரித்து விட்டது. ஒரு தபால் கார்டின் அளவேயுள்ள இதைக் கொண்டு ரேடியோவுக்கு மட்டுமின்றி வாக்மன், காஸெட் டேப்ரிகார்டர்கள், காமிராக்கள் போன்றவற்றுக்கும் தேவையான மின்சக்தியைப் பெறலாம்.

—அபயம்

ஆதாரம்: 'ஸ்காலா'.

அருள் வாக்கு



"இத்தனை நாள் ஏதோவொரு தினுஸிலேயே வாழ்க்கை நடத்திவிட்டோம். இப்போது திடீரென்று ஏதாவது சாஸ்த்ராப்யாஸம் செய்வது, கலையைக் கற்பது என்றால் எப்படி முடியும்? அதற்கு ஒரு வயஸ் இல்லையா? ஐந்தில் வளையாதது (ஐம்பதில் வளையாது) என்று பழமொழி இல்லையா?" என்று கேட்கலாம். அததற்கான வயஸில்தான் அது சுலபமாக வரும் என்பதும், வித்யாப்யாஸத்துக்கு ஏற்ற ஒரு பருவம் உண்டு என்பதும் வாஸ்தவந்தான். ஆனாலும் 'இந்தத் தேசத்திலே பிறந்து விட்டு இதன் ஏராளமான சாஸ்த்ரங்களில் ஒன்று கூடத் தெரியாமலிருக்கிறோமே!' என்ற Feeling இருந்தால் எந்த வயஸிலும் வித்யை வரும். 'ஆர்வமே இளவயஸின் துடிப்பையும் க்ராஹ்ய சக்தியையும் (கல்வியை க்ரஹித்துக் கொள்ளும் சக்தியையும்) உண்டாக்கிவிடும்.

இது வரை ஏதோவொரு வாழ்க்கை முறையில் போய் விட்டோமென்றால் அது ந்யாயமாக நாம் போயிருக்கப்படாத, "ஏதோவொரு" முறைதான். அதனால் "எந்த ஒரு முறை"யில்தான் நாம் போயிருக்க வேண்டுமோ அதிலே இனியாவது போவது என்ற உறுதியும் ஆர்வமும் இருந்தால் எளியாக அப்படி மாற்றிக் கொள்ளலாம்.

ஐம்பதில் வளையுமா? என்று கேட்பதையே 'சாலஞ்ஜ்'ாக எடுத்துக் கொண்டு, 'ஓ! வளையும்' என்று காட்ட முயல வேண்டும். உரிய வயஸிலே ஒன்றைக் கோட்டை விட்டவர்கள் இப்படி 'சாலஞ்ஜ்' பண்ணி ஜயித்துக் காட்டவேதான் அந்தப் பழமொழி ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்க வேண்டும். ப்ரத்யக்ஷத்திலேயே இப்படிப் பலர் இருந்திருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஏழாம் நாள் எதிர்பார்த்த கடிதத்திற்குப் பதிலாக, கேசவனே வேகமாக வந்து கொண்டிருந்தான்.

பார்த்த அவள் கையும் காலும் ஓடாத நிலையில் வீட்டிற்குள் போய் ஒளிந்து கொண்டாள்.

புயலாக வீட்டில் நுழைந்த கேசவன், தான் கொண்டு வந்த சூட்கேஸை வீசி எறிந்தான்.

பயந்து நடுங்கியவளாய் வெளிப்பட்டாள் மாதங்கி.

"வராதே, அங்கேயே நில்லு, என்ன தைரியமிருந்தா என் அம்மாவை வீட்டை விட்டுத் துரத்துவே?"

அவனுக்குப் பகீரென்றது - இதென்ன புதுக் கதை?

அப்போது பார்த்து, அங்கு வந்து சேர்ந்தார் கோவிந்தசாமி.

என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது. "என்னத்தை எழுதினீங்க?" என்பது போல் அவரை முறைத்துப் பார்த்தாள் மாதங்கி.

"மாதங்கி! தப்பு உன் மீது இல்லை. என் மீதுதான்! நீ எழுதச் சொன்னவைகளிலிருந்து நான் அறிந்து கொண்டது, வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய ஒரு இளம் பெண்ணின் ஏக்கங்களையும் தாபங்களையும் தான்! என்னிடம் படித்த காலத்திலேயே கேசவன் ரொம்ப 'டல்' தான் அம்மா! எனவே இங்கு வரவழைக்க விரும்பி, நீ அவன் 'அம்மாவை வீட்டை விட்டுத் துரத்தினதாய் கதை கட்டிவிட்டேன். ஏனென்றால் அம்மாவின் மீது கொள்ளை அன்பு அவனுக்கு! அவள் உன்னால் விரட்டப்பட்டதைக் கேட்டால் சகிக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும்" என்றவர், கேசவனைப் பார்த்தார்.

"மாதங்கி ஒன்றும் கொடுமைக்காரப் பொண்ணு இல்லேப்பா. உன் தாய்தானகவே விரும்பித்தான் தன் மகள் வீட்டுக்குப் போயிருக்கிறாள். இனியும் உன்னை நம்பியிருக்கிற உன் மனைவியைத் தவிக்க விடாதே" என்று கூறி மின்னல் வேகத்தில் மறைந்து விட்டார்.

கேசவனோ, கலங்கிய கண்களுடன் மாதங்கியைப் பார்த்துக் கொண்டிருந்தான்!



16. மணமகள் தேவை!

பொழுது புலர வேண்டிய வேளையின் காரணமாக வானிலிருந்த சந்திரன் கர்ப்ப ஸ்திரீயின் முகம் போல் ஒளியிழந்து கிடந்த நேரத்தில், நக்ஷத்திரங்களும் எங்கோ ஒன்றுகூடத் தேடக்கூடிய நிலையில் மறைந்து கொண்டிருந்த சமயத்தில், மேலைக் கடலின் இயற்கையழகு கண்ணேயும் மனத்தையும் பறிக்கும்படியாக இருந்த நேரத்தில், மந்தமான ஒளி எங்கும்பரவிநின்றகாலத்தில், அந்த இயற்கை அழகையும் அழிக்கக்கூடிய நிகழ்ச்சியின் விளைவாக எதற்கும் அசையாத நாகபாணன் கூட அதிர்ச்சியை அடைந்தான்.

கோட்டையிலிருந்து கொண்டு வரப்பட்ட மூட்டையிலிருந்து கௌதமிபுத்ரனுக்குப்

பதில் காஷ்டானன் எழுந்ததையும், அடுத்து நடக்கப் போவது என்ன என்பதைத்தான் தீர்மானிக்கும் முன்பாக காஷ்டானன் கை கால்களை உதறிக் கொண்டு க்ஷத்ரபன் மீது பாய்ந்து அவன் குரல்வளையைப் பிடித்து விட்டதையும், அடுத்த நிமிடம் க்ஷத்ரபனைக் கீழே தள்ளி காஷ்டானன் அவன் மீது உட்கார்ந்து குரல்வளையைத் திருக முயன்றதையும், க்ஷத்ரபன் மூச்சுத்திணறித் திண்டாடியதையும் கண்ட நாகபாணன் சில விநாடிகள் செயலற்று விட்டானானாலும், செயற்பட்ட போது மிகப் பயங்கரமாகச் செயல்பட்டான். தனது காலின் ஒரே உதையில் காஷ்டானனை க்ஷத்ரபன் உடலிலிருந்து அப்புறம் சென்று விழச் செய்தான். அடுத்துத் தனது இடது கையால் க்ஷத்ரபனின் இடது கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி வலது கையால் அவன் முகத்தில் ஓங்கிக் குத்தவே க்ஷத்ரபன் இரண்டு அடிகள் பின்னுக்குச் சென்று மல்லாந்து காஷ்டானன் பக்கத்தில் விழுந்தான்.

அப்பொழுதும் காஷ்டானன் தனது பக்கத்தில் விழுந்த க்ஷத்ரபனைப் பிடிக்கத் தனது கையை உயர்த்தியபோது, ''க்ஷத்ரபன் மீது அந்த கை விழுந்தால் அதை உடனடியாக வெட்டி விடுவேன்'' என்று நாகபாணன் அதட்டவே, காஷ்டானன் தனது கொலை முயற்சியை விட்டு மெதுவாக எழுந்து நின்று க்ஷத்ரபனைக் கொலைப் பார்வையாகப் பார்த்தான். க்ஷத்ரபனும் மெதுவாகத் தனது பெரிய சரீரத்தைத் தூக்கி கொண்டு எழுந்து நின்று ''இத்துடன் இது முடியவில்லை, காஷ்டானா!'' என்று சீறினான்.

''எந்த சமயத்திலும் உன்னைச் சந்திக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்று காஷ்டானனும் தனது உக்கிரத்தைக் காட்டினான்.

அவர்கள் இருவரும் சுயநிலைக்கு வருவதற்குள் நிதானத்தை அடைந்துவிட்ட மகா க்ஷத்ரபனான நாகபாணன், ''உங்களிருவருக்கும் அந்த கஷ்டமிருக்காது'', என்று மிக மெதுவாகச் சொன்னான்.

அந்த மெதுவான போக்கிலும் நாகம் சீறுவது போன்ற விஷம் இருப்பதைக் கவனித்த இருவர் முகத்திலும் பேய் அறைந்த அதிர்ச்சி தெரிந்தாலும், அதிலிருந்து முதலில் மீண்ட காஷ்டானன், ''குற்றம் என்னுடையதல்ல'' என்று சொற்களின் வேகத்தை அடக்கிக் கொண்டு பேசினான்.

''குற்றம் என்னுடையதுமல்ல. மகா க்ஷத்ரபர் உத்தரவைத்தான் நான் நிறைவேற்றினேன்'' என்று க்ஷத்ரபன் தனது கட்சியை எடுத்துச் சொன்னான்.

நாகபாணன் அந்த இருவரையும் இகழ்ச்சியுடனும் வெறுப்புடனும் நோக்கிவிட்டு, முடிவில் க்ஷத்ரபனை நோக்கி, ''இந்த ஆள் மாறாட்டம் எப்படி ஏற்பட்டது?'' என்று வினவினான்.

''எனக்குத் தெரியாது'' என்றான் க்ஷத்ரபன்.

அடுத்து காஷ்டானனை நோக்கினான் நாகபாணன். ''இந்த மூட்டைக்குள் நானாக நுழைந்து கொள்ளவில்லை'' என்று காஷ்டானன் சொன்னான்.

நாகபாணன் கண்கள் மீண்டும் க்ஷத்ரபன் மீது திரும்பின. ''கட்டிலில் படுத்திருந்தவனைக் கட்டிக் கொணர்ந்தேன். படுத்திருந்தது யாரென்று தெரியாது. காஷ்டானன் யாரென்பதை அறிவிக்கவில்லை'' என்று காஷ்டானன் மீது குற்றம் சாட்டினான் க்ஷத்ரபன்.

''வாயில் துணி அடைத்திருந்தால் எப்படி என்னை அறிவித்துக் கொள்ள முடியும்? இங்கு வரும்போதும் வந்த பின்னும் எத்தனை தடவை முனகினேன். மூட்டையை திறந்து பார்க்கக்கூட க்ஷத்ரபனுக்கு மூளை யில்லையா?'' என்று கேட்டான் காஷ்டானன்.

நாகபாணன் க்ஷத்ரபனைப் புன்முறுவலுடன் நோக்கிவிட்டு, ''காஷ்டானா! இவன் தான் தெரியாமல் உன்னைக் கொண்டு வந்து விட்டான். ஆனால் நீ எதற்காக அவனைக் கொல்ல முயன்றாய்?'' என்று காஷ்டானனை விசாரித்தான்.

காஷ்டானன் முகத்தில் மீண்டும் சினம் உதயமாயிற்று: ''மகா க்ஷத்ரபரே! மூட்டையிலிருந்த போது என் மாமனாராக வேண்டியவர் எத்தனை முறை என்னை உதைத்தார்? எத்தனை கேவலமாகப் பேசினார்! 'மாப்பிள்ளையாகக் கனவு காண்பவன் கதியெல்லாம் இப்படித்தான்' என்றார். 'க்ஷத்ரபன் மாப்பிள்ளையாவது அத்தனை சுலபமா' என்றார். நான் முனகினேன், நான் யாரென்பதை அறிவிக்க. இன்னொரு முறை முனகினால் மூட்டைக்குள் கத்தியைப் பாய்ச்சிவிடுவதாகப் பயமுறுத்தினார். பிறகு நான் முனகக்கூட இல்லை. மூட்டையிலிருந்து விடுதலையான பிறகு மாமனாருக்குச் சரியான பாடம் கற்பிப்பதென்று தீர்மானித்தேன். மற்றவை நீங்கள் அறிந்ததே'' என்று தனது கதையை முடித்தான் காஷ்டானன்.

நாகபாணன் நீண்ட நேரம் மரக்கலத்தின் பாய் மரத்தில் சாய்ந்தபடியே சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான், ''காஷ்டானா! நீ எப்படி சாதவாகனன் கட்டிலுக்கு வந்து சேர்ந்தாய்?'' என்று.

காஷ்டானன் முகத்தில் குழப்பம் தெரிந்தது. ''திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் ஊகிக்க முடியும். நான் இரவு முற்றிய சமயத்தில் கோட்டை நந்தவனத்தில் நடந்து கொண்டிருந்தேன். ஏதோ சிந்தனையுடன் ஒரு புதரின் முன்பிருந்த சிறு மரத்தில் சாய்ந்து கொண்டிருந்தேன். மரத்தின் மீதிருந்து ஏதோ கல்லோ கட்டையோ விழுந்திருக்க வேண்டும். நான் மூர்ச்சையானேன். பிறகு என்னை நீங்கள் கட்டிலிருந்துதூக்கிப்படகில்கிடத்தியபோது தான் சற்று சுரணை வந்தது'' என்று நடந்ததை விவரித்தான் காஷ்டானன்.

சாண்டில்யன்

நாகபாணன் காஷ்டானனை அருகில் வரச் சொல்லி அவன் தலையைப் பார்த்தான். நடு மண்டையில்பெரியகாயம்தெரிந்தது. ஆனால் அதன் மீது ஏதோ களிம்பும் பூசப்பட்டிருந்தது. அதைக் கண்ட நாகபாணன், ''காஷ்டானா! நீ இப்பொழுது உயிருடனிருப்பது கௌதமிபுத்ரனால். உன்னை மண்டையில் லாகவமாக அடித்துக் காயத்துக்குக் களிம்பும் போட்டு ரத்தத்தை நிறுத்திவிட்டான்'' என்று சொல்லிவிட்டு,''உன்னைக்காப்பாற்றமட்டும் கௌதமிபுத்ரன் உனக்கு சிகிச்சை செய்யவில்லை. உன் மண்டையில் குருதி பெருகினால் உன்னைப் போர்த்தியிருந்த போர்வையில் ரத்தக்கறை தெரியும். அது என்னவென்று நாம் பார்ப்போம். பிறகு உண்மை விளங்கிவிடும். பிறகு அவன் தப்புவதும் குதிரைக் கொம்பு. இதை உணர்ந்தே மிக சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறான் சாதவாகனன். நாம் இப்பொழுது மகா புத்திசாலியும் மகா வீரனுமான எதிரியுடன் போராடுகிறோம். இதை நீங்கள் புரிந்து கொள்வது நல்லது'' என்று கூறினான். மேலும் சொன்னான், ''க்ஷத்ரபா! உடனடியாக நாம் சித்தரஞ்சனியின் திருமணத்தை நடத்திவிட வேண்டும். காஷ்டானனுக்கு அவளை மணமுடிக்க உடனே நான் அறிவிப்போம்'' என்று.

அத்துடன் தீர்க்க சிந்தனையுடன் நூலேணியில் இறங்கி கோட்டையை நோக்கிப் படகில் கிளம்பினான் மகா க்ஷத்ரபன். படகில்போகும் போதே அவனுக்குப் பலவித யோசனைகள் கிளம்பி அவன் சிந்தையைச் சிதற அடித்துக் கொண்டிருந்தன. ''க்ஷத்ரபன் சித்தரஞ்சனி திருமண நாளையும் குறிப்பிட்டால் அதைத் தடுக்கசாதவாகனன் கண்டிப்பாய்வருவான். அவன் வரும்போது அவனை வரவேற்க நான் சித்தமாக இருப்பேன். எதற்கும்கோட்டையை அடைந்ததும் அவளைக் காவலில் வைக்கிறேன்'' என்று எண்ணிக் கொண்டே கோட்டையை அடைந்த நாகபாணன் சித்தரஞ்சனியை உடனடியாக அழைத்து வருமாறு பணி மக்களுக்கு உத்தரவிட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் வந்த பணி மகளொருத்தி ''நேற்றிரவு நதிக்கரை சென்ற சித்தரஞ்சனி திரும்பவில்லை'' என்று அறிவித்தாள்.

''நதிக்கரையிலிருந்து திரும்பவில்லை?'' நாகபாணன் சீறினான்.

''இல்லை.''

''எங்கு போனாள்?''

''அக்கரைக்குச் சென்றதாகப் படகோட்டி சொன்னான்.''

''யாரும் தேடவில்லை?''

''இல்லை.''

''ஏன்?''

''எங்கு போனாலும் அரசகுமாரியைத் தடை செய்ய வேண்டாமென்றும், விசாரிக்க வேண்டாமென்றும் தாங்கள் உத்தரவிட்டதாகச் சொன்னார்கள்.''

தான் அளித்த சுதந்திரத்தை சித்தரஞ்சனி நன்றாக உபயோகப்படுத்திக் கொண்டதை உணர்ந்த நாகபாணன் தனது வாழ்வில் முதன் முதலாகப் பூர்ணமான குழப்பத்தில் ஆழ்ந்தான். அன்று நீராடிய போதும், உணவருந்திய போதும் சிந்தனையிலேயே காலம் கழித்தான். எதிர்க்கரையிலிருந்து சென்றுவிட்ட மக்களுக்குப் பிசாசு பயம் இருக்கும் வரையில் தான் தனது திட்டத்துக்குப் பயனுண்டு என்பதை உணர்ந்திருந்தான். எப்படியும் கூடிய சீக்கிரம் எனது படைகளைத் தாபோல்பகுதியில்இறக்கிவிட்டாலொழியத் தனது சாம்ராஜ்யக் கனவு பலிக்காதென்பதையும் புரிந்து கொண்டதால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானித்தான். எப்படியும் சித்தரஞ்சனியைக் கோட்டைக்குக் கொண்டு வந்து விடுவது முக்கியம் என்ற முடிவுக்கும் வந்தான்.

அன்று மாலையில் இது சம்பந்தமான சிந்தனைகளில் ஈடுபட்டிருக்கையில், க்ஷத்ரபனும் காஷ்டானனும் மரக்கலத்திலிருந்து கோட்டைக்கு வந்து நாகபாணனைப் பார்த்

நஜுபாய் உம்ராபாய், வேலையிலிருந்து 858 நாட்கள் லீவில் இருந்ததற்காக இவர் பெயர் கின்னஸில் இடம் பெற்றுள்ளது. ஒரு நீச்சல் குளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த இவர் இத்தனை நாட்கள் என்ன செய்தார்? வெளிநாடு போய், வேறு வேலை பார்த்துச் சம்பாதித்து வந்திருக்கிறார்! ரொம்ப நாளைக்கப்புறம் இப்போது அதில் '177 நாட்கள் சம்பளத்துடனும், 681 நாட்கள் சம்பளமில்லாமலும் லீவு' என்று அறிவித்துள்ளது இவரது தலைமை அலுவலகம். ஆனால் இந்த அறிவிப்பு வருவதற்கு வெகு நாட்கள் முன்னதாகவே, வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த கையோடு 858 நாட்களுக்கான பைசாவையும் இவர் வாங்கிக் கொண்டு விட்டாராம்!

—'ஸண்டே'-யிலிருந்து: எஸ்.* இந்திரா.



துத் தலை வணங்கினார்கள். காஷ்டானன் சொன்னான், ''மாமனார் என்னை மன்னித்து விட்டார்'' என்று.

''மாப்பிள்ளையும் என்னை மன்னித்து விட்டார்'' என்றான் க்ஷத்ரபன்.

''இனி கல்யாணத்திற்கு நாள் வைக்கலாம்'' என்றான் காஷ்டானன்.

''எனக்குச் சிறிதும் ஆட்சேபணையில்லை'' என்றான் க்ஷத்ரபன்.

நாகபாணனுக்கு உள்ளூர கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு ''காஷ்டானா! உன்னை மாமனார் உதைத்ததைப் பற்றிக் கோபமில்லையா?'' என்று வினவினான்.

''மூட்டைக்குள்ளிருப்பது நான் என்று தெரிந்திருந்தால் உதைத்திருக்க மாட்டார்'' என்றான் காஷ்டானன்.

''க்ஷத்ரபா! உன்னை இவன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல முயன்றானே?'' என்று நாகபாணன் க்ஷத்ரபனை நோக்கிக் கேள்வி ஒன்றைத் தொடுத்தான்.

''அறியாமையால் ஆத்திரத்தில் செய்தார். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்று வாதாடினான் க்ஷத்ரபன்.

சாதாரண சமயமாயின் யாருக்குப் புத்தி மட்டு என்று கேட்டு க்ஷத்ரபன் மீது பாய்ந்து விடக் கூடிய காஷ்டானன் அன்று மௌனமாக நிலத்தில் பார்வையைச் செலுத்தி வெட்கத்துடன் நின்றான்.

அவன் நின்ற நிலையை நோக்கிய நாகபாணன், ''மனைவிக்காக மாமனாரிடம் உதை வாங்கியதையும் பொருட்படுத்தாத வீரன் இந்த காஷ்டானன்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டான்.

அப்பொழுது மெதுவாக காஷ்டானன், ''மகா க்ஷத்ரபரே! முகூர்த்த நாளை குறித்து விடலாமே?'' என்று கேட்டான்.

''அதற்கு முக்கியமான ஒருவர் தேவை'' என்றான் நாகபாணன்.

''ஜோஸ்யர்தானே! இதோ அழைத்து வருகிறேன்'' என்றான் காஷ்டானன்.

''அவர் அத்தனை முக்கியமல்ல'' என்றான் நாகபாணன்.

''தாரை வார்த்துக் கொடுக்க இதோ தந்தை இருக்கிறார்'' என்று க்ஷத்ரபனைக் காட்டினான் காஷ்டானன்.

''அவரை விட முக்கியமானவர் வேண்டும்'' என்றான் நாகபாணன்.

''மாமனாரை விட முக்கியமானவரா!'' வியப்பைக் காட்டினான் காஷ்டானன்.

''ஆம்.''

''யாரது. அத்தனை முக்கியம்?''

''பெண்.''

''பெண்ணா?''

''ஆம்.''

''மணமகளா?''

''ஆம்.''

''அவளுக்கென்ன?''

''அவள்தான் தேவை. அவளைக் காணவில்லை'' என்ற நாகபாணன் நகைத்தான்.

(தொடரும்)



கணேசனுக்கு ஒரு பெயர் — சட்டென்று நிதானம் இழந்து விடமாட்டார் என்று. "மற்றவர்களுடைய கஷ்டத்தைப் புரிந்து கொள்ளப் பழக வேண்டும்!" என்று அவர் அடிக்கடி சொல்வார். "சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்றால், பிறருடைய திருஷ்டி கோணத்தைப் புரிந்து கொள்வது இதயப் பழக்கம்!" என்பார்.

இதோ, ஐம்பது வயதாகப் போகிறது. நிம்மதியான வாழ்க்கை. சிறு வயதில் கற்க ஆரம்பித்த இதயப் பழக்கத்தை இப்போதும் கடைப்பிடிக்கிறார்.

பள்ளி நாட்களில் "சாயந்தரம் உன் வீட்டுக்கு வரேன் கணேசா... காரம் விளையாடலாம்!" என்று ஒரு நண்பன் சொல்வான்... சிறுவன் கணேசன் காத்திருப்பான். "வா கணேசா! கிரிக்கெட் விளையாடலாம்!" என்று வேறு நண்பர்கள் அழைத்தால் மறுத்துவிடுவான். "இன்னிக்குக் காரம் ப்ரோக்ராம் ஃபிக்ஸ் பண்ணியிருக்கேன்!" என்பான். சொன்னபடி வராத நண்பனுக்காகக் காத்திருந்து காத்திருந்து அலுப்புத் தட்டும் போது கூட கோபம் வராது. மறுநாள் அவனைக் காணும்போது, "நீ ஏன் சொன்னபடி வரலே? ஏதாவது கஷ்டமா?" என்பானே தவிர, "உன்னால் எனக்குக் கஷ்டம்!" என்று சொல்ல மாட்டான்.

கல்லூரி நாட்களிலும் இந்தக் குணம் நீடித்துத் துணை நின்றது.

காலம் சுழன்றது. வேலை கிடைத்தது. சுமதியை மணந்து கொண்டான்.

எதிர்பாராமல் ஒரு சிக்கல். "பெண்ணுக்கு இருபது சவரன் நகை போடுகிறேன்" என்று சொன்ன மாமனார் கையைப் பிசைந்தார். "நினைச்சதுக்கு மேலே செலவாயிடுத்து சம்பந்தி! பதினாறு சவரன்தான் இப்போ போட முடிஞ்சுது!" என்று அவர் இழுத்தபோது கணேசனின் தந்தை ஆவேசமாய் எழுந்தார். கணேசன்தான் அவரைக் கையமர்த்தினான். "சரி சார்! மீதி நாலு சவரனை உங்களுக்குச் சௌகரியப்பட்டபோது போடுங்கோ!" என்றான்.

"டேய் கணேசா! ஏமாத்து வித்தையடா இது!" என்று எச்சரித்த தந்தையிடம் "அவர் ஏனப்பா ஏமாத்தப் போறார்? சுமதி அவருடைய பெண். அவளுடைய சுகதுக்கத்தில் அவருக்கு இல்லாத அக்கறையா" என்று அவரைச் சமாதானப்படுத்தினான்.

காலப்போக்கில் இரு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். வளர்ந்தார்கள். இருவருக்கும் பள்ளி நாட்களில் கிரிக்கெட் மட்டை வாங்கித் தந்தார். கால் பந்து வாங்கித் தந்தார். ஸ்கூலுக்குப் போக வர சைக்கிள் வாங்கித் தந்தார். "நாலு பேருக்கெதிரே பையன்கள் தலைகுனியக் கூடாது சுமதி.... நம்மிடம் பயந்து கொண்டு பேசாமல் இருந்துவிட்டு, உள்ளுக்குள்ளே ஏங்கக் கூடாது!" என்பார். கல்லூரிப் பருவம் வந்தது. பெரியவன் என்ஜினியரிங் படிக்க ஆசைப்பட்டான். படிக்க வைத்தார். அடுத்தவன் படிப்பில் அத்தனை புத்திசாலி இல்லை. "ஜாப் ஓரியென்டட் கோர்ஸில் சேரணும் அப்பா!" என்றான். "உன் இஷ்டம். நீ எது வேணும்னு சொல், சேர்க்கிறேன்" என்றார். "குழந்தை

விதிவிலக்கு

ருக்மிணி பார்த்தசாரதி



கள் மனசில் என்னென்ன ஆசையோ, சுமதி, நம்மால் புரிஞ்சுக்க முடியறதோ இல்லையோ, குத்தம் கண்டு பிடிக்கக்கூடாது!'' என்பார்.

சுமதியிடமும் இதே பரிவும் கனிவும்தான். நளபாகமாகச் சமைத்துப் போடுபவள் என்றாவது உப்புப் போட மறந்தாலும் அவருக்குக் கோபம் தூள் பறக்காது. அலுவலகத்திலிருந்து திரும்பும்போது, வாசல் கதவு பூட்டியிருந்தாலும் அவருக்குக் கோபம் வராது. களைப்போடுவாசல்படியில்அமர்ந்து, பொறுமையாக அவள் வருகைக்காக காத்திருப்பார். ''என்ன சார், மிஸஸ் வீட்டைப் பூட்டிசாவியோடுபோய்விட்டாளா! அடடா! என்ன இன்கன்வீனியன்ஸ்!'' என்று யாராவது விஷமத்தோடு பரிந்து பேசினாலும்கூட அவர் நிதானம் இழக்காமல் பதிலளிப்பார். ''நான் வர சமயம் அவளுக்குத் தெரியாதா என்ன? போன இடத்தில் எதிர்பாராத டிலே ஆகியிருக்கும். வந்துவிடுவாள்!'' என்பார். அவர் முகத்திலிருக்கும் அமைதியே கேட்டவரை வெட்கித் தலை குனியச் செய்யும். சிறிது நேரத்தில் டாக்ஸியிலிருந்து சுமதி இறங்கி, ''ரொம்ப நேரமாகக் காக்க வெச்சேனா? எதிர் வீட்டுப் பெண்ணுக்கு நாலு மணிக்கு இடுப்பு வலி ஆரம்பிச்சுடுத்து. வீட்டில் யாருமில்லை. அவளுக்குத் துணையாய் ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கே நேரமாயிடுத்து!'' என்று சொல்லும்போது,



''எனக்கு ஒரு சிரமமுமில்லை, சுமதி!'' என்பார், மலர்ந்த முகத்தோடு.

காலையில் எழுந்து பல் துலக்கி முகம் கழுவிய பிறகு பேப்பரைப் பிரித்து வைத்துக் கொண்டு கணேசன் அமர்ந்தாரானால் அரை மணி நேரம் சமாதி நிலைதான். சுடச்சுட காப்பியை அருகே வைத்துவிட்டுச் சுமதி போய்விடுவாள். அதைப் பருகிவிட்டு, டம்ளரை வைப்பாரே தவிர, காப்பியைப் பற்றி விமரிசனம் எதுவும் கிடையாது.

அன்று காலை கணேசன் முகம் கழுவிக் கொண்டு வந்தபோது சாதாரணமாக வராந்தா கதவுக்கு நாலு அடி உள்ளே விழுந்து கிடக்கும் தினசரி அதன் இடத்தில் இல்லை.

''சுமதி! சுமதி!'' என்று குரலெடுத்துக் கூவினார் கணேசன்.

''என்ன?''

''பேப்பரை நீ எடுத்தியா?''

''இல்லையே?''

''பையன்கள்?'' அவர் குரலில் ஓர் இறுக்கம்.

''ரெண்டு பேரும் இன்னும் எழுந்திருக்கவே இல்லை!''

''நிற்கிறாயே! வேலைக்காரியைக் கூப்பிட்டுக் கேளேன்!'' அவர் குரலில் இப்போது ஒரு பொறுமையின்மை.

''நான் பார்க்கலியே அம்மா!'' என்றாள் வேலைக்காரி..

''சுமதி!பேப்பர் விழுந்த சத்தம் கேட்டதா உனக்கு?''

''நீங்க சொல்லறச்சேதான் தோணறது. சாதாரணமா தோட்டக் கதவு திறக்கிற ஓசை கேட்கும். அப்புறம் பேப்பர் தொப்பென்று விழும். இன்னிக்கு ரெண்டுமே கேட்கலையே!''

கணேசனின் முகத்தில் கோபம். ''ராஸ்கல். சோம்பேறி ராஸ்கல். ஸ்பெஷல் ஹெட்லைன்ஸ் இருக்குனு பேப்பரை யானை விலைக்கு வித்திருப்பான்!''

பேசுவது யார்? கணேசனா? இதயப் பழக்கம் பயின்றவரா?

''இருக்காது. பையன் சாது.... ரெண்டு வருஷமாய் ஒரு நாள்கூடத் தவறாமல் டயத்துக்குப் பேப்பர் போடறான். சைக்கிள் பங்க்சராயிருக்கும். லேட்டானாலும்வந்துடுவான்!'' என்றாள் சுமதி.

''பங்க்சர் ஆனால்? வேறு யாரையாவது போடச் சொல்றது. செய்யற தொழிலில் ஒரு கன்னியம் வேண்டாம்? ஒரு இன்வால்வ்மெண்ட் வேண்டாம்? யார் எப்படிப் போனால் என்ன என்று எங்காவது பீடி குடித்துக் கொண்டிருப்பான்!'' பொரிந்து தள்ளினார் கணேசன். குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். தோட்டக் கதவு வரை சென்று பேப்பர் பையன் கண்ணில் படுகிறானா என்று பார்த்துவிட்டு வந்தார். சுமதி காப்பி கொண்டு வந்தபோது ''சாக்கடையில் கொட்டு!'' என்றார். ''இந்த வீட்டில் எதுதான் ஒழுங்காய் நடக்கிறது?'' என்று சிடுசிடுத்தார். உட்கார்ந்தார். எழுந்தார். அமைதியின்றிக்குறுக்கும்நெடுக்குமாக நடந்து கொண்டே இருந்தார்!

ஒரே எழுத்து வித்தியாசம்

ஆந்திரா சென்ற புதிது. 'ஒரு கிலோ வெல்லம் வாங்கி வா' என்று தமிழிலேயே வேலைக்காரனிடம் சொன்னேன். அவனும் சிரித்துக் கொண்டே, ''அல்லம் ஒரு கிலோவா?'' என்று கேட்டு விட்டுக் கடைக்குப் போனான். தமிழுக்கும் தெலுங்குக்கும் அதிக வித்தியாசமில்லை, எளிதாகச் சமாளிக்கலாம் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது, ஒரு கிலோ இஞ்சியுடன் வந்து நின்றான் வேலைக்காரன்! பிறகுதான் புரிந்தது தெலுங்கு 'அல்ல'மும், தமிழ் 'வெல்ல'மும் வெவ்வேறு பொருள்கள் என்று.

— கே. ராஜி கிருஷ்ணசுவாமி, அரியலூர்.

வாய்க்கெட்டாத வேர்க்கடலை

பயிற்சிக்காகக் கரக்பூர் சென்றிருந்த சமயம், ஒரு மாலைப்





வாசகர் பங்கு

திண்டாடிய

பொழுதில் வேர்க்கடலைப் பொட்டலம் ஒன்று வாங்கிக் கொரித்தவாறு விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். எதிரே வந்த சில மாணவிகள், 'மணி என்ன?' என்று விசாரித்தார்கள். மொழி தெரியாததால் ஏற்பட்ட தர்மசங்கடத்துடன் நான் கைக் கடிகாரத்தில் மணி பார்க்கக் கையைத் திருப்பினேன். பொட்டலத்திலிருந்து வேர்க்கடலை கீழே கொட்டியது! மணி நாலரை என்று ஜாடை காட்ட, வலது கை விரல்களை விரித்தேன்; கையில் இருந்த கடலையும் கீழே கொட்ட, மாணவிகள் சிரித்துக் கொண்டே போய் விட்டனர்.

— க. தனசேகரன், திருச்சி—20.

அசடு வழிந்தேன்

பம்பாய்க்கு மாற்றலாகிப் போயிருந்த புதிதில் குழந்தைக்கு முட்டை வாங்கக் கடைக்குப் போனேன். ஆங்கிலத்தில் 'two eggs' என்று கேட்டது கடைக்காரருக்குப் புரியவில்லை. ஜாடை காண்பித்தும் பயனில்லை. கோழி மாதிரி 'கொக்கரக்கோ' என்று கூவி இரண்டு விரல்களைப் பிரித்துக் காண்பித்தேன். உம்ஹூம்....! கடைசி முயற்சியாக அருகிலிருந்த சிலேட்டில் கோழியையும் முட்டையையும் வரைந்து காண்பித்தவுடன் ''தம்பி இரண்டு முட்டை கொண்டு வா'' என்று அந்தத் திருநெல்வேலி கடைக்காரர் தமிழில் குரல் கொடுத்ததும் ஏகமாக அசடு வழிந்தேன்.

எஸ். நாராயணன், பம்பாய்—25.

பந்தி உபசாரம்!

திருச்சூரில் நடந்த என் நண்பனின் திருமணத்தில் உணவு பரிமாறி உதவப் போனேன். அப்பளத்தை எடுத்துக்கொண்டு போய்ப் பந்தி விசாரித்தேன். ''பப்படம் ஒந்நு காட்டியே'' என்றார் ஒரு பெரியவர். நானும் பெரிதாக ஒரு அப்பளத்தைத் தூக்கி அவரிடம் காட்டினேன். அருகே நின்ற தமிழர் ஒருவர் விளக்கினார், அப்பளம் ஒன்று வேண்டும் என்பதையே அவர் அப்படிக் கேட்டார் என்று. அந்த நிகழ்ச்சியை நினைத்தால் இன்றும் சிரிப்பு வருகிறது.

—கு. ஆனந்தன்,
திருச்சி—1.

ரயிலைக் கோட்டை விட்டேன்!

சென்ற பிப்ரவரியில் நாக்பூர் போன சமயம். வேலை முடிந்து மதியம் 12.00 மணிக்குச் சென்னை செல்லும் G.T. ஐப் பிடிக்க வேண்டும். ரயில்வே ஸ்டேஷனில் சில பழங்களை வாங்கி

னேன். அவற்றை ஒரு ரிக்ஷாக்காரனிடம் காட்டி 'மார்க்கெட் ஜாவ்' என்று எனக்குத் தெரிந்த ஹிந்தியில் 'fruit market' போக வேண்டும் என்று சொன்னேன். அதே அரைகுறை இந்தியில் பழக்கடைக்காரனுடன் பேரம்பேசி அவன் ஒருபெட்டிதிராட்சை ரூ.35 என்று சொன்னதை நான் ரூ. ·50 என்று புரிந்து கொண்டு வாங்கி ஸ்டேஷன் வந்து சேர்ந்தால் G.T. புறப்பட்டுப்போய்விட்டது!

— ஜி. நடராஜன், மதுரை—6.

ஏக், தோ, தீன்!

முதன் முறையாகக் கல்கத்தா போயிருந்த சமயம் ஹௌரா செல்லும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டு கண்டக்டரிடம்

அனுபவம்

ஐந்து ரூபாய் நோட்டை நீட்டி 'ஹௌரா ஏக்' (ஒரு ஹௌரா) என்றேன். அவர் பதிலுக்கு "குஜராதீன்" என்று சொல்ல, நான் "ஹம் ஏக் ஹை அவுர் குஜரா நஹி ஜாதா, ஹௌரா ஜானு



ஹை" (நான் ஒருவனே இருக்கிறேன். ஹௌரா போக வேண்டும், குஜராவுக்கு இல்லை) என்றேன். கண்டக்டர் உள்பட பஸ்ஸே சிரித்தது. நான் திருதிருவென்று விழிக்க, ஆங்கிலம் அறிந்த ஒருவர் விளக்கினார். 'குஜரா தீன்' என்றால் குஜராவுக்கு மூன்று டிக்கட் என்று அர்த்தம் இல்லை; சில்லறை கொடு என்று பொருள்.

— ஏ. வி. சுந்தரராஜன், சென்னை—90.

திக்குத் தெரியாமல் தேடி...

என்.ஸி.ஸி. கேம்புக்காகக் குஜராத்தில் இருந்தபோது ஒரு நண்பனுடன் உறவினர் ஒருவர் வீட்டுக்குப் போகக் கிளம்பினேன். ஒருவரிடம் வழி விசாரித்தோம். அவர் நாங்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பஸ்ஸில் ஏறிப் போகும்படி சொன்னார். அப்படிப் போய்ச் சேர்ந்த இடத்தில் இறங்கிப் பார்த்தால் அது நாங்கள் முதலில் புறப்பட்ட இடமே தான் என்று தெரிந்தது! இதைப் போல் இரண்டு முறை செய்தோம்! அலுத்துப் போய்ப் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தோம். சிறிது நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வந்த அந்தவீட்டுக்காரரைப்பார்த்து திகைத்தோம். நாங்கள் தேடிச் சென்ற நபரே அவர்தான்!

— எம். கே. செல்வம், ராணிப்பேட்டை.

வாண்டுகளிடம் கற்ற ஹிந்தி!

நாங்கள் அஸ்ஸாமில் இருந்த போது எங்களுடன் சில நாட்கள் தங்க வந்தார் மாமா. வீட்டிலிருந்த வாண்டுகளிடம் சிறிது ஹிந்தி கற்றுக் கொண்டார். பக்கத்து வீட்டுக்காரர் வந்த போது அவரை மாமாவுக்கு அறிமுகம் செய்து வைத்தோம். "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்பதாக நினைத்து மாமா, "எப்படி குரங்கு மாதிரியே முகத்தை வைத்துள்ளீர்கள்?" என்று ஹிந்தியில் கேட்க, வந்த விருந்தாளி அதிர்ந்து விட்டார். அப்பா அவசர அவசரமாக அவரைச் சமாதானப்படுத்தி விளக்கம் சொல்கையிலேயே மறைவில் நின்றிருந்த எங்கள் வீட்டு வாண்டுகள் சிரிப்பை அடக்க முடியாமல் ஓடிவிட்டனர்!

— ஜி. ஸ்ரீதேவி, சென்னை—14.



மர்மக் குரல்!

பம்பாயில் தனிக்குடித்தனம் இருந்தபோது கணவர் ஆபீஸ் சென்றிருந்த சமயத்தில் யாரோ என் பெயர் சொல்லிக் கூப்பிடுவது போல் தோன்றியது. மெல்ல கதவைத் திறந்து பார்த்தேன். யாரும் இல்லை. கதவை மூடியதும் மீண்டும் கூப்பிடுவது போல் தோன்றியது. பல முறை குரல்

"போனமாசம் செத்துப் போன உன்னோட எழுத்தாளர் பெரியப்பா தன்னோட இரண்டு லட்சத்தை உன் பேர்லே எழுதி வெச்சுட்டுப் போயிருக்கிறாராமே, உண்மையா?"

"உண்மைதான். ஆனா இரண்டு லட்சம்கிறது அவரோட சொத்து மதிப்பு இல்லே. அவர் எழுதிய நாவலோட பெயர்!"

— அருண் குமார்.



கேட்கவே ஒன்றும் புரியாமல் விழித்தேன். கணவர் வந்ததும் விஷயத்தைச் சொன்னேன். உடனே அவர், "வாசலில் வெங்காய வியாபாரி வந்தாரா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றதும், "அடபே, வெங்காயத்திற்கு ஹிந்தியில் 'காந்தா' என்று பெயர்" என்று விளக்கியதும் மர்மம் விடுபட்டது.

— எஸ். காந்தா, சென்னை—44.

கணவன் எத்தனை?

பெங்களூரில் காலார நடந்து கொண்டிருந்தேன். எதிரே வந்த பெண்ணிடம் மணி கேட்க, "கண்டா எஷ்டு" என்றேன். அவள் என்னை அடிக்காத குறைதான்! வசைமாரிப் பொழிந்து விட்டாள்! விஷயம் புரியாமல் நண்பனிடம் கேட்டபோது, அவன் சொன்னான். 'கண்டா எஷ்டு' என்றால் 'கணவன் எத்தனை' என்று பொருள். 'மணி என்ன' என்பதற்கு 'கண்டே எஷ்டு' என்று கேட்க வேண்டுமாம்!

— பரமசிவன், பெங்களூர்—11.

பசிக்குக் கிடைத்த லேகியம்

கர்நாடகா டூரின் இடையே சரவண பெளகொளா அருகே பஸ் பிரேக் டவுன் ஆகிவிட்டது. பசி வயிற்றைக் கிண்டவும், ஒரு கன்னடக்காரரிடம் சாப்பிட ஏதேனும் கிடைக்குமா என்று சமிக்ஞையில் வயிற்றைத் தொட்டுக் காண்பித்துக் கேட்டேன். அவர் சிரத்தையாக என்னை அழைத்துப் போய் ஒரு கிழவரின் வீட்டில் விட்டு, அக் கிழவரிடம் ஏதோ சொன்னார். சாப்பிட ஏதாவது கிடைக்கும் என்று நான் சந்தோஷமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது கிழவர் உள்ளே போய்க் கையில் கொஞ்சம் லேகியத்துடன் திரும்பினார். எனக்கு வயிற்று வலியில்லை என்று எவ்வளவோ நான் சைகை மூலம் சொல்லியும் அவர்கள் புரிந்து கொள்ளாததால் லேகியத்தைச் சாப்பிட்டுவிட்டுப் பசியுடன் நான் பட்ட அவஸ்தையை மறக்க முடியாது.

— மு. கண்ணுசாமி, அப்பநாயகன்பட்டி.

அபிநயம் கைகொடுத்தது

பம்பாயில் குடித்தனம் வைத்த சில நாட்களுக்குள் சட்னிக்குப் பொட்டுக் கடலை வாங்கப் போனேன். இந்தி தெரியாததால் ஒரே தடுமாற்றம். கடைக்காரரும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு என்று எல்லா 'டால்' வகைகளையும் காண்பித்துவிட்டார், பொட்டுக் கடலையைத் தவிர. திடீர் யோசனை தோன்ற அம்மியில் சட்னி அரைப்பது போல் 'அபிநயம்' செய்து காட்டினேன். "ஓ! சட்னி டால்" என்று கடைக்காரர் உடனே பொட்டுக் கடலையை எடுத்துக் கொடுத்ததும் தான் 'சட்னி' என்ற வார்த்தையை முன்னமே சொல்லாமல் போனேமே என்று தோன்றியது.

— ஹேமா நாராயணன், பம்பாய்—71.

ஹிந்தி வேறு, குஜராத்தி வேறு

வேலை நிமித்தம் அடிக்கடி வடநாடு செல்பவன் நான். சமீபத்தில் குஜராத்தில் ஜாம் நகரில் ஒரு விலாசத்தைத் தேட நேர்ந்தது. யாரைக் கேட்டாலும் குஜராத்தியில் தான் பதில் கிடைத்தது. நாகரிகமாக உடை அணிந்திருந்த ஓர் இளைஞனை நிறுத்திக் கேட்டேன். அவன் பேப்பர், பேப்பர் என்று கேட்டதும் சந்தோஷமாக எடுத்துக் கொடுத்தேன். அவனும் பொறுமையாக, விவரமாகக் குஜராத்தியில் நான் சொல்ல வேண்டிய இடத்தை அடைவது எப்படி என்று குறிப்பு எழுதிக் கொடுத்தான்! தப்பு என் பெயரில்தான். முதலிலேயே நான் 'ஹிந்தி நைமாலும்' என்று அவனை எச்சரித்திருந்தால் நான் குஜராத்தியில் பாண்டியத்தியம் உடையவன் என்று அவன் நினைத்துவிட்டிருந்தான்!

— எஸ். கிருஷ்ணசுவாமி, சென்னை—85.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

சே. ராஜி கிருஷ்ணசுவாமி,
D/2, அரசு நகர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
அரியலூர்.



போட்டிக் கதை—12.

விலிக தாகம்

"நம்ம சாதியைச் சேர்ந்த இந்தப் பொம்பளே கட்டின புருசனைத் தீர்த்து விட்டுட்டு, நடத்தை கெட்டுத் திரிஞ்சதும், இப்ப வேத்து சாதிக்காரன் ஒருத்தனைச் சேர்த்து வச்சுக்கிட்டதும் இங்கேயுள்ள எல்லாருக்கும் நல்லா தெரியும்....."

குண்டும் குழியுமான அழுக்கடைந்த பெரிய கடை வீதியின் வால். உள்ளே நடப்பதே சாலேக்குத் தெரியாமல் மறைக்கும் உயர்ந்த கல் மதில். அதன் வயிற்றைப் பிளந்து நின்ற இரட்டைக் கம்பிக் கதவருகே தடியன் ஒருவன் காவல் இருந்தான்.

"........... அவனை விட்டுட்டு வந்திருன்னு நாங்க பல தடவை நேரில் சொல்லியும் இவள் கேட்கலே. உறவு முறை பல தடவை இங்கே வரச் சொல்லிச் சொன்னதுக்கும் கட்டுப்பட்டு இவ வரலே. அதனுல்தான் இன்னிக்கு அவளை இழுத்துக்கிட்டு வந்தோம் ....



அடிக் கதவிலிருந்து துவங்கிப் பத்துப் படிகள். பதினோராவது படி ஆத்தங்குடி டைல்ஸ் பதித்த சமதரை. யானைக் கால் இரட்டைத் தூண்களை இணைக்கும் அரை வட்ட விதானங்கள்.

அமர்ந்திருப்பவர்களில் நிழல் விழாத அளவு குழல் விளக்குகளின் ஒளி வெள்ளைச் சுவர்களின் எதிரொலிப்பில் பன் மடங்கு பெருகிற்று.

"......... இவ அவனோட வாழ்றதால மத்த சாதிக்காரங்க நம்ம முதுகுக்குப் பின்னால் கேவலமா பேசுறாங்க. இவள் இன்றை யிலிருந்து அவனை விட்டு வெலகித் தனியா வந்திடணும். இனிமே இவளுக்கும் அவனுக் கும் எவ்வித தொடர்பும் இருக்கக் கூடாதுன் னும் உறவு முறை உத்தரவிடணும்....."

முழங்கி அமர்ந்தான் ஒரு சின்னப் புத்தி.

அவர்கள் எதிரே சந்தன மரக் கடைசல் தேகம். இடுப்பில் சைக்கிள் டியூப் வளைவு. சாயம் போன முரட்டு நூல் சேலையை இழுத் துப் போர்த்தியும் மறைக்க முடியாது கழுத் தருகே துவங்கிய திமிறிக் கொண்டிருக்கும் மார்புகள். இளமை எழிற் பூரிப்பில் ஏழமை விலும் அழகுத் தேவதையாய் நின்றிருந்தாள் சயிலா.

போலீஸ் ஸ்டேஷனை அடுத்துத் துவங்கி விடும் கடை வரிசைகளின் இடையே தெரிந்த சந்தில் புகுந்தான் மாதவன்.

தோளில் புரண்டு சிணுங்கிய குழந்தை யைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, மார்க் கெட்டின் சில கடைகளைக் கடந்து மெலி தான துர்நாற்றம் சூழ்ந்த கடையின் முன் னால் நின்றான். பட்டரைக் கல் போன்ற அகன்ற வட்டமான அடி மரத் துண்டுகள் சிறிதும், பெரிதுமாய் மூன்று நான்கு கிடந் தன.

மேற்கூரையிலிருந்து தொங்கிய கயிறு களின் முனைகளில் பெரிய தூண்டில் முள் கொக்கிகள். கடையின் உட்பகுதி இருண்டிருந் தது. மெல்ல உள்ளேறி, உடம்பில் உஷ்ணம் துரித ஓட்டமாய் விரைய எதையோ தேடி னான்.

எடுத்ததை இடையில் மறைத்துக் கொண்டே வெளியே வந்து, சாலையோடு செல்லாமல், கந்தன் பெட்டிக் கடைக்கும் திருத்தளி நாதர் கோவில் சுண்ணாம்பு, செம் மண் பட்டை மதிலுக்கும் நடுவேயுள்ள புல் தரையில், உச்சி வகிடாய்க் கிடந்த ஒற்றை யடிப் பாதையில் குழந்தையைத் தோள் மாற்றிப் போட்டுக் கொண்டு நடையைத் துரிதப்படுத்தினான் மாதவன்.

இதே பாதைதான்!

இதே நேரம்தான்!

அன்றும் வானில் இதேபோல் எருமைக் கொம்பு நிலா கிடந்த இரவுதான்.

அர்த்த ஜாமப் பூஜை முடிந்து, திருக் கதவும் சாத்தி, பூட்டி மடியில் சாவிக் கொத்து குலுங்க பேஷ்கார் மாதவன் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதுதான்,

அது நிகழ்ந்தது.

தென்னங்கீற்றுகள் குறை மதியுடன் கண்ணாமூச்சியாட, கழுவித் துடைத்து, நட் சத்திர விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்ட கரு நீல வானில், பார்வை எங்கோ நிலை குத்தி இருக்கத் தூணோடு தூணாக நின்றாள் சயிலா.

மாதவன் —

'மாண்புகளின் மொத்த உரு. பெற்றோர், உற்றார், பதவி, பரம்பரைச் சொத்து அனைத் தையும் ஒதுக்கி விட்டு என்னையே சதம் என்று கட்டிய வேட்டியோடு வந்த தேவன். அரை வயிறு, கால் வயிறு நனைத்து, நிலவின், சூரிய னின் ஒளிக் கற்றைகள் தரையை முத்தமிடும் குடிசையில் வாழ்ந்து என்னிடமும், என் குழந்தைகளிடமும் தேவதா விசுவாசம் காட்டும் மாமனிதன்.'

எண்ணி, எண்ணிக் கசிந்துருகிக் கண் ணீர் மல்கிய நாட்கள் பல உண்டு.

நீண்ட நெடுமூச்சொன்று அவள் நெஞ்சை நிறைத்து உயர்த்தி, வழிந்து தாழ்த்தியது.

"நீ என்னம்மா சொல்றே?"

மாதவனை முற்றுகையிட்டிருந்த நினைவும், வானில் பதிந்திருந்த அவள் பார்வையும் கல்லடிபட்ட பறவையாய்த் தரையிறங்கின.

நாகரிகமான பேச்சும், போக்கும் இவன் களுக்கு ஒத்து வராது.

"நான் பதில் சொல்ல வேண்டிய அவசி யம் இல்லே."

கூட்டத்தில் சலசலப்பு. சிலர் கையமர்த்து கிறார்கள்.

".......... ஆனா ஒங்க தொந்தரவுக்கு ஒரு முடிவு கட்டணும்கறதுக்காக நான் பதில் சொல்றேன்.

எவனையும் பார்க்காமல் விட்டேற்றியாகப் பார்வையை எங்கோ எறிந்தபடி பேசினாள்.

"என்னைக் கட்டிக்கிட்ட ஒங்க சாதிக்காரர் எனக்குப் போட்ட நகைகளையும், கொடுத்த சீர் வரிசையையும் குடி, கூத்தியா, சூதுன்னு ஒரு வருசத்துலேயே போக்கடிச்சதும் ஒங்க எல்லாருக்கும் நல்லாத் தெரியும். வித்துக் குடிக்க ஒண்ணுமில்லாமல் போகவே என்னை யும் விக்கத் துணிஞ்சிட்டார். வீட்டுலே மிஞ்சி இருந்த பிள்ளையை மட்டும் தூக்கிக்கிட்டு வெளியேறிட்டேன்.

"ஒங்க சாதிக்காரர்கள் பலர் கிட்டே வேலை கேட்டேன். வேலை கொடுத்துக் கூலி தர விரும்பாத அவங்க என் உடம்பை வாடகைக்குக் கேட்டாங்க. இரவு, பகலா தொந்தரவு. பிழைக்க வழி தெரியலே. பட் டினி கிடக்க முடியலே. பிள்ளை எப்படி யாவது பொழைச்சுக்குவானிட்டு, ஒரு நாள் ராத்திரி, நான் ....

"**தொ**பீல்!!"

சிதனிக் குளத்துக்குள் பெரிதாக ஏதோ விழுந்த ஓசை. மாதவனின் நினைவோட்டத் தைச் சிதறடித்து, திடுக்கிட வைத்தது. சத்தம் வந்த இலக்கை நோக்கி ஓடினான். எட்டிப் பார்த்தான்.

நிலவொளியில், தெப்பக் குளத்தில் ராட் சத முறுக்குகளாய் அலை எழும்ப ஓர் உருவம் நீர்ப் பரப்புக்கு மேலே வருவதும், இணறலு டன் அமிழ்வதுமாயிருந்தது.

"ஐயோ,
பயமாயிருக்குடா...
வில்லன்
வந்துட்டான் !"



அண்ணனும் தங்கையும் டிவியில் எந்த ஒரு திகிலூட்டும் படத்தையும் பார்க்காமல் விடுவதில்லை!

தன்னந்தனியாக ஆடும் நாற்காலியில் ஒரு மூதாட்டி. அவளறியாமல் அடிமேலடி வைத்து வரும் ஒரு கொலையாளி. ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு ஓசையும் இக்குழந்தைகளை என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்ற மனத்தின் உச்சக் கட்டத்திற்கே இட்டுச் செல்கின்றன!

அதுவே ஸியர்ஸ் கலர் டிவி செய்யும் மாயம்!

கண்ணெதிரேயே நடைபெறுவது போன்ற தத்ரூபமான காட்சிகள் கண்கவரும் இயற்கையான வண்ணங்கள்.

ஒலியோ ஒரு அபாரமான அனுபவம். ஸியர்ஸ் டிவியில் கேட்கும் குரல் உங்களை நாற்காலியின் விளிம்பிற்கே கொண்டு வரும் துல்லியம்!

ஸியர்ஸ் டிவி மிகச் சிறந்த அயல் நாட்டு டிவி தொழில் நுட்பத்தோடு தயாரிக்கப்படுகிறது.


மேலும், ஒவ்வொரு தயாரிப்பு நிலையிலும் ஸியர்ஸ் டிவி கடுமையான தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப் படுகிறது.

இந்த உயர்தரம்தான் ஸியர்ஸ் கலர் டிவியில் நீங்கள் நிகழ்ச்சிகளைக் காணும்போது அவை நேரில் நடைபெறும் நிஜக்காட்சிகளைப் போலவே தோன்ற வைக்கிறது.

தத்ரூபமான வண்ண ஒளியும், செவிக்கினிய ஒலியும் ஒருங்கே இணைந்து ஸியர்ஸ் கலர் டிவி சாதித்திருப்பதென்ன?

ஸியர்ஸ் டிவியை இன்றே கண்டு, கேட்டு அந்த சுகானுபவத்தைப் பெறுங்கள்!

ஸியர்ஸ் டிவியில் எது நிகழ்ந்தாலும் அதோடு மெய்மறந்து ஒன்றிடுவீர்!



SEARS ELCOT

123, A/3 லாட்டிஸ் பிரிட்ஜ் சாலை
திருவான்மியூர், சென்னை 600 041

Sista's - ST.358.85 TM

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி


கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் ப்ரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

இடுப்பில் தொங்கிய சாவிக் கொத்தைப் பிடுங்கித் தரையில் வீசிவிட்டுக் குளத்தினுள் சரேலெனப் பாய்ந்தான். உருவத்தைப் பற்றித் தூக்கினான்.

கைகளும் கால்களும் கட்டப்பட்டு ஒரு பெண். சற்று முன் கரையில் இவன் வேறு யாரையும் பார்க்கவில்லையே. எனில், தன்னைத் தானே கட்டிக் கொண்டு விழுந்திருக்கிறாள். தற்கொலை!

அவள் விழுந்தவுடன் தூக்கியதால் அவளுக்கு ஆபத்தின்றிப் போயிற்று.

அளப்பரிய துன்பம் அனைத்தும் அவளை ஆட் கொண்டாற்போல் தன்னைத் தானே நொந்து கொண்டு புலம்பினாள். அவள் மேனியில் தண்ணீரோடு, கண்ணீரும் வழிந்தது. அழும் வேகம் தணியக் காத்திருந்தான் அவன்.

தன்னைக் காப்பாற்றியதற்கு உண்மையிலேயே அவள் கோபித்துக்கொண்டு வருத்தமுற்றாள்.

அழுகையினூடே இவன் வற்புறுத்தலுக்காகத் தன் கதையைச் சொன்னாள்.

உருகிப் போனான் மாதவன். அனுதாப வார்த்தைகள், ஆறுதல் மொழிகள். தன் சட்டைப் பையைக் காலி செய்து சில்லறைகளையும் நனைந்த நோட்டுக்களையும் வழித்து நம்பிக்கையூட்டி அவள் கரங்களில் திணித்தான். மீண்டும் இத்காரியத்துக்கு முயல வேண்டாமெனக் கூறி அவளை அனுப்பி வைத்தான்.

கண்ணீரில் மிதந்து பரிதவித்த, நிலவொளியில் பளபளத்த அவள் விழிகள் அவனுள் அடிக்கடி தோன்றி அவனை ஆக்ரமித்தன. அமைதியிழந்தான்.

நிரந்தரமாக வருமானம் தரும் வகையில் அவளுக்கு எவ்வகையிலாவது உதவ எண்ணினான் மாதவன்.

நான்கு இரவுகளுக்குப் பிறகு,

அதே பாதை, அதே நேரம். அவளை அங்கேயே மீண்டும் சந்திப்போம் என்று அவன் நினைக்கவே இல்லை.

அவள் தோளில் கிடந்த குழந்தை அக்கினிக் குஞ்சாய்க் கொதித்தான். மருத்துவரிடம் காட்டி விட்டுக் குடிசை அருகே அவளைக் கொண்டு போய்விட்டபோது கிழக்கே வானம் ஆரஞ்சு வண்ணம் பெற்று விட்டது.

இரண்டு நாட்களுக்கொருமுறை தேடிச் சென்று அவள் வாங்க மறுத்தும் செலவுக்குக் கொடுத்து வந்தான். வாசலோடு சரி. ஊர் ஒரு மாதிரி பார்த்தது; பல மாதிரி பேசியது.

ஒரு நாள் கண்மாய்க்குள் தாறுமாறாகக் கிடந்த குடிசைகள் யாவும் வெந்து தணிந்து போயின.

பதறியடித்துக்கொண்டு குடல் தெறிக்க ஓடி வந்தான் மாதவன்.

அவளைத் தேடி... தேடி...

ஜனத்திரளில் நீந்தி...

ஒதுக்குப்புறமாக ஒரு பனை மரத்தடியில் மகனை அணைத்தபடி அவள் கதறிக் கொண்

திருப்பம் ஏற்படுத்திய புத்தகம்

போட்டி: 29

நீங்கள் எத்தனையோ புத்தகங்களைப் படித்திருக்கலாம். ஆனாலும் ஏதாவதொரு புத்தகம்தான் உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை அல்லது தன்னம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும். அந்தப் புத்தகத்தின் தலைப்பையும், நூலாசிரியர் பெயரையும் குறிப்பிட்டு எந்த விதத்தில் அந்த நூல் உங்களைப் பாதித்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தையும் முழுமையாகக் கத்தரித்து எங்களுக்கு அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர, ஒருவருக்குக் குலுக்கல் முறையில் விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் 'திருப்பம் ஏற்படுத்திய புத்தகம்' என்று தவறாமல் குறிப்பிடுங்கள்.

முடிவு தேதி: 2.12.85

உங்களுக்காக இன்னும் 24 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் காத்திருக்கும்போது ஒன்றாவது உங்களை வந்து அடையாதா என்ன? வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள். வெற்றி நிச்சயம்!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

ஸ்தாபிதம் 1942 போன் 2379

'சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு'

கும்பகோணம் லலிதா பார்மஸி

(D. L., No - 40)

157, பட்டமங்கலத்தெரு மயிலாடுதுறை PIN. 609001

பிராஞ்ச், 39, ரெங்கனுதன்தெரு தி. நகர்,
சென்னை - 17 போன் No. 441454

105, கச்சேரிரோட், மயிலாப்பூர், சென்னை – 4
போன் No. 73007

'எமது விசேஷ தயாரிப்புகள்'

(1) மதுயஷ்டி தைலம்'' கூந்தல் வளர்ச்சிக்கு உதவ''

(2) நீலிபிருங்காமலக தைலம்'' அகாலநரை, செம்பட்டை, கேச வரட்சியை போக்கி கூந்தலுக்கு கருமையும் குளிர்ச்சியும் தர

(3) யௌவநீ ரஸாயனம்'' ஆண்களுக்கான சிறந்த டானிக்

நாவின் சுவையிருக்கும் வரை பி ஆர் நெய் நினைவிருக்கும்!

''நான் எப்பவுமே உபயோகிக்கிறது **பி.ஆர்**.நெய்தான். காரணம், என் குடும்பத்திலே எல்லாருக்குமே **பி.ஆர்**.நெய்யோட மணமும் சுவையும் தான் பிடிக்கும்.

எங்கம்மா காலத்திலுருந்தே **பி.ஆர்**. நெய்யோட தரமும சுவையும் எங்க குடும்பப் பழக்கமாயிடுச்சு.''

விநியோகஸ்தர்கள்:
பி. ராமலிங்கம்
மாதுங்கா,
பம்பாய்-400019
போன்: 472077

ஸ்ரீ இராமுலு ஸ்டோர்ஸ்
332 காந்தி சாலை,
காஞ்சிபுரம்



MOULIS 113.89

டிருந்தான்.

ஓடிச் சென்று குழந்தையைப் பாசப் பெருக்கோடு வாரியணைத்துக் கொண்டான். அவளையும் சேர்த்துத்தான்.—

புத்தம் புது மலர்களாய்க் குடிசைகள் மீண்டும் பூத்தன. சயிலாவின் சேர்க்கையால் மாதவன் சகலத்தையும் இழந்தான்.

சயிலாவுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. தந்தை பெயர் மாதவன் என்று எழுதப்பட்டது.

அவனைக் கண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டவர்கள் அவர்களைப் பிரிக்கத் தீர்மானித்தனர்.

மாதவன் வெளியூர் சென்றிருப்பதை அறிந்து, 'சாதிக் கூட்டம்' என்ற பெயரில் அவளைத் தள்ளிக் கொண்டு வந்துவிட்டனர்.

தடுக்க முயன்ற பக்கத்து வீட்டுக்காரர்களை, 'இது எங்க சாதி விவகாரம். நீங்க தலையிட்டால் சாதிக் கலவரம் வரும்' என்று பயமுறுத்தி விலக்கினர்.

''நடந்ததை விடு. அவனை விட்டுட்டு வருகிறதைப் பத்தி என்ன சொல்லுற?''

''உங்க ஜாதிக்காரரான என் மாஜிக் கணவருடைய ஒழுக்கக் கேட்டால வந்தது தானே இந்த நிலை. நீங்க அவரை விசாரிச்சல்ல அவருக்குத் தண்டனை கொடுத்திருக்கணும். நாங்க பட்டினி கிடந்த போது உதவ வராத உங்க ஜாதி இப்ப நாங்க வயிறார உண்டு மனசார வாழ்றதைப் பொறுக்க மாட்டாமல், கெடுத்து மறுபடியும் எங்களை நடுத் தெருவுல நிக்க வைக்கப் பாக்குது. நீங்கள்ளாம் ஒரு குடியைக் கெடுக்கத்தான் சாதி பேரைச் சொல்லிக் கூடுவீங்க. வாழ வைக்க இல்லே.''

''ஏய் அதிகமா பேசறே?''

''நடத்தை கெட்டவனையெல்லாம் இங்கே கூட்டியாந்து பேசச் சொல்றதே தப்பு.''

''நடத்தை கெட்டது யாரு நானு? பேஷ்கார் வர்றதுக்கு முன்னாலே, இங்கே இருக்கறவங்கள்ள எத்தனை பொறுக்கிகள் ராவுல என் வீட்டுக் கதவைத் தட்டிக் கையிலே நான் செருப்போடு கதவைத் திறந்ததும் ஓடுனீங்க. யார்? யாருன்னு சொல்லவா?''

கூட்டத்தில் பலர் நழுவத் தயாரானார்கள்.

''நடத்தைகெட்டவளாம்நடத்தைகெட்டவன். ஒங்க தொல்லை பொறுக்க மாட்டாமத்தானே தற்கொலைக்கு ஓடினேன். நடத்தை கெட்டது நீங்களா? நானு?''

வார்த்தைகளால் இசகு பிசகாக அடித்தாள்.

கூட்டத்தில் பலர் சிரி எழுவதாய் நடிக்க, பெரியவர் ஒருவர் அமைதிப்படுத்தினார்.

''சரி, அதெல்லாம் விடுங்க. இப்ப நீ அந்த ஆளை விட்டு வந்திடணும்னு எல்லாரும் விரும்புறாங்க. முடிவா நீ என்ன சொல்றே?''

பிள்ளையார் கோயில் இருளைப் போர்த்திக் கொண்டிருந்தது. சும்மா இருந்த கதவைத் தள்ளித் திறந்தான் மாதவன். முனகலுடன் அது வழிவிட... தலையை நீட்டி எட்டிப் பார்த்தான். சூழ்நிலை கல்லாக இருந்தது.

மெல்ல உடலை உள்ளே நுழைத்து நிதானமாகப் படியேறினான். டைல்ஸ் தளம் வழுக்கிற்று. தோளில் கிடந்த குழந்தையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான்.

மூலவரின் அருகே சுடர்விட்டுக்கொண்டிருந்த நந்தா விளக்கின் பலகீனமான ஒளி கருக்கிருளில் மஸ்லினைய் விரவி நின்றது.

பலி பீடத்தருகே குழந்தையைப் போர்த்தி இருந்த துண்டை உருவித் தரையைத் தட்டி, விரித்துக் குழந்தையைக் கிடத்தினான். மூத்தவன் வெறும் வயிரோடு குடிசையில் தூங்குகிறது நினைவுக்கு வந்து துன்பம் தருகிறது.

தூண்களில் மோதிக் கொள்ளாமல் மெல்ல நகர்ந்தான். ஆளுயரச் சுவருக்கு அருகே வந்து நின்ற போது, சுவருக்கு அப்பால் யாரோ பேசுவது கேட்கிறது.

மூலையில் கிடந்த கல் ஒன்றைத் தூக்கி வந்து ஓசையின்றிச் சுவரோரம் வைத்து, அதன்மேல் ஏறி நின்று, மெல்லத் தலையை உயர்த்தி, சுவரின் மேற்பரப்பில் கண்கள் மட்டும் தெரியப் பார்த்தான்.

அங்கே...

''உங்களில் யாராவது ஒருத்தர் என்னை ஊரறியக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, என் குழந்தைகளையும் தன் குழந்தைகளா ஏத்துக்கிறீங்களா? நான் வந்திடுறேன்.''

குரலில் கேலியும் இளக்காரமும் இழைந்தோடக் கேட்டாள் சயிலா.

''அதெப்படி முடியும்?'' என்றவளைப் புழுவாய் அளந்தாள்.



''பேஷ்கார் போன்ற மனுசனால் மட்டுமே முடியும்.''

''உன்னைக் கட்டிக்கிறது கேவலம்'' என்றான் ஒரு சின்னவன்.

சரக்கென்று அவனுக்குக் கோபம் வந்தது.

''வாஸ்தவம். வீட்டு வேலைக்கு, வயல் வேலைக்கு, கூலிக்கு வர்ர பொண்ணுகளை நீங்க கையைப் புடிச்சு இழுக்கிறது கேவலமில்லே. அவங்க கிணத்துலே, குளத்துலே மிதக்கிறதுக்கும் மரக் கிளைகள்லே தொங்குறதுக்கும் நீங்க காரணமா இருக்கிறது கேவலம் இல்லே. ஏழைப் பொண்ணுகளை ஏமாத்திச் சின்ன வீடு வச்சுக்கிறதும் கேவலமில்லே. என்னைக் கட்டிக்கிட்டால் கேவலம். உங்க சாதிப் பொண்ணைப் பிற சாதிக்காரன் கட்டிக்கிட்டால் ஒங்களுக்குக் கேவலம். நீங்க பிற சாதிப் பொண்ணுகளை ஆசை நாயகியா வச்சுக்கிட்டால் பெருமை.''

வந்த சொற்களின் வெம்மையைத் தாளாமல் பலர் நெளிய ஆரம்பித்தனர்.

''ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்கய்யா!''

பல குரல் முனகல்கள்!

''என்னையும் கட்டிக்கிட்டு எவனுக்கோ பொறந்த கொழந்தையையும் தன் கொழந்தையா ஏத்துக்கிட்ட அந்த மனுசனைப் பத்திப் பேச உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கு.''

முகமெல்லாம் துடிக்கப் பொங்கினாள் சயிலா.

''நான் ஒங்க சாதி, சனம் இல்லே. ஒங்க உதவி, ஒத்தாசை, உறவு எதுவும் எனக்குத் தேவையில்லே. இனி என் வழிக்கு வந்திங்க ஒங்க பொண்டாட்டிக தாலி அறுத்திருவாளுக.''

கிஞ்சிற்றும் தயக்கமின்றிச் சரேலென அவர்களைக் கடந்து படிகளில் இறங்கி, கதவைத் திறந்துவிட, சாலையை மிதித்தாள்.

குழந்தையின் நினைவு நெஞ்சிலும், அதன் உணவு மார்புகளிலும் கல்லுக்குண்டுகளாய்க் கனக்க விரைந்தாள்.

''சயிலா.''

அழைப்பு தேனாய் உருகி வர, திரும்பினாள்.

எதிர்சாரியிலிருந்து தோளில் தூங்கும் குழந்தையோடு மாதவன் சாலையைக் கடந்து அவளருகே வந்தான்.

''நீங்க எப்ப வந்திய?''

கண்களில் உவகையும், பயமும், பரபரப்பும் துள்ளின.

''உங்கள்ள யாராவது ஒருத்தர் என்னை ஊரறியன்னு சொன்னீயே அப்பத்தான் வந்தேன்.''

அதிர்வோடு மிரண்டு கவலைப்படரக் கேட்டாள். ''நான் பேசினது.....''

அழத் தயாரானாள்.

''சரிதான்.''

அவள் தோளை ஆதுரத்துடன் தட்டிக் கொடுத்தான்.

அவன் தோளில் கிடந்த குழந்தையை அவள் பற்றித் தூக்கியபோது அவன் மடியிலிருந்து நழுவித் தரையில் விழுந்த அது நிலவொளியில் மின்னியது.

அவள் அதை எடுக்கக் குனிய அவன் முந்திக் கொண்டான். அவன் கையோடு சேர்த்துப் பிடித்து அவள் அதை உயர்த்தினாள்.

கசாப்புக் கடை கத்தி.

ஜிவ்வென்று உடல் முழுதும் திகில் பரவ, ஒரு வினாடி ஸ்தம்பித்து, ''இது எதுக்குங்க?'' என்று கேட்டாள்.

அவனே நிதானமாக அதை இடையில் செருகி மறைத்தான்.

''எதுக்குங்க?''

கண்களில் நீர் வழியக் குமிறிக் கொண்டே மீண்டும் கேட்டாள்.

''ஒம் மேல எவனாவது கையை வச்சா அவன் குடலை உருவ!''

அதிர்ச்சி சரேலெனத் தாக்க, அவள் கண்களில் பயம் கிளம்பிற்று. அவனே இதழ் விரியத் தொடர்ந்தான்.

''இல்லே, ஒங்க சாதிக்காரங்க பேச்சுக்குக் கட்டுப்பட்டு என்னைப் பிரிஞ்சு நீ போயிடறதா முடிவு பண்ணிட்டா, என் குடலை உருவிக் கொள்ள.''

மார்பு படபடக்கப் பதறிய சயிலா பளிச்சென்று அவன் வாயைப் பொத்தினாள். விம்மல் ஒன்று வெடித்து வர புனர் ஜென்மம் எடுத்த உணர்வு கவிய, ஒடிந்து, சரிந்து, விழுந்து அவன் காலடியில் சங்கமித்தாள்.



ஒரு சமயம் விழா ஒன்றிற்கு சொற்பொழிவாற்றச் சென்ற கலைவாணர் கூட்டத்தைப் பார்த்து, ''லேடீஸ் அண்ட் ஜெண்டில்மென்'' என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்துச் சற்று நேரம் நிறுத்தினார். கூட்டத்திற்கு வந்தவர்கள் கலைவாணர் ஆங்கிலத்தில்தான் பேசப் போகிறார் என்று நினைத்தார்கள். ஆனால் கலைவாணரோ, ஆங்கிலத்தில் எனக்கு இவ்வளவு தான் தெரியும்! இனிமேல் தமிழில் பேசுகிறேன்'' என்று கூறிவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தார்!

— ஜா. ரவி.

இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!



கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்!
மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது.
உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!



இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

Godrej
பவுடர் ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

உணர்வுகள் உறங்குவதில்லை

16. குடும்பம் ஒரு நாடகம்

சந்திரசூடனுக்கு நான்கு நாட்களாகக் காய்ச்சல். உடல் பலவீனமுற்றிருந்தது. அன்று தான் ஜுரம் இறங்கியிருந்ததால் சற்றுத் தெம்புடனிருந்தார்.

நான்கு நாட்களும் அவருக்கு வேண்டிய சௌகரியங்களைப் பார்வதியும், ராதாவும் கவனித்துக் கொண்டார்கள். பரணி, கல்லூரியிலிருந்து வீடு திரும்பிய பிறகு மாலை வேளைகளில் துணைக்கு இருந்தான்.

சற்று முன்பு பார்வதி மாடிக்கு வந்து அவர் சாப்பிட வேண்டிய மருந்தை நினைவூட்டி, மாத்திரையையும் அதை விழுங்கத் தண்ணீரையும் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

பெண்களுடைய பணிவிடை இதமாகத் தானிருக்கிறது. அதுவும் இதுபோல் சுகவீன முற்றுள்ள போதுதான் பெண்மையின் கனிவும், இதமும் புலப்படுகின்றன. விதிவசத்தால் இந்த வளவில் குடியிருக்கப் போய் இந்தப் பெண்களின் உதவி கிடைத்தது. வேறு எங்காவது குடியிருந்தால்...? அநாதை மாதிரி படுத்துக் கிடக்க வேண்டியதுதானே....?

இதற்காகவாவது ஒரு மனைவி அவசியந்தானே? இது ஒரு நர்ஸின் வேலை. நர்ஸ் போதுமே. மனைவி எதற்கு? ஒரு நர்ஸிங் ஹோமில் போய்ப் படுத்துவிட்டால் போதும். ஒருவனுடைய ஒவ்வொரு தேவைக்கும் மனைவி என்று ஒருத்தி இருந்துதான் ஆக வேண்டுமா என்ன?

உண்மையில் இந்தத் தாம்பத்தியத்தின் காரணமே ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாக உள்ள பரஸ்பர ஈர்ப்பின் வேகந்தான். இதற்காகத் திருமணம் என்னும் விலங்கை மாட்டிக் கொள்ள அவர் தயாராயில்லை. ஆனால் இருவருக்கிடையே ஆழ்ந்த நட்பு ஏற்படுமானால் திருமணம் விலங்காக அமையாது.

வெறும் உடல் கவர்ச்சியைக் காதல் என்று எண்ணி ஏமாந்து, விலங்கை வலியப் பூட்டிக் கொண்ட குமாரைப் பற்றி நினைக்கும்போது அவருக்குப் பரிதாபமாக இருந்தது.

குமார் காதலித்ததாகச் சொல்லிக் கொண்டார். பிடிவாதமாக இருந்து பெற்றோர்களையும் எதிர்த்துத் திருமணம் செய்து கொண்டார். இப்போது மனைவியைத் தாசியுடன் ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய மனைவி நல்ல அழகி. அவளுடைய அழகில் மனத்தையும் அறிவையும் பறிகொடுத்தார். வேட்கையின் தூண்டுதலைக் காதல் என்று கூறித் திரிந்தவர், வேட்கையின் வேகம் குறைந்து விழித்த போது காதலி, குரங்காகவோ, நச்சுப் பாம்பாகவோ, மூட்டைப் பூச்சியாகவோ துன்பம் தருபவளாக இருப்பதை உணர்ந்தார். இவருடைய காதல் எல்லாம் சில இரவுகளுக்குப் பிறகு கற்பூரம் மாதிரி கரைந்து விடுகிறது.

சந்திரசூடனும் ஒரு காலத்தில் காதலைச் சுமந்து கொண்டு தேவதாஸ், கயஸ் ஆகியவர்களைப் போல் பைத்தியம் மாதிரித் திரிந்ததுண்டு. உடல் கவர்ச்சியில் ஏற்பட்ட ஒரு மயக்க நிலை அது. தெளிவடைந்தபோது தம்மையே நினைத்துச் சிரித்தார். அந்தந்தப் பருவங்களில் சில மயக்கங்கள் தோன்றும், மறையும். சற்று சிந்தித்தால் தெளிவு ஏற்பட்டு விடும். எல்லோருமா சிந்திக்கிறார்கள்?

ராதா திருமணம் செய்து என்ன சுகத்தைக் காண்கிறாள்? இப்படி ஒரு கூறு கெட்ட குடிகாரனைக் கணவனாகப் பெற்றுத் துன்புறுவது இவளுக்குத் தேவைதானா? இப்படி ஒரு வாழ்க்கையை வாழ்ந்துதான் ஆக வேண்டுமா?

பார்வதியுந்தான் என்ன கண்டாள்? இளம் வயதில் கணவன் போய்விட்டான். துணைக்கு ஒரு பெண் குழந்தை. அது துணையா? அல்லது பிரச்னையா?

கடமை, பொறுப்பு என்று வந்துவிட்டால் பிரச்னையும் வந்துவிடுகிறது. அதன் பிறகு அமைதியான ஆனந்த வாழ்க்கைக்கு வழி ஏது? இதுவரை சந்திரசூடனுக்குப் பொறுப்பு ஏதும் இல்லை. சுதந்திரப் புருஷராக ஆனந்தமாக இருக்கிறார். உலகைக் கூர்ந்து கவனித்து, வேடிக்கை பார்த்து ரசிக்கிறார்.

கட்டிலில் படுத்தபடியே சிந்தனையில் மூழ்கியிருந்த சந்திரசூடன், மாடிப்படியில் பரணி ஓடி வந்ததைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார்.

"சார், ஓடி வாங்க. ராதா அக்காளுக்கு ஆபத்து. கதவைத் திறக்க முடியவில்லை." என்று கூச்சலிட்டான் பரணி.

சந்திரசூடன் பாய்ந்து கீழே ஓடினார். ராதாவின் வீட்டு முன் வாசற் கதவு உட்புறமாகத்

ர.சு.நல்லபெருமாள்

தாழ் போடப்பட்டிருந்தது. பின்புறம் ஓடினார். சன்னல் வழியே எட்டிப் பார்த்தார். வீட்டினுள் ராதா அலங்கோலமாகத் தரையில் விழுந்து கிடந்தாள். கழுத்தில் கயிறு சுற்றியிருந்தது. தூக்குப் போட முயன்றிருக்கிறாள். கயிறு அறுந்து விட்டது.

பின்புறத்துக் கதவைச் சந்திரசூடனும் பரணியும் உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர். இதற்குள் சப்தம் கேட்டுப் பார்வதி ஓடி வந்தாள். சந்திரசூடன் விரைந்து, ராதாவின் கழுத்தை இறுக்கியிருந்த கயிற்றை அவிழ்த்தார். மூக்கினருகே கைவைத்துப் பார்த்தார். மெல்ல மூச்சு வந்து கொண்டிருந்தது. குனிந்து மார்பில் காதை வைத்துக் கவனித்தார். இருதயம் துடித்தது கேட்டது.

மூவரும் சேர்ந்து அவளைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்தனர்.

"ஆபத்தில்லை. அதிர்ச்சியில் மயங்கிவிட்டாள். நல்லவேளை கயிறு பாரம் தாங்காமல் அறுந்து விட்டது." என்று ஆறுதலாகப் பெருமூச்சு விட்டார் சந்திரசூடன்.

பரணியும் பார்வதியும் பதற்றமுற்று வெறிக்கப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். தண்ணீர் கொண்டு வரும்படி பார்வதியை ஏவினார், சந்திரசூடன். அவள்



கொண்டு வந்து கொடுத்த தண்ணீரை ராதாவின் முகத்தில் தெளித்தார்.

''சூடாகக்காப்பி கொண்டுவா,'' என்றார், பார்வதியிடம்.

சற்று நேரத்தில் ராதா கண்விழித்தாள். சுற்றுமுற்றும் வெறிக்கப் பார்த்தாள். பதறியபடி எழுந்து உட்கார்ந்தாள்.

''ஐயோ, என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?'' என்று கேட்டு அழத் தொடங்கினாள்.

சற்று நேரம் அழட்டும் என்று சந்திரசூடன் மௌனமாயிருந்தார். பார்வதி கொண்டு வந்த காப்பியை வாங்கி சந்திரசூடன் அவளிடம் நீட்டினார். ''காப்பியைக் குடி. தெம்பாக இருக்கும்,'' என்றார்.

ராதா எல்லாரையும் முறைத்துப் பார்த்தாள். ''எனக்கு வாழவே இஷ்டமில்லை. நீங்கள் எல்லாரும் ஏன் இங்கே வந்தீர்கள்?'' என்றாள்.

''மற்றதைப் பிறகு பேசலாம். முதலில் காப்பியைக் குடி,'' என்றார் சந்திரசூடன்.

ராதா, காப்பியை வாங்கி மடமடவென்று அருந்தினாள். கட்டிலிலிருந்து இறங்க முனைந்தாள்.

''படுத்திரு. அதிர்ச்சி கொஞ்சம் தீரட்டும்,'' என்றார் சந்திரசூடன்.

''நான் சாகவில்லையோ? என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?'' என்றாள் கோபத்துடன்.

''சாக என்ன அவசரம்? உன்னை நாங்கள் காப்பாற்றவில்லை.''

''பின்னே?''

''தூக்குப் போட்டிருந்த கயிறு அறுந்து விழுந்துவிட்டாய்,'' என்றார், சந்திரசூடன்.

ராதாவிற்கு அவரை நிமிர்ந்து பார்க்கத் தெம்பில்லை. அறுபட்டுக் கீழே கிடந்த கயிற்றை வெறிக்கப் பார்த்தாள்.

''சார், மாமாவிற்குப் போன் செய்து உடனே வரச் சொல்லட்டுமா?'' என்று கேட்டான் பரணி.

''ஏன்? இவளைக் கண்டிப்பாகச் சாகவைப்பதற்கா?'' என்றார் சந்திரசூடன். அவரை மிகுந்த சோகத்துடன் ராதா நிமிர்ந்து பார்த்தாள்.

''இப்படி வாழ்வதை விடச் செத்துத் தொலைக்கலாம்,'' என்றாள் ராதா. பிறகு, கட்டிலிலிருந்து இறங்கிக் குளியலறையை நோக்கி நடந்தாள்.

''கூடப் போ,'' என்று பார்வதியிடம் கூறினார் சந்திரசூடன்.

''ஏன்? குளியலறையில் செத்துப் போக மாட்டேன். துணை ஒன்றும் வேண்டாம்,'' என்றவாறே ராதா குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

சந்திரசூடன் கீழே கிடந்த கயிற்றை எடுத்துப் பார்த்தார். முகத்தைக் கழுவிவிட்டு வந்த ராதா சோபாவில் சாய்ந்தாள். முகத்தில் இன்னும் ஆயாசம் இருந்தது.

பார்வதியை அவளுக்குத் துணையாக இருக்க வைத்துவிட்டு சந்திரசூடன் போகக் கிளம்பிய போது, ''இது மாதிரி அசட்டுத்தனம் இனிமேல் செய்யாதே,'' என்றார்.

ராதா மௌனமாகத் தரையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

அன்று மாலை பத்திரிகை அலுவலகத்திலிருந்து சந்திரசூடன் வீட்டிற்குத் திரும்பிய போது முற்றத்துத் திண்ணையில் ராதா, தூணில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள். சற்றுத் தள்ளிப் பரணி தனது சைக்கிளைத் துடைத்துக்கொண்டிருந்தான். சந்திரசூடனைக் கண்டதும் ராதா புன்னகை செய்தாள். அவள் முகத்தில் மலர்ச்சியைக் கண்ட பிறகு தான் சந்திரசூடன் நிம்மதியடைந்தார்.

''காலையில் எங்களைக் கதிகலங்க வைத்து விட்டாயே,'' என்றார்.

ராதா பதில் கூறாமல் தலையைக் குனிந்து கொண்டாள். பரணி திரும்பிப் பார்த்து, ''சார், ராதா அக்காவிற்கு நம் மீது கோபம். நாம் காப்பாற்றிவிட்டோமாம்'' என்றான்.

''நாம் எங்கே காப்பாற்றினோம்? இவள் தான் வேண்டுமென்றே இற்றுப் போன கயிற்றைப் போட்டு நம்மைப் பயமுறுத்திவிட்டாள்,'' என்றார், சந்திரசூடன்.

ராதா களுக்கென்று சிரித்தாள். பிறகு, ''கயிறு கூட எனக்கு உதவவில்லை,'' என்றாள். குரலில் வெறுப்புத் தொனித்தது. அவளுடைய கண்களில் சோகம் படர்ந்திருந்தது.

''சரி, இனிமேல் இந்த மாதிரியான அசட்டுத்தனமான காரியத்தைச் செய்யாதே,'' என்றபடியே சந்திரசூடன் மாடிக்குச் சென்றார். பரணியும் அவரைத் தொடர்ந்து மாடிக்குச் சென்றான்.

''நல்ல சமயத்தில் பார்த்தேன். இல்லையென்றால் ராதா அக்கா செத்தே போயிருப்பாள். இல்லையா சார்?'' தற்கொலை செய்வது கோழைத்தனம்,'' என்றான், பரணி.

''சாக வேண்டிய சூழ்நிலையில் சாகாமல் இருப்பதுதான் கோழைத்தனம். சாவு என்பது ஒருவருடைய சொந்த விஷயம். வாழ



''உனக்கு வர சம்பளத்தில் பெரிய வீடு, சின்ன வீடு இரண்டையும் எப்படிச் சமாளிக்கறே?''

''சம்பளத்தில் பெரிய வீட்டையும், கிம்பளத்தில் சின்ன வீட்டையும் சமாளிக்கிறேன்!''

செலுத்துவீர் ரூ.150*
வீடு சேர்ப்பீர் இன்றே
ஒரு விஐபி! V.I.P.

வட்டி கிடையாது!

கூடுதல் செலவில்லை!

உங்கள் வேலையே இலக்கு!

தவணைக் கடன் விற்பனை விலை
(வரிகள் உட்பட)

3 மாடல்களின் உதாரணங்கள்	துவக்கத்தில் செலுத்த வேண்டிய தொகை	5 மாத தவணையாக செலுத்த வேண்டிய தொகை	சிபாரிசு பெற்ற சில்லறை விலை.
ஜெட் ஸ்டார் 21	Rs.150/-	Rs.36.40	Rs.332.00
டிராவலைட் 21	Rs.150/-	Rs.75.60	Rs.528.00
பைலட் பிரீப் கேஸ்	Rs.80/-	Rs.58.80	Rs.374.00

*துவக்கத்தில் செலுத்த வேண்டிய தொகை.
மீதித் தொகை 5 மாதத் தவணைகளாக.
ப்ரீஃப்கேஸ்களுக்கான துவக்கத் தொகை ரூ. 80.

ஒரு உத்திரவாதியுடன் உங்கள் சம்பளபத்திரத்தையும் எடுத்து வாருங்கள்.
அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்:

சென்னை : விவேக் & கோ, தி நகர், மைலாப்பூர் • டால்பின் எலக்ட்ரானிக்ஸ், அண்ணா நகர் • ரமேஷ் என்டர்பிரைசஸ், அம்பத்தூர் • **திருச்சி** : லட்சுமி (லக்ஷ்மி) சேல்ஸ் கார்ப்பரேஷன் தலைமை தபால் அலுவலகம், ரவுண்டானா • **பாண்டிச்சேரி** : ரத்திரா ஏஜன்சிஸ், அண்ணாசாலை • **தஞ்சாவூர்** : தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை லிமிடெட் • **கும்பகோணம்** : மூர்த்தி ரேடியோஸ் • **மயிலாடுதுறை** மூர்த்தி ரேடியோஸ் பட்டமங்கல தெரு • **வேலூர்** : வி. ஆ. சம்பந்தம் முதலியார் • **கோவை** : தி கோயமுத்தூர் சைக்கிள் மார்ட், கிப்ட் பேலஸ் லட்சுமி காம்ப்ளக்ஸ் • **மதுரை** : ரிதம் ஹவுஸ் • **உடுமலைபேட்டை** : ஜுபிலி ஸ்டோர்ஸ் • **தாராபுரம்** : வெரைட்டி ஏஜன்சிஸ் • **தர்மபுரி** : சரஸ்வதி டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் • **ஈரோடு** : டிப்டாப் பாராமௌண்ட்



''காப்பி விலையை உசத்திட்டீங்களே! ஏன்?''

''புளியங் கொட்டை விளைச்சல், கம்மி, சார்!''

— சுதர்ஸன்.

வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் சட்ட உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்பது என் கருத்து.''

''எதிர் நீச்சல் போட்டு வாழ்க்கையில் வெற்றி பெறுவது தான் பெருமை.''

''இதில் பெருமை என்ன, சிறுமை என்ன? சாவை விட வாழ்வுதான் எப்போதுமே சிறந்தது என்று கூற முடியாது. சில கட்டங்களில் மரணமே சிறப்பாக அமைவதும் உண்டு. இந்த உலகத்தை நன்கு அனுபவித்துச் சக்கையாகத் துப்பி விட்டவனுக்கு வாழ்க்கையில் அலுப்புத் தட்டலாம். அப்படி அலுத்துப் போய்த்தான் ஹெமிங்வே என்ற அமெரிக்க எழுத்தாளர், வாழ்ந்தது போதுமென்று தற்கொலை செய்து கொண்டார். வாழ்ந்தது போதும் என்று ஒருவன் முடிவெடுத்தால் அதில் என்ன தவறு? கிளியோபாட்ரா, ஹிட்லர், ஹெமிங்வே, நல்லதங்காள், என்று கதையிலும் வாழ்க்கையிலும் பல பேர் செய்த தற்கொலைகள் சிறந்த செயல்கள் தாம். அவர்கள் வேறு எப்படி நடந்து கொண்டிருந்திருக்கமுடியும்? வாழ்வைவிட சாவுதான் பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும்.''

''தற்கொலை பாபம் சார்,'' என்றான் பரணி.

''உயிரோடு இருந்து கொண்டு பாவங்களைச் செய்வதை விடவா?'' என்று கூறிச் சிரித்தார் சந்திரசூடன். பிறகு சொன்னார்: ''ராதாவைப் பொறுத்தவரை அவள் அலுத்துக் கொள்வதில் என்ன தவறு? திடீரென்று ஒருநாள் அவள் மீண்டும் துணியலாம். அவளுடைய அன்றாட வேதனைகளும், ஏமாற்றங்களும், ஏக்கங்களும் அன்றோடு முடிந்து விடும். குடிகாரக் கணவனோடு தினமும் நரகத்தில்தான் உழல வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதுதான் கொடுமை,'' என்றவாறே எழுந்து சென்று சன்னல் வழியாக வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டுக் கட்டிலில் வந்து அமர்ந்தார்.

பரணி கீழிறங்கிச் சென்ற பிறகும் சந்திரசூடனின் நினைவு, ராதாவின் வாழ்க்கையைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது. நல்லவேளையாக அவர் இந்த மாதிரியான ஒவ்வாத தாம்பத்தியத்தில் சிக்குண்டு திண்டாடவில்லை. அவரைப் பொறுத்தவரை இந்த உலகம் ஒரு ரம்மியமான படைப்பு. சுதந்திரமாக வாழ்ந்து எப்போதும் ஆனந்தம் பெறவே ஒவ்வொரு உயிரும் இந்த உலகத்திற்கு வருகிறது என்பது அவருடைய நம்பிக்கை. இதில் வீணாக ஏன் விலங்கை எடுத்துக் கால்களில் மாட்டிக் கொள்ள வேண்டும்?

அவருக்கு ராதாவின் தற்கொலை முயற்சி நினைவில் உறுத்திக் கொண்டிருந்தது. அவள் அடிக்கடி கூறுவாள், ''வாழ்க்கை என்பது ஒரு தேடல். இரவில் நிம்மதியான தூக்கத்தைத் தேடிப் பெறுவதுதான் வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோள்,'' என்று.

இரவில் தூக்கத்தைத் தேடுகிறாள். கிடைக்கவில்லை. ஒரே தூக்கமாகத் தூங்கிவிட நினைத்து விட்டாள்...

திடீரென்று அவருக்குப் பார்வதியின் நினைவு வந்தது — அவளுக்கும் இரவில் நிம்மதியான தூக்கம் இருக்கவா போகிறது? அவளும் தற்கொலை செய்து கொள்ள முயல்வாளோ...?

வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட ஏதாவது ஒரு காரணம் போதும். அந்தக் காரணமே வலுவுள்ளதாகிவிட்டால் சாவு இனித்து விடுகிறது.

''டீ கொண்டு வரட்டுமா?'' என்ற குரல் அவருடைய சிந்தனையைக் கலைத்தது. பார்வதி வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

''ராதா எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டார்.

''சரியாகி விட்டாள். முதலில் ரொம்ப அதிர்ச்சியடைந்திருந்தாள். நல்லவேளை, சமயத்தில் வந்து காப்பாற்றிவிட்டீர்கள்,'' என்றாள் பார்வதி.

''என்ன காரணமாம்? கேட்டாயா?''

''கேட்க வேண்டுமா? மனம் வெறுத்துப் போச்சு.''

''அதற்காகச் சாக வேண்டுமா?''

''பெண்களுக்குத் தாம்பத்தியந்தான் முக்கியம். அது சீராக அமையவில்லை என்றால் இப்படி மனம் வெறுத்துத்தான் போகும்.''

சந்திரசூடன் பார்வதியைக் கூர்ந்து பார்த்தார். 'ஓ... இவளும் தூக்குப்போட்டுக் கொள்வாளோ...?'

பார்வதியின் கண்களில் வாழ்வின் ஏக்கங்கள் மிகத் தெளிவாகத் தெரிந்தன.

''டீ கொண்டு வரட்டுமா?'' என்று பார்வதி மீண்டும் கேட்டாள்.

''வேண்டாம். தூங்கப் போகிறேன்,'' என்றார்.

பார்வதி படியிறங்கிச் சென்றாள். சந்திரசூடனின் மனம், அவள் சொன்னதை அசை போட்டுக் கொண்டிருந்தது —

'பெண்களுக்குத் தாம்பத்தியந்தான் முக்கியம். அது சீராக அமையவில்லை என்றால், இப்படி மனம் வெறுத்துத்தான் போகும்...'

(தொடரும்)

கொசுக்கள் உங்கள் தூக்கத்தைக் கெடுக்கின்றனவா?



உபயோகியுங்கள் ஓடோமாஸ்—
உறங்குங்கள் நிம்மதியாக


இப்போது
100 கிராம்
எக்கானமி
பேக்கிலும்
கிடைக்கிறது



ஓடோமாஸ்
கொசுக்களின் எதிரி
BALSARA

CHAITRA-B BLS 546 TAM

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இனும் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி) ஏஜெண்டுகள் தேவை



மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால் பெட்டி 1405, 14, ரெங்கநாதன் தெரு,
தி.நகர் சென்னை-600 017.



16. நடைமுறை உலக நாடக அரங்கில்

> தொழில் என்பது ஒருவன் செய்தே தீரவேண்டியது. அடியோடு அப்படி இல்லாததே விளையாட்டு.
>
> —மார்க் ட்வைன்.

இதுவரை ஒவ்வோர் அத்யாயத் தலைப்பிலும் கொடுத்த லக்ஷ்ய வாசகத்தை விளக்கிக் காட்டுவதாகவே பின்னர் வந்த விஷயம் இருந்திருக்கிறது. இந்த அத்யாயமோ மார்க் ட்வைனின் வாசகத்தை, "அடியோடு அப்படி இல்லாமல்" நிரூபித்துக் காட்டும் ஸ்வாமியின் சாதுர்ய மாதுர்யத்தைச் சற்றுக் காட்டும்! ட்வைனுக்கு முந்தைய தலைமுறையில் அந்த அமெரிக்காவிலேயே அவரது நகைச்சுவைக்குநேர்மாறான அரசியல்சூறாவளியாக ஆரன் பர் என்பவர் இருந்தார். "தொழிலையே கேளிக்கையாகவும், கேளிக்கையைத் தொழிலாகவும் செய்வதே என் வாழ்க்கை விதி" என்றாரவர். அதன் உண்மையைத்தான் அரசியல் சூறாவளியாயின்றி, ஆன்மியத் தென்றலாக, அன்பின் மந்தமாருதமாக இருந்து கொண்டு நம் கதாநாதர் ஸதாவும் நிரூபித்து வருகிறார்.

"எமக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்" என்று ப்ரேமையே ஜீவிதக் கட்டளையாய்க் கொண்டவர் ஸ்வாமி. அந்த அன்பினாலே உலகை ஆகர்ஷிக்கவே அத்புதங்கள் புரிகிறாரென்றும் அவற்றிலும் அவற்றிலும் எப்படி அன்பே நிலைநாட்டப்படுகிறது என்றும் இத்தனை வாரங்களாக, சிறிது பார்க்க முயன்றோம். எத்தனையோ வருஷங்கள் பார்க்கவும் விஷயமுண்டு. ஆயினும் மங்களமான மணிவிழாத் தொடக்கத்தோடு நாம் மங்களம் பாடுவது பொருத்தமெனக் கருதுவதால், தேனடைக்குச் சில சொட்டுக்களாக ஸாம்பிள் கொடுப்பதோடு நிறைகிறோம்.

தீராத விளையாட்டு ஸாயி—நம்மை
ஆராத அன்பாட்டும் ஆனந்த தாயி

என்ற பாட்டெடுக்கக் கூடிய பரமனின் விளையாட்டுக்களில் அத்புதமானவற்றையே இது வரை பார்த்தோம். அத்புதம் செய்த போதிலும் அதை மானுட அன்பின் எளிமையில் அவன் இளக்கித் தருவதைப் பார்த்தோம்.

இவ்வாறம் அற்புத சக்தியின் ப்ரயோகமின்றி நடைமுறை உலகில் மானுடரோடு மானுடராயுள்ள போதே அவர் புரியும் அன்பு விளையாட்டில், அண்டாப் பஞ்சாம்ருதத்தில் உத்தரிணியளவு ஸாம்பிள் பார்க்கலாம்.

ஆம், பலருக்குத் தெரியாது, அவர் மானுடமாகவே எத்தனை எழிற் கோலங்கள் கொள்பவரென்று; எத்தனை இனியவரென்று; எத்தனை எளியரென்று; இவ்வெழிலையும், இனிமையையும், எளிமையையும் எத்தனை விளையாட்டுத்தனமாகக் காட்டுபவரென்று!

பேரற்புதத்தை மறைப்பதற்குத்தான் கிச்சுகிச்சு மூட்டுவாரென்பதில்லை. ஸஹஜமாக, அன்றாட நடப்பினிடையிலேயே, ஒரு கஸ்தூரித் தாத்தாவின் பின்புறமாகப் பதுங்கிப் பதுங்கிப் போய்க் கண்ணைப் பொத்துவார். பச்சைக் குழந்தையாக, "எவரு? செப்பு" என்பார்!

சிவ் பண்டிட் அல்லது எவரோ ஒரு அமெரிக்க மாணவர் அந்த ஊர் அதிசயங்களைச் சொன்னால், அங்கேயே பேரதிசயங்கள் புரியும் இவர் அதை ஆச்சர்யமாகக் கேட்டுக் கொண்டு, "என்னை ஒன்றோடு அழைச்சுக் கொண்டுபோறயா?" என்று நிஷ்கபடமாய்க் கேட்பார். "குழந்தைகள் போலொரு சூதறியாது சொல்வான்" என்று பாரதி பாடியதற்கு ஸாயியை விட வ்யாக்யானம் இல்லை.

குழந்தைகள் தாம் அவருக்கு எப்போதுமே முக்யமான விஷயம். பக்தர்கள் வீட்டுக்கு விஜயம் செய்யும் போதும், தாமே குடும்ப பேட்டிகள் தரும்போதும் குழந்தைகளை இழுத்து வைத்துக் கொண்டு உறவாடுவதிலேயே நித்ய பாலர் களிப்பார். "இந்த

தீராத

ரா. கணபதி

வெள்ளித் தட்டு ஸ்வாமிக்கே ஸ்வாமிக்கா? ஹை! தங்கம் பூசியிருக்கே!'', ''உங்க வீட்டுப் பெரிய்ய கார் ஸ்வாமி ஒரே ஒரு 'ட்ரைவ்' வுக்கு எடுத்துக்கலாமா?'' என்று அவர் குழந்தைகளைக் கேட்கும் குழந்தைத்தனம் நிறைந்த ஸீரியஸ்னெஸ் உண்டே! இவர்தாம் ''மிரகிள் மாஸ்டர்'', ''சமத்கார் சக்ரவர்த்தி'', ''அற்புத அரசர்'' என்று நம்பவே முடியாது.

ஐந்து வயஸு வாண்டு ஒன்றிடமும், தொண்ணூற்றைந்து வயஸுப் பாட்டி ஒருத்தியிடமும், காதோடு வாயாக, தீவிர கனத்தோடு ஏதோ சொல்லிச் செல்வார். அவர்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்வார்கள். கவனித்துப் பார்த்தால் தெரியும்—தாங்க முடியாத சிரிப்பில்தான் அவர்களுடைய தலை அப்படித் தொங்கிற்று என்று! வாண்டிடம் சொன்ன ரஹஸ்யம் என்ன தெரியுமா? ''ஒன்னைப் பத்தி ஒன் ஒய்ஃப் ரொம்பகம்ப்ளெய்ன்ட்!'' பாட்டிக்கு அளித்த மர்ம ஸந்தேசம் ''டோன்ட் வொர்ரி. கல்யாணம்தானே? அடுத்த முஹூர்த்தம் உனக்குத்தான். காஞ்சிபுரத்திலே ஸாரி ஆர்டர் பண்ணியாச்சே!''

மனைவி கிழித்த கோட்டைத் தாண்டாத கணவர், தம்பதி ஸமேதராக பேட்டிக்கு வருகிறார். அம்மாளிடம் நம் அய்யனார் முகமெலாம் நகையாக, கண்ணெலாம் களிப்பாகச் சொல்கிறார்: ''தெரியுமே! ஒங்க ஹஸ்—பென்ட்!'' ''பென்ட்'' என்ற வார்த்தையை ஒரு சுழற்றுச் சுழற்றி வளைத்து, கையாலும் வளைத்துக் காட்டி, அந்த அப்பாவி மனுஷர் அம்மாளுக்கு எப்படி அடியோடு ''பென்ட்'' ஆகிக் கிடக்கிறார் என்பதை நாடகமே ஆக்கி விடுகிறார் நம் லீலா நாடக ஸாயி.

மகனின் மணம் குறித்த பெரும் ப்ரச்னையில் ஸ்வாமியின் தீர்ப்பைப் பெற ஆர்வமாக வந்து காத்திருக்கின்றனர் ஒரு தம்பதி. ஸ்வாமி அவர்களில் கணவரிடம் சென்று ஏதோ சொல்கிறார். பின்னர் பெண்கள் பக்கம் வந்ததும் அக்கணவரின் இல்லாளைத் தேடிப் போய், ''பர்த்தாவிடம் எல்லாம் சொல்லியாச்சு'' என்றும் ஆறுதல் பால் வார்க்கிறார்.

தர்சனம் முடிந்து கூட்டம் கலைந்ததும், துடிப்போடு ''பர்த்தா''விடம் விரைகிறாள் அம்மாள். ''என்ன சொன்னார் ஸ்வாமி?'' என வினவுகிறாள்.

''என்ன சொன்னாரா? எனக்குப் பக்கத்திலிருந்த செடிக்குப் பிள்ளையை விட்டு மூன்று முடிபோடச் சொன்னார்'' என்கிறார் ஏமாளி ''பர்த்தா''.

வெறும்ம்ம் விளையாட்டுத்தான்! ஆனால் அதிலும் அவரது நெருக்கமான மானுடம் மிளிர்வதால் அவரது ஜீவரத்தமான ப்ரேமை செம்மை பாய்ச்சுகிறது! இப்படி எத்தனை யெத்தனை?

மெல்லப் பாடிக் கொண்டே பக்தர் வீட்டில் நுழைவதில் எத்தனை 'லைட்னெஸ்'? வீட்டு அம்மாள் இவரைப் பற்றித் தாமே கவனம் செய்து முதல் முறையாக அன்று தான் பாட இருந்த பாட்டையே அவர் நுழையும் போதே பாடிவிட்டார் என்ற அற்புதம் அந்த அம்மாள் உள்பட எல்லோருக்கும் மறந்து போகுமளவுக்கு அத்தனை 'லைட்'!

ப்ரசாந்தி நிலையப் பணியாளர்களும் தம்மைப் போலவே அயராக் கடமைகளை 'லைட்'டாகப் புரிய வைத்திருப்பது பாபாவின் திருவிளையாடல்களில் வாஸ்தவமாகவே திருவிளக்கும் ஒன்றாகும். எத்தனை சுமை ஏற்றினாலும் நுகத்தடியை லேசாய்த் தாங்கும் தன்னிடம் பாரத்தை எல்லாம் தள்ளிக் களையாறுமாறு இயேஸு என்றோ அழைத்தார். நம் சுமைதாங்கி ஸாயி, தன் பரிஜனங்களும் பாரத்தைப் பாரிஜாதப் பூவாகத் தாங்கச் செய்கிறார்.

பேராசிரியர் டாக்டர் ஏ. வி. க்ருஷ்ண மூர்த்தி தமது அநுபவமொன்று சொல்வார். பத்தாண்டு முன் பாபாவின் பொன் விழாவின் போது மஹாராஜாவிலிருந்து 'மம்முட்டிக்காரர்' வரையில் அடியார்கள் கைக்குக் கை மண் கூடைகளை மாற்றிக் கொண்டு விளையாட்டும், பஜனையுமாகவே மாபெரும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆயினும் அம்மாதிரி வேலைக்குப் பழக்கப்பட்டிராத ஏ.வி.கேக்கு மட்டும் கூடை கனமாகக் கனத்தது. ஏனையோரைப் போல ஸாயி ஸாரத்தில் ஊறித் தாம் பணி புரியவில்லையே என்ற தாபத்தோடு, தாபத்தி லெழுந்த வேண்டுதலோடு, அடுத்த கூடைக்குக் கை நீட்டினார். கூடை வந்தது கையில்! ஏன் காலிக் கூடையைத் தந்திருக்கிறார்களென்று பார்த்தால்..... காலியே இல்லை! கனமான நுண்மணல் நிரம்பிய கூடையேதான் ஐயனின் விநோத விகிர்தத்தில் அப்படி லைட்டாகியிருந்தது!

இங்கே ஸ்தூலத்தில் காட்டியதையே ஸூக்ஷ்ம உணர்வாகத் தம் பணியாளர்களின் உள்ளுக்குள் கூடை கூடையாக அனுப்பியிருக்கிறார் அவர்! கடமைத் தேவதை பற்றி வேர்ட்ஸ்வொர்த் பாடிய 'வேர்ட்'களின் 'வொர்த்'தை எழுத்துக்கெழுத்து நிரூபிக்கிறார்!

கர்மம் பார்த்தே கடமை ஈவதில்
தர்மம் சற்றும் தளராய் நீ!
ஆயினும் ஆண்டவன் அருளினிமை
ஆர் நினைப்போல அணிந்தவராம்?

(அடுத்த இதழில் முடியும்)

விளையாட்டு ஸாயி

"கண்ணே... நம்ம ரூமுக்குப் போய்ப் பாரு... யாரு இருக்காங்கன்னு?"

ஏழு வயதுத் துள்ளலுடன் குழந்தை வித்யா படுக்கையறைக்குள் நுழைந்தது.

முழுநீளக் கண்ணாடி முன் ஈரத் துண்டோடு நின்றிருந்த மோகன் திரும்பினான். "வித்யா டார்லிங்... இங்கே ஓடி வா..."

மலை முகட்டுக்குத் தெரியாமல் ஓடி வந்த மான்குட்டி போல் வித்யா நின்றது. சடாரென்று திரும்பி ஓடிவந்து பூர்ணிமாவின் கைகளுக்குள் விழுந்தது.

"மம்மீ... மம்மீ... எனக்கு பயமாயிருக்கு..."

பூர்ணிமாதான் கதவைத் திறந்தாள். உடனே ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"என்னங்க இது அதிசயம்? உடம்பு கிடம்பு சரியில்லையா? இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வந்துட்டீங்க?"

மோகன் அதைக் குத்தலாய் எடுத்துக் கொள்ளவில்லை.

"சீக்கிரம் வந்தா வழி விட மாட்டியா பூர்ணி?"

பூர்ணிமா இன்னும் நம்ப முடியாமல் கதவைத் திறந்துவிட்டு நின்றாள். மோகன் நுழைந்தான். கையிலிருந்த பிரீஃப் கேஸை மேஜை மீது வைத்தான். கொக்கிகளை விலக்கித் திறந்தான்.


பூர்ணிமாவிற்கு மறுபடியும் திகைப்பு.

மோகன் ஒருபொட்டலத்தைஎடுத்துநீட்டினான். இலையின் கிழிசல்களைத் தாண்டிக் கொண்டு மல்லிகைச் சரம் எட்டிப் பார்த்தது.

"இன்னிக்கு ஃபாக்டரில ஒரு ஷட் டவுன். அதுதான் கௌம்பி வந்துட்டேன். ஏழு மணி வரைக்கும் வீட்ல இருக்கலாமோன்னு தோணிச்சு!"

"அதுதானே பாத்தேன்!" என்றாள் பூர்ணிமா. முகம், தண்ணீரில் போட்ட மலிவுத் துணியைப் போல நிறமிழந்து, சுருங்கிப் போனது.

"பூர்ணி... உடனே உன் மூடு அப்ஸெட் ஆயிடணுமா? இப்ப மணி மூணுதானே — இன்னும் நாலு மணி நேரம் நான் 'உன் கூட இருக்கேன்னு சொல்றேனே, அதுக்காக சந்தோஷப்படக் கூடாதா?"



சூரியனைத் தேடிய மலர்!

பூர்ணிமா பதில்சொல்லாமல்சமையலறையில் நுழைந்தாள். "என்ன வேணும், காப்பியா, டீயா?" என்று குரல் மட்டும் உணர்ச்சியில்லாமல் வந்தது.

சமையலறை வாசலில் மோகன் வந்து நின்றான். "எனக்கு என் டார்லிங் பூர்ணி வேணும்."

"அட, இதெல்லாம்கூட ஞாபகம்இருக்கா? உங்க ஃப்ரெண்ட்ஸும், அந்தத் தடியனுங்களோட நீங்க சாப்பிடற பிராந்தியும், விஸ்கியும்தான உங்களுக்கு எப்பவும் வேணும் — நான் கூட வேணுமா என்ன?"

"பூர்ணி" மோகன் குரலில் குழைவிருந்தது. "ஒரேயடியா கோவிச்சுக்காதே பூர்ணி. நீ வேணா பார்த்துக்கிட்டேயிரு... பதினைஞ்சாம் தேதிதான் லாஸ்ட். அப்புறம் ஒரு ஸ்பூன் கூட சாப்பிட மாட்டேன், ப்ராமிஸ்."

''ப்ராமிஸ்! இதோட ஆயிரம் தடவை பண்ணியிருப்பீங்களா ப்ராமிஸ்? பீர் பாட்டிலையும், சோடாவையும் பாத்திட்டா அதோட உங்க ப்ராமிஸுக்கு ஆயுள் க்ளோஸ்.''

''பூர்ணி...''

மோகன் அவளைப் பார்த்து ஒரு அடி எடுத்து வைத்தான்.

''நில்லுங்க, நில்லுங்க'' என்று அலறினாள் பூர்ணிமா. ''ஷூவைப் போட்டுக்கிட்டு கிச்சன் வரைக்கும் வராதீங்க...''

''ஸாரி'' என்றான் மோகன். ''கவனமே இல்ல.''

''எப்படி இருக்கும்? தினமும் ஹான்னு படுக்கைல சாய்ஞ்சிடுவீங்க. ஷூவைக் கழட்டறது கூட நான்தானே?''

மோகன் அடுப்பில் கொதிக்கும் நீரை ஆயாசத்தோடு பார்த்தான். ஒன்றும் சொல்லாமல் வாசலறைக்கு நடந்தான்.

டீத் தூளை வெந்நீரில் போட்டு விட்டுப் பூர்ணிமா கதவருகே வந்து பார்த்தாள். மோகன் சோஃபாவில் சரிந்து உட்கார்ந்திருந்தான். விட்டத்துப் பல்லியை வெறித்துக் கொண்டிருந்தான். பாவமாயிருந்தது. தப்பு செய்த குழந்தையை அளவுக்கதிகமாய்த் திட்டிய மாதிரி இருந்தது பூர்ணிமாவிற்கு.

மோகன் செய்வது சரியில்லைதான். சூரியன் விழுந்ததும் அவனைத் தேடிக் கொண்டு ஆள் வந்துவிடும். நான்கைந்து உதவாக்கரைப் பயல்கள் சேர்ந்து கொண்டு கண்ணாடி தம்ளர்களை நிரப்பி, உறிஞ்சி, மறுபடி நிரப்பி என்று இரவு வரை பொழுதை இழுத்துச் சென்றுவிடுவார்கள்.

பூர்ணிமாவும், சின்னஞ்சிறு வித்யாவும் படுக்கையறையில் ஒதுங்கிக் கொள்வார்கள்.

பக்கத்து அறையிலிருந்து ராட்சசச் சிரிப்புகள் பொங்கி வரும். சமயத்தில் கண்ணாடி தம்ளர் கீழே விழுந்து சிலீர் என்று நொறுங்கும். டேப் ரிகார்டர் சினிமாத் தியேட்டர் மாதிரி அலறிக் கொண்டிருக்கும்.

''அப்பா என்னம்மா பண்றாரு?''

நினைத்துக் கொண்டாற்போல் ஹோம் ஒர்க்கை மூடி வைத்துவிட்டு வித்யா கேட்கும். பூர்ணிமா அவளை நெஞ்சோடு எடுத்து அணைத்துக் கொள்வாள். ''அவங்க ஆஃபீஸ்லேருந்து ஃப்ரெண்ட்ஸ் வந்திருக்காங்க, வித்யா. உன்னைத் தேடிக்கிட்டு சுந்தர், ரமா, இஸ்மத் இவங்கள்ளாம் வருவாங்க இல்ல... அந்த மாதிரி.''

''போம்மா... என் ஃப்ரெண்ட்ஸ்லாம் நல்லவங்க... குடிக்க மாட்டாங்க... சிகரெட்

சுபா



பிடிக்கமாட்டாங்க...அப்பா கிட்ட வந்தாலே நாத்தம் வருதே...''

பூர்ணிமாவுக்குத் திக்கென்றது.

''ச்சீ... அப்பாவைப் பத்தி அப்படில்லாம் சொல்லக் கூடாது...'' என்று ஒட்டு மொத்தமாய் அடக்கலாம். ஆனால் இப்போதே இந்தப் பிஞ்சு மனத்தில் அந்த விஷ சாயம் விழுந்து விடுவதை எப்படித் தடுக்க முடியும்?

இன்றைக்குப் புது அனுபவமாய் மூன்று மணிக்கே இவன் வீடு திரும்பியது பூர்ணிமாவால் இன்னமும் நம்ப முடியவில்லை.

டீயை அவனுக்கெதிரே டீப்பாயில் வைத்தாள். அவன் நிமிர்ந்த பார்வை இன்னும் விட்டத்திலேயே இருந்தது. பூர்ணிமா மெதுவாக குனிந்து அவன் ஷூக்களை ஒவ்வொன்றாய்க் கழற்றினாள். அவன் சொந்தமில்லாத கால்களைக்காட்டுவதுபோல்காட்டிக்கொண்டிருந்தான்.

''டீயை சாப்பிடுங்க... இன்னிக்கு ஏலக்கா ஃப்ளேவர்.''

மோகன் மௌனமாய் நிமிர்ந்து பார்த்தான். இவளின் கோபத்தில் நியாயம் இருப்பதாக நினைத்தான் போலும். மெல்லப் புன்னகைத்தான்.

''வித்யா எப்ப ஸ்கூல்லேருந்து வரும்?''

அவன் குரலில் ஏக்கம் இருந்தது.

''நாலு மணிக்கு ரிக்ஷா வந்திடும்'' என்றாள் பூர்ணிமா டீயை எடுத்து அவனிடம் நீட்டி. டீயை வாங்கி மறுபடியும் டீப்பாயில் வைத்து விட்டு அவள் கையைப் பிடித்து இழுத்தான் மோகன்.

''ச்சே, நான் எத்தனை நல்ல விஷயங்களை கவனிக்காமலே இழந்திட்டேன்.''

மோகன் பனியனை எடுத்து மாட்டிக் கொண்டு கட்டிலிலிருந்து இறங்கினான். பூர்ணிமா இன்னும் போர்வைக்குள் இருந்தாள். ''எனக்காக ஒண்ணு செய்வீங்களா, ஃபோன் பண்ணி ஃப்ரெண்ட்ஸை வர வேணாம்னு சொல்லிடுங்களேன்'' மோகன் பதில் சொல்லாமல் அவளைப் பார்த்தான்.

அவள் கண்கள் மூடியிருந்தன. முகத்தில் இதமான ஒரு சந்தோஷத்தின் கிறக்கம் படிந்திருந்தது.

மோகன் பாத்ரூமுக்குள் நுழைவதும், ஷவர் திறக்கப்பட்டு ஷொர்ர்ர் என்று நீர் சொரிவதும் கேட்டது.

கண்களை மெல்லத் திறந்து கடிகாரத்தைக் கவனித்தாள்.

மூன்று ஐம்பத்தைந்து. இன்னும் ஐந்து நிமிடத்தில் வித்யா வந்துவிடும். பரபரப்புடன் எழுந்தாள்.

மோகனுக்குள்ளே களிம்பு ஏறாமல் இன்னும் அந்தப் பழைய மோகன் இருப்பதைக் கண்டு கொண்டதில் பெருமையாய் இருந்தது. இவனை, எப்படியாவது இன்றைய சந்தோஷத்தின் வர்ணம் தேய்வதற்குள், சரியான பாதைக்குத் திசை திருப்ப முதல் முயற்சி செய்ய வேண்டும்.

வாஷ் பேசினில் முகம் கழுவிக் கொண்டு துண்டை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான். டீப்பாயில் திறந்திருந்த ஆறிப் போன டீயில் ஈ மிதந்து கொண்டிருந்தது. எடுத்துக் கொண்டு உள்ளே போய்ச் சரித்தாள். மோகன் நண்பர்களுக்கு ஃபோன் செய்வானா? அழைப்பு மணி டிங் டிடிங் என்றது.

வித்யா...

ஓடிப் போய்க் கதவைத் திறந்தாள். ரிக்ஷா மற்ற குழந்தைகளுடன் ஒரு சக்கரம் நகர்ந்திருந்தது.

வித்யா இறக்கைகள் போல் கைகளை விரித்து அப்படியே பூர்ணிமாவின் முழங்கால்களைக் கட்டிக் கொண்டாள். ''மம்மீ... இன்னக்கு ஒரு ஸர்ப்ரைஸ். என்ன சொல்லு...''

பூர்ணிமா போலியான கவலையாய் முகத்தை வைத்துக் கொண்டு ''தெரியலையேடா கண்ணு... மம்மிக்கு நீதான் சொல்லணும்...'' என்று அவளை உள்ளே விட்டுக் கதவைத் தாளிட்டாள். முதுகுப் புத்தக மூட்டையைச் சரித்து இறக்கிவிட்டு வித்யா கைகளைத் தட்டிக் கொண்டு குதித்தது.

''மன்த்லி டெஸ்ட்ல நான் தான் செகண்ட் ராங்க்...''

''ஹை!'' என்றாள் பூர்ணிமா சந்தோஷமாய். ஆறாவது இடத்திலிருந்து இரண்டிற்கு வந்திருப்பது நிஜமான முன்னேற்றம்தான்.

''வித்யாக் கண்ணு... உனக்கு இன்னிக்கு வீட்ல ஒரு சர்ப்ரைஸ் இருக்கே... என்ன சொல்லு...?''

வித்யா அழகான கண்களை உருட்டி உருட்டி யோசித்தது.

''ஊம்ஹூம். தெரியலையே... மைசூர்பாக் பண்ணியிருக்கியா?''

''இல்லேடா கண்ணு... நம்ம ரூமுக்குப் போய்ப் பாரு... யாரு இருக்காங்கன்னு?''

ஏழு வயதுத்துள்ளலுடன் குழந்தைவித்யா படுக்கையறைக்குள் நுழைந்தது. முழுநீளக் கண்ணாடியின் முன் ஈரத் துண்டோடு நின்றிருந்த மோகன் திரும்பினான். ''வித்யா டார்லிங்... இங்கே ஓடி வா...''

மலை முகட்டுக்குத் தெரியாமல் ஓடி வந்த மான்குட்டி போல் வித்யா நின்றது. சடாரென்று திரும்பி ஓடிவந்து பூர்ணிமாவின் கைகளுக்குள் விழுந்தது.



''மம்மீ... மம்மீ... எனக்கு பயமாயிருக்கு...''

முகம் நிஜமாகவே அரண்டிருந்தது.

''அப்பாம்மா வித்யா... உன்னோட செல்ல அப்பா...''

''வேணாம்... என்னை அடிப்பாரு...''

''மாட்டாருடா... கிட்டே போய்ப் பாரு.''

''மாட்டேன்... நான் மாட்டேன்...''

மோகன் கண்ணாடிக்குத் திரும்பினான். தன் பிம்பத்தை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டான்.

டைனிங்டேபிளில்வித்யா நிலைகொள்ளாமல் தான் உட்கார்ந்திருந்தது. அதற்குப் பிடித்த நெய் தோசையில் கவனம் செல்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தது.

''மம்மி... எனக்கு நெறைய ஹோம் ஒர்க் இருக்கே?''

''செய்யலாண்டா...''

''நீ எனக்குச் சொல்லித் தருவியா?''

''டெய்லி யாரு உனக்குச் சொல்லித் தருவாங்க?''

''நீதான். ஆனா, இன்னிக்கு அப்பா வந்திருக்காரே...''

''அப்பாதானடா... அப்பாக்கு மேத்ஸ் ...ம் ரொம்ப நல்லா வரும்... கணக்குப் பாடம்லாம் அப்பாகிட்ட கத்துக்கலாம். என்ன?''

''அடிக்க மாட்டாரா?''

''மாட்டேன்டா... நீ என் செல்லமாச்சே... உன்னை அடிப்பேனா... வா... நாம சேர்ந்து ஹோம் ஒர்க் செய்வோம்...''

பெஞ்ச் மீது ஏறச் சென்ன குழந்தை போல் பயம் விலகாமலேயே வித்யா அம்மாவைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனது. அவன் தூக்கவந்தபோது கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு விலகியது. சுவாரஸ்யமே இல்லாமல் அவனோடு உட்கார்ந்து கொண்டது.

மோகனின் உடம்பின் ரசாயனங்களில் புது மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. நம்பவே முடியாமல் நினைத்து நினைத்துப் பார்த்தான். ஒரு மணி நேரத்தில் வித்யா சற்றே நெருங்கி வந்திருந்தாள். அவன் மடியில் இழுத்துக்கொண்டபோது திமிறிக்கொண்டு விலகி உட்கார்ந்தாளே தவிர, ஒரேயடியாய் அம்மாவிடம் முன் போல் ஓடவில்லை.

டியூஷன் வாத்தியாரிடம் இருக்கும் பயமும் விலகலும் இருந்தது. அந்தச் சின்ன விரல்கள் பென்ஸிலைப் பற்றி எழுதும் அழகை வெகு ரசனையோடு பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது.

இன்னும் கொஞ்சம் நேரம்தான். அப்புறம் ஒரு அலை வந்து இதையெல்லாம் அடித்துக் கொண்டு போய் விடும் என்ற நினைப்பே கசப்பாய் இருந்தது. வித்யா குனிந்து ஒரு கணக்கில் ஈடுபட்டிருந்த நேரம் மோகன் அவள் நோட்டுப் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

தமிழ் நோட்டில் நான்கைந்து பக்கம் புரண்டதும் அவன் பார்வை ஆணியடித்து நின்றது.

'கடவுள் உன் முன் தோன்றினால் என்ன கேட்பாய்?'

கேள்வியின் தீவிரம், அந்தக் குண்டு கையெழுத்து பதித்திருந்த பதிலில்தான் புரிந்தது.

வித்யா இரண்டே வரிகள்தான் எழுதியிருந்தது.

'எனக்கு இந்த அப்பா வேண்டாம். வேற அப்பா தா!'

மோகனின் உடம்பு உதறியது. பட்டறையில் காய்ச்சிய இரும்பை எடுத்து கண்ணில் செருகியமாதிரி இருந்தது. இதயத்தை வெயில் மணலில் போட்டுப் புரட்டி எடுத்தாற்போல இருந்தது.

நோட்டுப் புத்தகத்தை மூடிவிட்டு மெதுவாக எழுந்தான்.

வித்யா அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் கணக்கில் ஆழ்ந்தது.

மோகன் மிதந்து வாசலறைக்கு வந்தான்.

ஜன்னல் வழியே ஒரு மஞ்சள் பூ வீட்டிற்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. வானத்து சூரியனை எதிர்பார்த்து இருந்திருக்கும். அசுர மரம் ஒன்று நிழலாய் மண்டியிருக்க, காணாத சூரியனைத் தேடி இந்தப் பக்கம் மலர் திரும்பி விட்டதோ?

மோகன் டெலிஃபோனை அண்டி டயல் செய்தான்.

''ராஜகோபால்? மோகன் பேசறேன். இன்னிக்கு நான் வீட்லே இருக்க மாட்டேன். வெளியே போறேன். நீங்க மூணு பேரும் வேற எங்கியாவது கவனிச்சுக்குங்க...''

பதிலுக்குக் காத்திராமல் ரிஸீவரை வைத்தான்.

இன்றைக்கு மட்டும் இல்லை. இனி என்றைக்கும் இந்த வீட்டில் வேண்டாத கூட்டம் சேரக் கூடாது. தன்னறைக்குள் நுழைந்து டிராயரைத் திறந்தான். பிரவுன் பேப்பர் சுற்றியிருந்த பாட்டிலை அப்படியே எடுத்து ஜன்னல் வழியே வீசினான். கண்ணாடித் தம்ளர்கள் ஒவ்வொன்றாய் வெளியே பறந்தன.

சற்று தெம்பான நடையுடன் படுக்கையறையில் நுழைந்தான். அடுத்த மாதம் இந்த நோட்டுப் புத்தகத்தில் என்ன வார்த்தைகள் இருக்கும்?

'எங்க அப்பா ரொம்ப நல்ல அப்பா! கடவுளே, இந்த அப்பா எனக்கு ரொம்பப் பிடிச்ச அப்பா!'

''அடுத்த தெருவிலிருக்கிற ரமாவுக்கு நீ எழுதிய காதல் கடிதத்திற்கு உடனே பதில் வந்திருக்கிறதா சொன்னியே, என்ன எழுதியிருக்கா?''

''ஒண்ணும் எழுதலே. கராத்தே பயிற்சியிலே அவ கறுப்பு பெல்ட் வாங்கின சர்டிபிகேட்டோட 'ஜெராக்ஸ்' காப்பிதான் அனுப்பியிருக்கா.''

— அருண்குமார்.

மீண்டும் எம்.ஜி.ஆர்



* தனித்தன்மை.



* துடிப்பு.

* பி. கனியமூர்த்தி, தென்பாதி.

? **உங்களுக்குப் பிடித்த ஒரு ஹைகூ கவிதையைக் கூற முடியுமா?**

! முடியுமே! மயிலாடுதுறை, என். செந்தில் குமார் அவர்களின் கேள்வி உங்கள் கேள்விக்குப் பதிலாக அமைகிறதே! 'இந்த மூன்று வரிக் கவிதை பற்றித் தங்கள் கருத்தென்ன?' என்று கேட்டுவிட்டு அவர் எழுதுகிறார்:

சத்துணவு போட்டார்கள்
நிரம்பி விட்டது
வருகைப் பதிவேடுகள்.

ஹைகூ கவிதை ஏகமாகக் கூவுகிறது: சங்கெடுத்து ஊதுகிறது — சபாஷ் பாண்டியா!

* பாலை அசோக், திருச்சி.

? **இந்திரா நினைவு தினம் தேசிய ஒருமைப்பாடு தினமாகக் கருதப்படுவது குறித்து ...?**

! சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டார்களே! இந்திராவின் நினைவு நாள் தேசிய ஒருமைப்பாடு தினம் என்பதை விட, ராஜீவ் பதவி ஏற்ற தினம் தேசிய ஒருமைப்பாடு தினம் என்பதுதான் என் அபிப்பிராயம்.

* எஸ். முல்லை மணாளன், வள்ளியூர்.

? **வள்ளலாரைப் படித்ததில் மனம் நெகிழ்ந்த இடம்?**

! 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!'

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை.

? **சமீபத்தில் யாரை நினைத்துப் பெருமைப் பட்டீர்கள்?**

! நெடுமாறனை. சென்ற தடவை அவர் ஈழத்திற்குப் படகேறிச் செல்ல முற்பட்டுத் தோல்வி அடைந்தபோது நகைத்தவருள் நானும் ஒருவன். இன்று அவரது வீரத்தை, திறமையை, லட்சியஉறுதியைக்கண்டுவியந்து போற்றுகிறேன்—அவரிடமிருந்து சிலஅம்சங்களில் கருத்து மாறுபட்டிருந்த போதிலும் கூட.

* எஸ். வி. ராஜசேகர், சென்னை—17. *

? **ஆங்கிலம் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிமைகள் என்று தேசாய் கூறியிருக்கிறாரே?**

! ஹிந்தியை மட்டுமே பொது மொழியாக ஏற்றுக் கொள்கிற இதர மொழிக் காரர்கள், தங்கள் நாட்டிலேயே ஹிந்தியைத் தாய் மொழியாகக்கொண்டவர்களிடம் அடிமைப் பட்டுப் போவார்களே! இரண்டாந்தரப் பிரஜையாகி விடுவார்களே! சமதர்மம் என்று முழங்கினால் மட்டும் போதுமா? தேசிய ஒருமைப்பாட்டை மதிப்பவர்கள், நாட்டில்உள்ள அனைவருக்கும் சமதர்மமான ஓர் ஏற்பாட்டைக்கருதுகிறவர்கள்; நாட்டில்உள்ளமொழிகள் அனைத்தையுமே தேசிய மொழியாக அறிவித்து விட வேண்டும்! தேசிய மொழி வேறு. ஆட்சி மொழி வேறு. ஆட்சி மொழி என்னும்போது உயர்வு தாழ்வு மனப்பான்மைகளும் அதன் விளைவான மனப்புகைச்சல்களும் தோன்றாதிருக்க வேண்டுமானால் மாநிலங்களில் மாநில மொழி ஆட்சி புரிய வேண்டும். மத்தியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். மாநிலங்களிடையே தொடர்புக்கும்மாநிலங்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் உதவும். சர்வ தேசத் தொடர்பும் எளிதாகிப் போகும். அப்போது இரு மொழித்திட்ட அடிப்படை போதுமானது. மூன்றாவது மொழியாக அவரவரும் விருப்பம்போல் எதை வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். இந்த ஏற்பாடு ஒன்றே சமதர்மம் வழங்குவதாக இருக்க முடியும்.

* நினைவு நாள்.



* நெகிழ்ந்த இடம்.



* அடிமை யார்?



* ஓராண்டு சாதனை.



நடக்கப் போகிறாரா மே?

* செல்வபாரதி, ஈரோடு.

? என். டி. ராமராவ் மீண்டும் நடிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! இப்போது அவர் அரசியலிலேயே நடிக்க ஆரம்பித்து விட்டாரோ என்று சந்தேகப் படும்படியான சூழ்நிலை உருவாகி வருகிறது. இந்த லட்சணத்தில் சினிமா நடிப்பு வேறு எதற்கு?

* எம். ஸி. சவிதா, கே. வி. குப்பம்.

? அலுவலகக் கோப்புகள், அரசியல்வாதி களின் வாக்குறுதிகள் — ஒப்பிடவும்.

! கோப்புகளுக்குக் கணக்கு உண்டு. வாக் குறுதிகளுக்குக் கணக்கு கிடையாது.

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? எங்களை நம்பி எம். ஜி. ஆர். அவரை நம்பி நாங்கள் - என்று நெடுஞ்செழியன் கூறியுள்ளது குறித்து?

! இவர்களை நம்பி மக்கள்! ஹூம்!

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? 24 அமைச்சர்களும் ராஜினாமாக் கடிதங் கள் கொடுத்தது எதைக் காட்டுகிறது?

! 'ஏதோ, இந்த ஒரு விஷயத்திலாவது ஒற் றுமையாகச் செயல்படுகிறோம் பார்த்தீர் களா?' என்று சுட்டிக் காட்டுகிறது.

* ஆர். கே. குருராமன், குடியாத்தம்.

? பதவியேற்ற ஒரு வருடத்தில் ராஜீவின் குறிப்பிடும்படியான சாதனை ஒன்று?

! மக்கள் அவரைப் பதவியில் அமர்த்திய பின்தான் அவர் உண்மையாகப் பதவி ஏற்ற தாகக் கருத முடியும். அதற்குப் பின் ஓராண்டு கணக்கிடுவதானால் இன்னும் ஆறு வாரங்கள் பாக்கி. நிற்க... குறிப்பிடும்படியாக் சாதனை ஒன்றல்ல; பல. அனைத்திலும் முக்கியமானது, அவர் நம்பிக்கை அளிப்பவராக விளங்கு வதுதான்.

* டி. ஆர். சந்திரசேகரன், சென்னை.

? எம். ஜி. ஆர்.தான் முதல்வராக இருக்க வேண்டும் என்பதற்காகத் தற்கொலை முயற்சி யில் கூட இறங்கும் அப்பாவி மக்களைப் பற்றி...?

! இத்தகைய அறியாமையின் அஸ்திவாரத் தின் மீதுதானே நமது அரசியல்வாதிகளின் சிம்மாசனங்கள் போடப்பட்டிருக்கின்றன!

* எம்.அசோக்ராஜா.அரவக்குறிச்சிப்பட்டி

? மாருதியின் சித்திரங்கள் பற்றி...?

! பத்திரிகை ஆசிரியர்களின் விருப்பத் துக்கு ஏற்ப அழகாகவோ ஆபாசமாகவோ படமெழுத அவரும் கற்றுக் கொண்டுதா னிருக்கிறார் என்றாலும் அவருக்கென்றுஉள்ள தனித்தன்மைகள் அவரை உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளன. ஆண்மையின் கம்பீரத்தை யும் பெண்மையின் எழில் பரிமாணங்களை யும் கன கச்சிதமாக அமைக்கும் திறன் மட்டு மின்றி முக பாவங்களைச் சரியான முறையில் வெளிப்படுத்தும் ஆற்றலில் அவருக்கு நிகர் அவரே!

* அன்புதாசன், கவுந்தப்பாடி.

? தமிழக அரசின் எந்தப் பணி இப்போது சிறப்பாக நடந்து வருகிறது?

! அவரவரும் ஈடுபட்டுள்ள தன்னிறைவுத் திட்டப் பணி.

* கே. ஜெயகுமார், வேலாயுதம்பாளையம்.

? உங்களைக் கட்டிக் கொண்டு என்ன சுகத் தைக் கண்டேன் என்று புலம்பும் மனைவி பற்றி.

! இப்படி ஒரு மனைவி புலம்புவாளானால் கணவன் அவளிடம் போதிய அளவு அன்பும் பரிவும் காட்டவில்லை என்பதே பொருள். ஏனெனில் சுகம் என்பது லோகாயதமான இன்பங்களில் மட்டுமில்லை. சின்னச் சின்ன சந்தோஷங்களையும் கஷ்டங்களையும் வேதனை களையும் மனம் விட்டுப் பேசிப் பகிர்ந்து கொள்வதில் கூட இருக்கிறது. கேவலம் இந்த சுகத்தைக் கூடத் தராத கணவனிடம் மனைவி இப்படி அலுத்துச் சலித்துக் கொள் வதில் வியப்பில்லை.

* ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? இந்துக்களின் தாயகத்திலேயே ராமர் பிறந்த ஜென்ம பூமியில் அவரை வழிபட முடியவில்லையே, இதுதானா மத சுதந்திரம்?

! ஈசுவர அல்லா தேரே நாம்
ஸப்கோ ஸன்மதி தே பகவான்!

— மக்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் காந் திஜியின் இந்தப் பிரார்த்தனை கீதத்தை நினை வூட்டுவதைவிடப் பெரிதாக நாம் என்ன கூறி விட முடியும்? நமது நடவடிக்கைகள் எல்லாம் பல்வேறு மதத்தினரிடையே ஒற்று மையை வளர்க்க உதவுவதாக இருக்க வேண் டுமேயன்றி, உரசலை வளர்ப்பதாக இருக்கக் கூடாது. பின்னதற்கு யாருக்குமே சுதந்திரம் இடையாது.

நீங்கள் கேட்டவை — தராசு

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
எஸ். வி. ராஜசேகர்,
27, கோபால் தெரு,
சென்னை—17.

சந்திர கிரஹணம், சனிப் பெயர்ச்சி இவற்றைத் தொடர்ந்து வரும் இந்தத் தீபாவளியில், சில டைரக்டர் கிரகங்களும், நடிக நட்சத்திரங்களும் திரை வானில் எந்த மாதிரியான ஆளுகைக்கு உட்படுகிறார்கள் என்பதையும், அவர்களின் ஜாதக பாதக ராசி பலன்கள் எப்படி அமையக் கூடும் என்பதையும் ஜெக ஜோஸியர் ஜெயமன்மதன் ஆராய்ந்த போது...

இளமையான காதல் கிளுகிளுவில் ஆரம்பித்து, இறுதிக் கட்டங்களை இறுக்கி முடிவது நல்ல ஐடியாதான். ஆனால் இரண்டுங்கெட்டான காட்சி அமைப்புகளால் படத்தை முன்னால் ஒரு இன்ஜின், பின்னால் ஒரு இன்ஜின் வைத்துத் தள்ள வேண்டியிருக்கிறது. சுஜாதாவுக்காகவே தேர்ந்தெடுத்த கதை. கடனைக் காரணம் வைத்து கழுத்தில் தாலியைக் கட்டியவன், கட்டில் சுகத்திற்கு மட்டும் அவன் தங்கையையும் துணைக்குக் கூப்பிட, பொங்கி எழுந்து வெளியேறிப் புதுமைப் பெண்ணாய முன்னுக்கு வந்து எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா தன்னால் முடிக்க முடியாத டாக்டர் படிப்பைத் தன் மகள் முடித்தே ஆக வேண்டும் என்று ஏதோ கொள்கையை வேறு தலையில் திணித்து இன்னும் இக்கட்டாக்கி விட்டார்கள், பாவம்.

வெ. ஆ. மூர்த்தி, மனோரமா இருக்கிறார்களோ — அவ்வப்போது நமக்குச் சிரிக்கத் தெரியுமென்பதுமறக்காமல்இருக்கிறோமோ!

அனிதா — சுரேஷ் இளம் ஜோடி. சொடுக்குப் போட்டால் பார்க்கில் நின்று விதம் விதமாய்ச் சோம்பல் முறித்து — (டான்ஸ் மூவ்மெண்ட்ஸாம்!) டூயட் பாடுகிறார்கள். அனிதாவின் முகத்தில் (காதல் காட்சிகளில் கூட) ஏதோ பின்னங்கழுத்தில் எறும்பு கடிப்பது போல் எப்போதும் ஒரு வேதனை. கொஞ்சம் எக்ஸ்பிரஷன் காட்டக் கூடாதுங்களா, மேடம்?

படம் ஆரம்பித்து லேட்டாய்ப் போகிறவர்களுக்காகவே — அரை மணிக்கொரு தரம் முன் கதைச் சுருக்கம் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள் — கடைசிக் கடைசி க்ளைமாக்ஸ் வரை.

க்ளைமாக்ஸ் என்றதும்... ஹா அக்கு... அக்கு... அக்கு... அத்தனை நெடி. பிரச்சாரமென்றால்பிரசாரம்அப்படியொருபிரசாரம். சுஜாதாவின் 'புரட்சி' முடிவைமக்கள் புரிந்து கொள்ளாமல் போய் விடுவார்களோ என்று டைரக்டருக்கு அத்தனை பயம்!

ராசி பலன் :

(சுஜாதாவின் திறமை கால் பாதம், வி. வி. ராஜேந்திரனின் பஞ்சாங்கப் பாதம் இவைகளை வைத்து மந்தமான மேஷ ஜாதியில் சேர்க்கலாம்.) ஜன்ம ராசியில் நல்ல வலுவான கதையிருந்தாலும், ஓலைச்சுவடி காலத்து வசனங்களின் ஆதிக்கத்தாலும், விஷுவல் மீடியத்திற்குரேடியோபாணிகாட்சிஅமைத்த டைரக்டரின் பார்வையாலும், படம் பார்ப்பவர்களுக்கு அவ்வப்போது அசௌகரியம் உண்டாகும். சிலருக்குக் குறைந்த அளவில் வைத்திய செலவும் ஆகலாம். படம் முடிந்து கொஞ்ச நேரத்திற்குத் தனிமையில் இல்லாமலிருப்பது நலம்.

பெருமை







சிந்துபைரவி

டைரெக்டர்ஸ் என்று வரும்போது, பாலசந்தர் ஒரு அட்சய பாத்திரம். அடேங்கப்பா, தம்பூரா வாசிப்பவனிலிருந்து ஜட்ஜ் வீட்டு டிரைவர் வரை எத்தனை செதுக்கல்கள், நறுவிசான வார்ப்புகள்!

ஜேஸுதாஸின் கணீர்க் குரலோடு படம் ஆரம்பிக்கும் போதே, நம் நரம்புகளில் ஒரு சுருதி சேர்ந்து விடுகிறது. வான் நோக்கி விரல் நீட்டும் பாறைகள், அதில் மோதி டிஸைன் கிளப்பும் சமுத்திர அலைகள், அற்புதமான கண்ணில் நிற்கும் வித்தியாச லொகேஷன்கள். இந்த சுந்தரமான பின்னணியில் அடர்த்தியாய் எத்தனை கதைப் பின்னல்கள்! அத்தனையையும் ஒன்றோடு ஒன்று சிக்கலில்லாமல் இழை சேர்த்து விண்ணென்று படத்தை அமைத்திருப்பது இந்த அபூர்வ டைரக்டரின் ஸ்பெஷல் டச். இளையராஜா — ஜேஸுதாஸ் ப்ளஸ் பாயிண்ட்ஸ். கதை என்னவோ இன்றைக்கு சினிமாவில் இடறினால் தடுக்கும் 'சின்ன வீடு செட்டப்' செய்யும் வித்தியாச ஆண் பற்றியதுதான்.

நேர்த்தியான காட்சிகள் என்று பட்டியல் போட ஆரம்பித்தால் எண்ணிக்கை விட்டுப் போகும். 'லதா மங்கேஷ்கரா உங்களுக்குப் பருப்புப் பொடி அரைச்சுத் தருவா?' என்று உரிமையோடு முனகும் கலக்ஷுஷாவிற்கு புருஷனை விரலிடுக்கில் வைத்திருக்க ஆசை. 'உன்னிசையும் கீதமும்தான் என் ஒரே ஈடுபாடு' என்று முதலில் திமிறிவிட்டு அப்புறம் அந்த இசையின் உற்பத்தியாளனிடமே தன் ஈடுபாடு என்று அதிர்வுகளோடு உணர்ந்து 'ஹிப்போக்ரஸி'களை உதறி எறிந்து சகலமும் சமர்ப்பிக்கும் சுஹாஸினியின் நேர்மை. தாலி கட்டிய மனைவியை விட ஒரு கிராம் கூடுதலாகவே அடுத்தவளிடம் அன்பை வைத்துவிட்டு, அவசியம் காரணமாய் அவள் விலகும் நேரம் நீர் துறந்த மீனாய்த் தவிக்கும் சிவகுமார்.

சூடான சிக்கல்கள். இடைவேளை வரை கவிதையாய்ப் போகும் படம் சிவகுமார் பாட்டிலைத் தூக்கியதும், தானும் கொஞ்சம் ஆடுகிறது. கலக்ஷுஷா வந்து கூப்பிடும் வரை சிவகுமாரைத் திருத்தும் மும்முரமில்லாமல் சுஹாசினி ஒய்ந்திருப்பது ஒட்டையாயில்லை? பரவாயில்லை, சாதத்தில் அவ்வப்போது கல் இடறினால்தான் சுவாரஸ்யம்.

இரண்டு மெஸேஜ்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று தமிழிசையின் முக்கியத்துவம். இன்றைக்கும் சொல்ல அவசியமிருக்கிறது. இரண்டு, மதுவின் ஆதிக்கத்தை அனுமதித்துவிட்டால், அது மனிதனை எத்தனை இழிநிலைக்குக் கொண்டு போகிறது என்பது. இதுவும் சொல்லப்பட வேண்டியதுதான், இன்றைய சூழ்நிலையில், அதுவும் கலைத் துறையினருக்கு நிறையவே சொல்ல வேண்டும். **ஆனால் உபதேசம் பெற்றது** போன்று தோன்றாமல் படம் இன்னும் மனத்தில் ரீங்கரித்துக் கொண்டிருக்கிறதே, அதுவே உங்கள் வெற்றி.

ராசி பலன்:

(சுஹாசினி, கலக்ஷுஷா, சிவகுமார் என்ற விசேஷ நட்சத்திரச் சேர்க்கையைப் பார்க்கும் போது சுறுசுறுப்பான தனுர் ராசியில் சேர்க்கலாம்.)

ஜன்மராசியில் நல்ல கதை. அதை தி. ஜானகிராமனுடைய உறை உருவிய வீணை உவமானங்களோடு (பாலகுமாரன் கைங்கரியம்?) எடுத்துக் கையாண்டிருப்பதாலும், நறுக் நறுக் என்று வசனங்களைக் கொடுத்திருக்கும் டைரக்டர் திறமையாலும் படம் பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும். ஆனால் இந்த டைரக்டருக்கு எப்போதுமே கிராம தோஷம் சூழ்ந்திருப்பதால், பெரிய, நடுத்தர, நகரங்களைப் பொறுத்தவரை மட்டிலுமே இந்தப் பலன் செல்லுபடியாகும்.

—ஜெயமன் மதன்.



ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர், சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

தகழிக்கு, அவரது ஜாதகத்தின்படி 29.7.85 அன்றிலிருந்து பெரும் அதிர்ஷ்டம் வரும் என்றிருந்ததாம். அதன்படி சரியாக அந்த நாளன்றே ஞானபீட அவார்டு கிடைத்திருக்கும் செய்தி வந்ததாம். அவரே சொன்னார்! ஐம்பது ஆண்டுக்கும் மேலான எழுத்து வாழ்க்கையில் 500 சிறுகதைகள், 85 நாவல்களை எழுதியிருக்கிறார்.

ஞானபீடம் விருது கிடைக்கக் காரணமாக அமைந்த 'கயறு' நாவல் 200 ஆண்டுக் காலத்தில் ஆறு தலைமுறை பற்றியது. 1028 பக்கமுள்ள நாவலில் ஆயிரம் கதா பாத்திரங்கள்.

ஞானபீட அவார்டு கிடைத்த செய்தி கேட்டதும், ''இந்தச் செய்தியில் சுகமுண்டு... ஞானபீட விருது, பத்மபூஷன் மாதிரி விருது மாத்திரம் இல்லை... வெகுமதியும் உண்டு... இல்லையா காத்தே'' என்று மனைவியை அணைத்துக் கொண்டு சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் 'காத்தே' என்றழைப்பது, மனைவி கார்த்திகேயாயினியைத் தான்.

''நான் ஜூனியராக இருந்த வழக்கறிஞரிடம், சொத்து பற்றிய வழக்கு ஒன்று ரொம்ப காலமாக முடிவு பெறாமலேயே இருந்தது... வழக்கு பற்றிய சில விவரங்களைத் தேடிய போது, அன்றிலிருந்து 150 வருஷங்களுக்கு முன்னிருந்த விவரங்கள் தெரிய வந்தன... அதிலிருந்து குறிப்புகள் எடுத்த போது, அந்தந்தத் தலைமுறைகளில் வாழ்ந்தது போன்ற உணர்வு தட்டியது. அந்த உணர்வுகளின் தொகுப்பே 'கயறு' ஆனது...'' என்கிறார்.

தகழி அவர்களைச் சந்திக்கச் சென்ற போது, ஈஸிச் சேரின் நீண்ட கைகளில் கால்களைப் போட்டுக் கொண்டு, மேலே சட்டை பனியன் ஏதும் போட்டுக் கொள்ளாமல் சாய்ந்து அமர்ந்திருந்தார்.

பக்கத்தில் ஒரு ஸ்டூல். அதில் பீடிக் கட்டு... வெற்றிலைப் பாக்கு.

''நீங்கள் ''தொடாத கரு'' ஏதாவது உண்டா?''

''55 ஆண்டுகளாக எழுத்து வேள்வி நடத்திக் கொண்டிருக்கும் தகழி கூறுகிறார்: ''இருக்கிறதே... காதல் கதை என்று இது வரை நான் எழுதவில்லை...''

''செம்மீன் நாவல் காதல் கதைதானே..?''

''இந்தச் செய்தியில் சுகமுண்டு...''

—'தகழி' சிவசங்கரப் பிள்ளை



ஸ்பாட் லைட்



ஐம்பது சதவீதம் தள்ளுபடி செய்து விற்கப்படும் கைத்தறித் துணிகளெல்லாம் பழைய—பழுதடைந்த துணிகள் தான். ஆனால் அப்படிப்பட்ட துணிகளை வாங்கித்தான் ஆக வேண்டுமென்று நாங்கள் வாடிக்கையாளர்களை நிர்ப்பந்தம் செய்யவில்லை.

— கைத்தறித் துறை அமைச்சர்
வி. வி. சாமிநாதன்.

கனடாவின் 'கிளீவ்லேண்ட்' நகரில் நிறுத்தக் கூடாத இடத்தில் தன் காரை நிறுத்தியதற்காக அந்த மாநில கவர்னருக்கே அபராதம் விதித்துள்ளனர்.

— சபாநாயகர் பி. ஹெச். பாண்டியன்.

ராஜீவ் காந்தி காலத்திலேயே தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி வர வேண்டும். அந்தப் பொறுப்பை அண்ணன் சிவாஜி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

— தளபதி சண்முகம்.

அ. இ. அ. தி. மு. க. ஆட்சியைக் கவிழ்த்து முதலமைச்சராக மூப்பனார் விரும்புகிறார். இந்தச் சதியின் பின்னணியில் அருண் நேருவும் இருக்கிறார். தமிழக கவர்னர் குரானாவுக்கும் இதில் பங்கு உண்டு.

— அமைச்சர் சுப்புலெட்சுமி... அமைச்சர் அரிமுத்து.

''செம்மீன் காதல்கதை என்று நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். காதல் கதை எழுத பல முறை முயன்றேன். ஆனால் எழுதமுடியவில்லை. எனது குரு கேசரி பாலகிருஷ்ண பிள்ளை, 'நீ நாற்பது வயதுக்கு மேல் காதல் கதை எழுது என்றார்'. இனிமேல்தான் எழுதத் தொடங்கப்போகிறேன். இன்றையக் காதலை, அதன் பின்னணியில் இருக்கும் சோகத்தை எழுதப் போகிறேன்.

"இளைய தலைமுறை எழுத்தாளர்கள் தங்களின் மதிப்பீட்டில் எங்கே இருக்கிறார்கள்.."

''இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களின் போக்கு மன வருத்தத்தைத் தருகிறது. நகரத்தில் வீடு கட்டிக் கொண்டு சுகமாக வாழ்ந்தால் போதும், என்பதற்காக எழுதுகிறார்கள். அவர்கள் பிறந்த ஊரை அந்த மண்ணை மறந்துவிடுகிறார்கள். அந்த மண்தான் அவர்களுக்கு கற்பனைச் சிறகை பரிசாக அளித்தது. வார்த்தைகளுள் ஜீவனை விதைக்கும் அற்புதத்தைக் கொடுத்தது. அந்த மண்ணை.... அந்த வாசத்தை மறப்பதுதான் இன்றைய நடப்பு. வேரை அறுத்துக் கொண்டவர்களின் எழுத்தும், அழுத்தம் இல்லாமல் இருப்பதில் ஆச்சரியமென்ன....?''

பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் தகழி இருந்தாலும் சாதாரணமானவர்களைப் பற்றிதான் எழுதுகிறார்.

''சாதாரணமானவர்களைப் பற்றி எழுத மட்டுமே எனக்குத் தெரியும். பங்களா.... பங்களா வாழ்க்கை எழுதச் சொன்னால்.... உண்மையாகச் சொல்லுகிறேன்.... நான் தோற்றுப் போவேன். இதற்கு, நான் பங்களாவைப் பார்த்ததில்லை.... பங்களா வாழ்க்கை பரிச்சயமானதில்லை என்று அர்த்தம் இல்லை. ஆனால் மேல் தட்டு விஷயங்களை எழுத எனது பேனா, மௌனம் சாதிக்கிறது. ஏழைகளின் கனவுகளில் மட்டுமே வரும் பங்களா போன்ற சங்கதிகளை எனது எழுத்துக்களில் உலாவ விடுவதைத் தடை செய்திருக்கிறேன்.''

தகழி, ஆரம்ப காலத்தில் கம்யூனிச சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டிருந்தார். மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் எம்.எல்.ஏ. வாக தேர்தலில் ஒருமுறை நின்று தோற்றுப் போயிருக்கிறார்.

பண்ணையார் வீட்டில் எடுபிடி வேலை பார்ப்பவன் குஞ்சப்பன். பண்ணையாருக்கு ஒரு மகன் உண்டு.. குஞ்சப்பனுக்கு ஒரு ஆசை. சின்ன பண்ணையாரைத் தொட்டுத் தூக்கி முத்தம் கொடுத்து ஆனந்திக்க வேண்டுமென்று. ஒருநாள், அறையில் பையன் படுத்துக் கிடக்கிறான். குஞ்சப்பன் அக்கம் பக்கம் பார்க்கிறான். யாரும் இல்லை. மெல்ல மெல்ல முன்னேறி, அறைக்குள் நுழைந்து, குழந்தையைத் தூக்கி வாஞ்சையுடன் முத்தம் கொடுக்கக்குனிகிறான். குழந்தையின் கன்னத்திற்கும், குஞ்சப்பனின் உதடுகளுக்கும் மயிரிழை தூரம்தான். அப்போது, "ஏய்.... என்னடா செய்கிறாய்....?'' என்ற சத்தம் கேட்க, பயந்து நடுங்கி, குழந்தையைக் கிடத்தி

விட்டு, ஓடிப் போகிறான். வேலைக்காரன், பண்ணை வாரிசைத் தொடலாமா?

தகழியின், ''ரெண்டிடங்கழி' நாவலின் கருதான் இது. அந்தச் சின்னப் பண்ணை வேறு யாருமல்ல, தகழிதான். இந்த சம்பவத்தை நாவலாக எழுதினார் தகழி. நாவலைக் குஞ்சப்பனுக்கே சமர்ப்பணமும் செய்துள்ளார்.

தகழி பண விஷயத்தில் கொஞ்சம் 'கெட்டி' யாம். சாகித்திய அகாடமி அவார்டு கிடைத்த போது தரப்பட்ட செக்கை, சட்டையின் உள் பாக்கெட்டில் வைத்துப் 'பின்' வைத்து குத்திக் கொண்டார் என்று வேடிக்கையாகச் சொல்லப்படுவதுண்டு. சக இலக்கிய நண்பர்கள், இது பற்றியெல்லாம் கேலி செய்தாலும், தகழி அதை எல்லாம் கண்டு கொள்வதில்லை.

பொதுவாக எல்லா ஆண்களும், புகழ்... விருது கிடைக்கும்போது, இதற்குப் பின்னால் இருப்பவர் ''எனது மனைவி'' என்று சொல்வார்கள். தகழியும் அப்படியே. 'எனது வளர்ச்சி, புகழுக்குக் காரணம் எனது 'காத்தே' தான்....

தகழிக்கு 74 வயதாகிறது. ''இன்னும் மூன்று நாவல்களுக்குக் கரு வைத்திருக்கிறேன்'' என்கிறார்.

—''பிஸ்மி.''

படம்: மலையாள மனோரமா.

மௌனப் புயல்

வாசகர் கருத்து



• வாஸந்தியின் 'மௌனப்புயல்' உண்மையிலேயே அவருடைய 'Masterpiece.' உதாரணமாக: ''நான்கு வருஷங்களாக இங்கு இருக்கும் புயலுக்குப் பின்னால் எத்தனை வருஷத்து மௌனக் கோபம் இருந்ததோ, யார் கவனித்தார்களோ?''

எஸ். ஆர். சுவாமிநாதன்.
ஸ்ரீரங்கம்.

• பஞ்சாப் பிரச்னையின் பின்னணியில் இப்படி ஒரு பரிசுக்குரிய நாவல் வழங்கிய வாஸந்திக்குப் பாராட்டுகள்! ஓவியர் அரஸுக்கும்தான்!

எம். ரமேஷ் குமார்.
போடிநாயக்கனூர்.

• மௌனப்புயல் வட இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று உரியவர்களிடையே உலா வர முடிந்தால், ரஞ்சனி, மன்மோஹன் ஆகியோரின் இயக்கத்திற்கு வலுச் சேரும்.

கண்ணன்.
தஞ்சாவூர்.

• நமது கண்முன்னே நடைபெற்ற வரலாற்று சம்பவத்தை தீர்க்க தரிசனத்துடன் அலசி ஆராய்ந்து, ஓர் அசாதாரணமான சாதனையை திரும்பி. வாஸந்தி புரிந்து விட்டார்.

எஸ். சையது முகமது.
போடிநாயக்கனூர்.

• ஓராண்டுக்கு முன்பு நடந்த ஓர் உருக்கமான சம்பவத்தையும் அதனையொட்டிய பயங்கரத்தையும் பின்னணியாகக் கொண்டு கதாசிரியை வாஸந்தி தந்த 'மௌனப்புயல்' என்னை வெகுவாகப் பாதித்து விட்டது. மிகத் தத்ரூபமாக இத்தொடருக்கு ஓவியம் வரைந்த அரஸும் பாராட்டுக்குரியவர்.

இப்ராஹிம்.
குளச்சல்.

• டில்லியில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியின் நடுவிலும் நின்று நாமே திகைத்துத் துடிக்கது போன்ற உணர்வை ஏற்படுத்திவிட்ட வாஸந்திக்கு எமது பாராட்டுக்கள்.

எஸ். பிரபா.
காரைக்குடி.

• மன்மோஹன் — ரஞ்சனி சீக்கிரம் இணைய வேண்டுமென்று — பஞ்சாபிலே கொலைகளைப் பற்றிய செய்தியே இல்லாமல் போக வேண்டுமென்று — இறைவனைப் பிரார்த்திப்போம்.

கோமதி புத்திரன்.
திருநெல்வேலி.





ராயப்பா சொன்னதும் தவறுதான்!

* 'அப்பனுக்குச் சாராயம், பிள்ளைக்குப் பிச்சை' என்பதே சரி என்ற ராயப்பாவின் கூற்றுக் கூடத் தவறுதான். என் கருத்துப்படி 'அப்பனிடம் வழிப்பறி, பிள்ளைக்குப் பிச்சை' என்பதே சரி. புரட்சித் தலைவரின் புரட்சிப் பிடியில் இந்தத் தமிழகத்தில் பொருளாதாரம் இன்னும் என்ன பாடுபடுமோ!

சென்னை — 18. இங்லியார்.

மனிதாபிமானம் மடிந்துவிட்டது!

* போபால் விஷவாயு சம்பவத்தில் — கடமை தவறிய டாக்டர்களை நினைக்கும் பொழுது மனிதனைக் கொல்வதற்கு அல்லது மனித இனத்தை அழிப்பதற்கு இயற்கை மட்டுமல்ல, மனிதனும் சேர்ந்துதான் சதி செய்கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது.

லால்குடி. ஆர். சுந்தர்.

* தங்கள் 3.11.85 தேதியிட்ட கல்கி இதழ் மொத்தத்தில் A. 1. போபால் விஷ வாயு மர்மங்கள், 'அப்பனுக்குச் சாராயம்; பிள்ளைக்குப் பிச்சை' என்று முடிந்த ராயப்பாவின் கட்டுரைத் தொகுப்பு இரண்டுமே ஆழ்ந்த சிந்தனை உணர்வைத் தூண்டுவனவாக இருந்தன.

காரைக்குடி. சங்கரன்.

அசந்து விட்டேன்!

* கல்கி 3.11.85 இதழின் அட்டையைப் பார்த்ததும், ஃபோட்டோவோ என்று நினைத்துவிட்டேன். அப்படி ஒரு அட்டகாசமான ஃபோட்டோ, ஸாரி, ஓவியம். வெல்டன் மாருதி சார்!

தர்மபுரி — 2. வித்யா.

மாறுபட்ட சிறுகதை!

* பிரபஞ்சனின் பிணைப்பு — முற்றிலும் மாறுபட்ட, அருமையான சிறுகதை. நீலகாருண்யத்திற்கு விளக்கம் அளித்த நாயக்கரின் பாத்திரம் அருமை.

தோட்டக்குறிச்சி. ஆர். வலையாபதி.

* 'இனிமேல் இருட்டுதான்' சிறுகதை படித்தேன். தேவிபாலாவின் வார்த்தைப் பிரயோகம் அசத்தி விட்டது. அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுதல்கள்.

திருச்சி. தமிழினியன்.

கண்டிக்கிறேன்!

* பதினெட்டு கேள்விகளில் பதிமூன்று கேள்விகள் அரசியல் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. தராசின் இந்த அரசியல் மோகத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பழனி. ஆர். ஜி. சிவகுமார்.

இது நியாயமில்லை!

* ஏன் ஸார்? தவறான செய்திக்கு எங்கள் பக்கத்தில் தானா வருத்தம் தெரிவிக்க வேண்டும்? அநியாயமாக இரண்டு வாசகர்களின் கடிதங்களில் கைவைத்து விட்டீரே!

குடியாத்தம். இரா. கி. பட்டாபிராமன்.

புண்பட்ட ஏடு!

* 'காளிமுத்து ராஜினாமா செய்யட்டும்' என்ற தலையங்கம் மிக மிக அருமை. இதுவரை எந்த பத்திரிகையும் இவ்வளவு துணிச்சலுடன் எழுதவில்லை.

சென்னை — 5 எஸ். வி. ராஜசேகர்.

* அமைச்சர் காளிமுத்து பற்றிய தலையங்கம் ஒவ்வொரு வரியும் அருமை! என்றைக்குமே கட்சிசாரா நடுநிலைமையிலிருந்து வழுவாத பண்பட்ட ஏடு கல்கி என்பதற்கு இந்தத் தலையங்கம் ஓர் மைல் கல்.

சென்னை — 45. ஜெயந்தி தியாகராஜன்.

* என்னிடம் படித்த ஒரு பையனின் தந்தை, அவர் பையனை M. B. B. S. ல் சேர்க்க ஆசைப்பட்டு ஒரு எம். எல். ஏ. விடம் சிபாரிசு கேட்க, அந்த எம். எல். ஏ., வாய் கூசாமல் லஞ்சம் கேட்கவே, சாதாரண ஏழைக்கான பையனின் தந்தை தன் இரத்தத்துளிகளை வியர்வைத் துளிகளாகச் சிந்தி ரூ. ஐம்பதினாயிரத்தை எம். எல். ஏ. விடம் கொடுத்திருக்கிறார். ஆனால் எம். எல். ஏ. வாங்கித் தருவதாகக் கூறிய M. B. B. S. சீட்டை இது வரை வாங்கிக் கொடுக்கவில்லை. பையனின் தந்தையோ சூன்யத்தை வெறித்துக் கொண்டிருக்கிறார். நியாயத்தைப் பற்றி மேடையில் வாய் கிழியப் பேசும் இவர்கள் தங்களைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல் இருப்பது ஏனோ?

தருமபுரி. ஜி. தாமரைச் செல்வி.

கல்வியா இது? கண்துவி!

* ஆண்டுதோறும் ஜூன் ஜூலை மாதங்களில் குழந்தைகளைத் தொழுநோய் தொற்றியுள்ளதா என்று ஆய்வு நடத்த, எனக்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் செல்வேன். அப்படிப் போகும் போது ஐந்து வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ள ஆரம்பப் பள்ளிகளை நிறையக் காண்கிறேன். இன்னும் சில ஆரம்பப் பள்ளிகளில் போனால் போகட்டும் என்பது போல் இருவர் நியமனமாகியிருப்பார்கள். ஆனால், அவர்களில் ஒருவர் விடுப்பில் போயிருப்பார்! இதர இடங்கள் நிரப்பப் படாமலே உள்ளன. இத்தகைய பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு வரும் மாணவன் வேறு பள்ளியில் ஆறும் வகுப்பில் சேரும் போது பாவம், அவனால் என்ன புரிந்து கொள்ள முடியும்? இவ்வாறு அடிப்படை அம்சங்களில் கவனம் செலுத்தாமல் கல்வி முறையையோ, பாடத் திட்டத்தையோ மாற்றித்தான் என்ன பயன்? கல்வியின் தரம் உயர வேண்டும் என்றால் எப்படி சாத்தியமாகும்? அனைவருக்கும் கல்வி என்ற சாசனக் குறிக்கோள்தான் என்று எப்படி நிறைவேறும்?

D. கடலூர். க. சேகர்.

* இந்த வருடம் எட்டாவது படிக்கும் என் தம்பிக்குப் பாடப் புத்தகங்கள் எல்லாம் வாங்கித் தந்து விட்டேன். பள்ளி திறந்து ஐந்து மாதங்களான பிறகு இன்று அரசு இலவசமாய்ப் பாடப் புத்தகங்கள் தந்தது என்று கூறி எடுத்து வந்தான்! செய்கிற நல்ல காரியத்தைக் காலத்தோடு செய்யக் கூடாதா? இப்படிக் காலங்கடந்து தரும் போது புத்தகங்களுக்குப் பதில் நோட்டுப் புத்தகங்கள் தந்தாலும் பயனுகுமே?

தனி. வி. பு. அரசு.

(இவ்விரு கடிதங்களும் பரிசு பெறுகின்றன.)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: R. S. Mani Editor: K. Rajendran



- **அதிக பளபளப்பு**—பெஸ்டோவின் விசேஷ ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.
- **அதிக மென்மை**—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.
- **அதிக வெண்மை**—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து கிடைக்கும்.

பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு
ரூ. 7. 65 மட்டுமே!


* உள்ளூர் வரிகள் தனி



கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளு டிடர்ஜெண்ட் பவுடர்


உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்

CHAITRA-B-G-276 TAM N



In the lush environment of the Atul township, in Gujarat's Valsad District, is one of the largest industrial complexes of its kind in India — Atul Products and its associate companies.

Output of Atul Products' basic chemicals, dyestuffs, intermediates, pesticides and pharmaceuticals has grown to approximately 80,000 tonnes in 1984.



The best technical and managerial talents contribute to a stimulating corporate environment which promotes growth... a full realisation of potential.

THE ATUL® PRODUCTS LTD.

Atul 396020, Gujarat, India
Phone: ATUL 61 to 65
Telex: 0173-232 ATUL IN
Telegram: TULA, ATUL

Interpub/APL/12/85